1574
15-3-09

வெளியீடு: 17-9-2008 Issued: 17-9-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மே 9, 2008—தொகுதி 54—எண் 1**

**Friday, the 9th May 2008—Volume 54—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

V2;1,31'908
N08.54.1
228390

**[Price Rs. 3.00**

9—5—2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 1 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-37 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| அரசு உறுதிமொழிக் குழு | 37-38 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| *(அ)* வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, *2008* | 38 |
| *(ஆ)* தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, *2008* | 39 |
| *(இ)* தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2008* | 39-40 |
| *(ஈ)* சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, *2008* | 40-41 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *(அ) கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)*<br>*(ஆ) கோரிக்கை எண் 23—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)*<br>*(இ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)* | 41-198 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 42, 69, 94<br>113-114, 169 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 114-123 |
| திரு. தா. உதயசூரியன் | 124-133 |
| திருமதி டி. யசோதா | 133-142,<br>167-168 |
| திரு. ஜி.கே. மணி | 68-69,75,100,<br>142-157,169 |
| செல்வி கே. பாலபாரதி | 65, 104,<br>157-165 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 48, 90-91, 101,<br>170-178 |
| திரு. வீர. இளவரசன் | 68, 93-94,<br>113,178-183 |
| திரு. கு. செல்வம் | 53, 79-80,<br>183-187 |
| திரு. மு. ஜெகன்மூர்த்தி | 187-189 |
| திரு. கரி. இராமசாமி | 190-192 |
| * திரு. வி.பி. கலைராஜன் | 192-198 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 198-200 |


## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **1. முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**<br>பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள், சிறப்பு முயற்சிகள் மற்றும் சமூக சீர்திருத்தம் |
| **2. நிதி அமைச்சர்** | .. | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**<br>நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள் |
| **3. மின்சாரத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**<br>மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் |

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கட ன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228390
சென்னை-600 008
நூலகம்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

| | | |
|---|---|---|
| 14. செய்தித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 15. உணவுத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. எ.வ. வேலு: உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு |
| 16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்: குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு |
| 17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் |
| 18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு |



| | | |
|---|---|---|
| 19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: இந்து சமய மற்றும் அறநிலையங்கள் |
| 20. கைத்தறித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: கைத்தறி மற்றும் துணித் தொழில் |
| 21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல் |
| 22. வணிக வரித் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: வணிக வரிகள் |
| 23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு) |
| 24. வனத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: வனங்கள் மற்றும் சின்கோனா |
| 25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | .. | மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் |

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, சமூக சீர்திருத்தம், ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** – **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports, Special Initiatives and Social Reforms

2. **Minister for Finance** – **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** – **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** – **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** – **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | - | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development |
| 7. **Minister for Public Works and Law** | - | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts |
| 8. **Minister for Higher Education** | - | **The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals |
| 9. **Minister for Transport** | - | **The Hon. Thiru K.N. Nehru:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 10. **Minister for Health** | - | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Health, Medical Education and Family Welfare |
| 11. **Minister for Rural Industries** | - | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Rural Industries including Cottage Industries and Small Industries |



| | | |
|---|---|---|
| 12. **Minister for Revenue and Housing** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development |
| 13. **Minister for Tourism and Registration** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act |
| 14. **Minister for Information** | .. | **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:** Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 15. **Minister for Food** | .. | **The Hon. Thiru E.V. Velu:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 16. **Minister for Slum Clearance and Accommodation Control** | .. | **The Hon. Thiru Suba. Thangavelan:** Slum Clearance Board and Accommodation Control |
| 17. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees |

**18. Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

**19. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

**20. Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

**21. Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**23. Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**24. Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



**25. Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

**26. Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

**27. Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

**28. Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**29. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

**30. Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

**31. Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு,<br>எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின்<br>சிறப்பு தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி,<br>எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன்,<br>பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி.,<br>பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி.,<br>எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ.,<br>பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா,<br>எம்.எஸ்டபிள்யூ., பி.எட். பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ.,<br>பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்பில்.,பிஜிஎல்., | - சார்புச் செயலாளர் |
| திரு. எஸ். இராமன், பி.காம். | - சார்புச் செயலாளர் |



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன். திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூரர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த-அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. | - மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. திக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 27
## 2008 மே 9, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. அ. மாரிமுத்து அவர்கள் 7–5–2008 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. அ. மாரிமுத்து அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், அன்றைய ஆடுதுறை சட்டப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன். மறைந்த அப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2008 மே 9

# 2. வினாக்கள்-விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**231—**

### தடுப்புச் சுவர்

***5069—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வானகிரி ஊராட்சியில் காவேரி நதி கடலோடு கலக்கும் சங்கமத்துறையில் கடல் நீர் உட்புகாவண்ணம் தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், வானகிரி ஊராட்சியில் காவேரி கடலோடு கலக்கும் சங்கமத்துறையில், கடல் நீர் உட்புகாவண்ணம் படுக்கை அணை அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப்பூம்பட்டினம், வானகிரி, பூம்புகார், கீழப்பெரும்பள்ளம், மேலப்பெரும்பள்ளம், வானகிரி மணி கிராமம் போன்ற 6 ஊராட்சிகள் இந்த அணையின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளன. நமது காவிரியில் பூம்புகார், மேலையூர் கிராமத்தில்தான் கடையணை கட்டப்பட்டுள்ளது. சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த 5 கிலோ மீட்டர் தூரமும் கடல் நீர் புகுந்து அந்தப் பகுதியினுடைய குடிநீர் ஆதாரம் மற்றும் 5,000 [illegible]ங்களைப் பாதித்துக் கொண்டிருக்கின்றது. ஆக, [illegible] போக்க, வானகிரி பகுதியில் ஒரு

சென்னை-600 009



2008 மே 9]

தடுப்பணை கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியினுடைய எதிர்கால குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்காமல் இருக்கும். ஆகவே, அங்கே அணையை உடனடியாகக் கட்டுவதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான், 140 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்து அணை கட்டுவதற்காக ஒரு இடத்தை தேர்வு செய்தோம். ஆனால், அங்கு கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிற அளவிற்கு மண் தன்மை சரிப்பட்டு வராததால், வேறொரு இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்திற்குத் தக்கபடி designs—வடிவமைப்புகள் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்த வடிவமைப்புகள் வந்தவுடன் அடுத்தகட்டமாக அரசினுடைய நிருவாக ஒப்புதல் பெற்று, வேலைகளை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழையகரம் என்ற இடத்தை அதற்கு ஏதுவான இடமாக அங்கேயுள்ள அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், நமது தமிழக அரசு 100 தடுப்பணைகளைக் கட்டுவதாக இந்த ஆண்டு அறிவித்திருக்கிறது. அந்த வகையிலே, பூம்புகார் தொகுதியில் அம்மனாறு, சின்னங்குடி, மருதம்பள்ளம், திருவெங்காடு போன்ற பகுதிகளிலே கடலை விவசாயம் அதிகமாகச் செய்யப்படுகிறது. கடந்த காலங்களிலே அங்கே குட்டைகளை வெட்டி அதிலிருந்து தண்ணீரை எடுத்துதான் அங்கே கடலை விவசாயம் செய்யப்பட்டது. இப்போது கடல்நீர் 10 கிலோ மீட்டர் புகுந்துவிட்ட காரணத்தினால் அது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கிற அனைத்து ஆறுகளின் முகத்துவாரங்களிலும் தடுப்பணை கட்டி, நமது விவசாயப் பெருங்குடி மக்களின் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு அரசு முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடல்நீர் பொதுவாக ஆற்று முகத்துவாரங்களின் உள்ளே நுழைகிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு பகுதிகளில் இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் இந்த மாமன்றத்திலே ஒரு கேள்விக்கு நான் பதிலளிக்கிறபொழுது, கெடிலம் ஆற்றிலும், பெண்ணை ஆற்றிலும் அணைகள் கட்டுகிற ஒரு திட்டத்தை தெரிவித்தேன். மத்திய அரசு சுனாமியை முன்னிட்டு மாநில அரசுகளையெல்லாம் இப்படி நிரந்தரமாகக் கடல்நீர் உள்ளே புகுந்து குடிநீரைக்கூட உப்புநீராக மாற்றாமல் இருப்பதற்கு ஒரு திட்டத்தை அளிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அதாவது Improvements to Saline Embankments, Coastal Canals and Regulator River Draining Works ஆகிய பணிகளுக்கு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். தமிழக அரசு 188 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசு இப்படிப் பல மாநிலங்களிலே வருகிற அந்தத் திட்டங்களை ஒருங்கிணைத்து அதற்கு வேண்டிய நிதியாதாரத்தை உலக வங்கியிடத்திலே கேட்பதா அல்லது மத்திய அரசு செய்வதா என்பதை ஆய்வு செய்திருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளரை இரு முறை கூப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். எனவே, விரைவில் இந்த 188 கோடி ரூபாய் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படி வருகிறபொழுது, முகத்துவாரங்களில் கடல்நீர் உட்புகாவண்ணம் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றின் முகத்துவாரத்திலும், கூவம் ஆற்றின் முகத்துவாரத்திலும் மணல் அதிகமாகச் சேர்ந்துபோய், கூவம் ஆற்றிலே இருக்கின்ற கழிவு நீர் கடலிலே கலக்க முடியாமலும், அடையாறு ஆற்றிலே இருக்கின்ற கழிவு நீர் கடலிலே கலக்க முடியாமலும் கழிவு நீர் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், சென்னை மாநகரத்தில் கொசுக்கள் அதிக அளவில் பெருகி, இன்றைக்கு சென்னை மாநகர மக்கள் கொசுத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்கு முன்பெல்லாம் இயந்திரம் வைத்து அந்த முகத்துவாரங்களிலே இருக்கின்ற மணலையெல்லாம் அள்ளிக்கொண்டிருந்தார்கள். அது





இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் முகத்துவாரத்திலே இருக்கின்ற மணலை அள்ளுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், முகத்துவாரங்களில் கடல் அலைகள் கொண்டுவந்து மணலைச் சேர்க்கும். வட கிழக்குப் பருவக் காற்று, தென் கிழக்குப் பருவக் காற்று என்று மாறி மாறி காற்று அடிக்கிறபோது மணல் திட்டுகள் உருவாகிவிடும். அவற்றை அவ்வப்போது இயந்திரங்களை வைத்துத்தான் வாரிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது வாருவதில்லை என்றார். போகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அந்த இரும்புப் பாலத்திலிருந்து கிழக்கு நோக்கி கூவம் கடலோடு கலக்கிற பகுதியைப் பார்க்கட்டும். அங்கே பெரிய இயந்திரங்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. அங்கிருக்கின்ற மணல்களைத் துறைமுகத்தினுடைய அபிவிருத்திக்குத்தான் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதேபோல், நீங்கள் அடையாறில் கடலோடு கலக்கின்ற பெசன்ட் நகர் பக்கத்திலே உள்ள சீனிவாசபுரத்திற்கும் பெசன்ட் நகருக்கும் இடையிலே பார்த்தால், அந்த இடத்திலேயும் ஒரு மெஷின் 24 மணி நேரங்களில் பல மணி நேரங்கள் வேலை செய்துகொண்டிருக்கிறது. ஆனால், வார வார, கடலலை மண்ணைக் கொண்டுவந்து சேர்த்துக்கொண்டேதான் இருக்கும். ஆகவே, இரண்டு முகத்துவாரங்களிலும் இரண்டு மெஷின்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற பாலாற்றிலே வங்கக் கடற்கரையோரம், அதன் முகத்துவாரத்தின் அருகிலே ஏற்கெனவே தடுப்பணை கட்ட அரசு பரிசீலித்து அதற்கான டெண்டர் எல்லாம் விடப்பட்டது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட கடந்த வாரம் அந்தத் தடுப்பணை கட்ட இப்போது உத்தேசம் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு இப்போது கடல் நீர் பாலாற்றிலே இறங்கி, உப்பு நீராக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் அந்த அணையைக் கட்டுவதற்கு நம்முடைய அமைச்சர் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அங்கே ஒரு தடுப்பணை கட்டி, கடல் நீர் உள்ளே வராமல் தடுப்பதற்கும் மற்றும் குடிநீர் எடுப்பதற்கும் 84 கோடி ரூபாயில் சென்ற ஆட்சியிலே ஒரு திட்டம் போடப்பட்டது. டெண்டர் விடப்பட்டது. டெண்டர் விடப்பட்ட பிறகு அவரிடத்தில் குறைத்துக் கொடுங்கள் என்று பேரம் நடத்தப்பட்டது. Reduce செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பிறகு அவரை எதிர்த்து கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகும் போட்டிருக்கிற ரேட்டை குறையுங்கள், குறையுங்கள் என்று சொன்னார்கள். அவர் ஆளைவிட்டால் போதும் என்று போய்விட்டார். எனவே, அந்தத் திட்டம் அப்படியே நீதிமன்றத்தால் கைவிடப்பட்டுவிட்டது. அதை அதிகாரிகள் எடுக்க வரவில்லை. எனவே, மீண்டும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் அவர்கள் நிதி ஒதுக்கலாம். இல்லாவிட்டால் நான் முன்பே சொன்னதுபோல, 188 கோடி ரூபாயை நாங்கள் மத்திய அரசிடத்திலே National Cyclone Risk Mitigation Programme–லே கேட்டிருக்கிறோம். அது வருகிறபோது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாமா என்பதை அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியைச் சேர்ந்த வெள்ளாற்று தண்ணீர் கடலில் கலக்கும்போது கடல்நீர் உட்புகுந்து புவனகிரி ஒன்றியம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், கீரப்பாளையம் ஒன்றியம் ஆகிய 3 ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் குடிநீர் உப்பு நீராக மாறுகிறது. இதைத் தடுக்கும்பொருட்டு வெள்ளாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கலைஞருடைய ஆட்சி இருந்தபோது நாங்கள்தான் பாசிமுத்தான் ஓடையிலே தண்ணீர் வராத காலத்தில் ஒரு அணையைக் கட்டினோம். வெள்ளாற்றில் தண்ணீர் போய் கலக்கிறபோது, பெருமாள் ஏரியில் இருந்து வருகிற தண்ணீர்தான் அந்தப் பகுதிக்கு வருகிறது. அதைத் தடுப்பதற்கு ஒரு அணை கட்டுவதற்கும் உரிய கருத்துரு இப்போது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆறு இரயுமன்துறை என்ற பகுதியில் அரபிக் கடலை சந்திக்கிறது. இந்தப் பகுதியில் 2004 ஆம் ஆண்டிலும், வேறு சில சந்தர்ப்பங்களிலும் கடல்நீர் உள்ளே புகுந்துள்ளது. ஆகவே, அதைத் தடுப்பதற்காக அந்தப் பகுதியில் ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்பதற்காக ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையில் தடுப்பணை கட்ட எதிர்பார்க்கக்கூடிய இடம் ஆழமாக இருப்பதாலும், செலவு அதிகமாக இருப்பதாலும் சாத்தியம் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. செலவு அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டால், கடல் நீர் உள்ளே வந்து கலக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியில் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரையில் இரயுமன்திறை பகுதியிலே Sea erosion–க்காகத்தான் ஒரு wall கட்டிக்கொண்டிருக்கிறோம். இதற்காக 12–வது நிதிக் குழுவில் 50 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதில் 33 வேலைகளில் 25 கடல் அரிப்புக்கான வேலைகள் முடிந்துவிட்டன. 8 வேலைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. மாநில அரசு சமீபத்தில் இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி 3 வேலைகளை எடுத்து அந்த வேலைகளும் முடிந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது எனக்குப் புதிய செய்தி. அதுகுறித்து நான் விசாரித்துப் பார்க்கிறேன்.

[2008 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**232—**

**பேருந்து வசதி**

***22088—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்கள்மூலம் குளிர்சாதன வசதி மற்றும் படுக்கை வசதியுடன் பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்மூலமாக 106 குளிர்சாதன வசதிகொண்ட பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. படுக்கை வசதி கொண்ட பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதிகொண்ட பேருந்துகளை தமிழகம் முழுவதும் இயக்கியதற்கு ஒப்பற்றத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதைப் போலவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதை மேலும் விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல, தொலைதூரங்களிலிருந்து குறிப்பாக, கன்னியாகுமரி, நாகர்கோவில், இராமேஸ்வரம், திருநெல்வேலி, மதுரை போன்ற நகரங்களிலிருந்து வரக்கூடிய அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பயன்பெறும் வகையில் படுக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகளை இயக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

—



2008 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 988 விரைவுப் பேருந்துகள் இருக்கின்றன. அதிலே 88 மாற்றுப் பேருந்துகள் போக, 900 பேருந்துகள் இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன. இப்போது 106 பேருந்துகள் A.C. பேருந்துகளாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலே மாற்றப்பட வேண்டிய பழைய பேருந்துகளாக 400 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தால், முதலிலே பழைய பேருந்துகளை மாற்றி ultra deluxe பேருந்துகளாகக் கொண்டு வருகின்ற எண்ணம்தான் அரசிடம் இருக்கிறது. தனியார்கள்கூட படுக்கை வசதிகள் கொண்ட பேருந்துகளை அதிகமான அளவிலே இயக்கவில்லை. ஓரிரண்டு பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. அவசியம் தேவைப்படும்போது, அரசு இதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**233—**

**தொழில்கள்**

***11883—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில் திராட்சை சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[2008 மே 9

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கம்பம் தொகுதியில் திராட்சை சார்ந்த தொழில்கள் தொடங்க உத்தேசிக்கும் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் தொடங்கத் தேவையான எல்லா வசதிகளையும் மாவட்ட தொழில் மையம்மூலம் அரசு செய்து கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம், கூடலூர், கேஜி. பட்டி, கேஎம். பட்டி, நாராயண்தேவன்பட்டி, இராமேகவுண்டன்பட்டி, புதுப்பட்டி ஆகிய கிராமங்களில் 3,300 எக்டேர் பரப்பளவில் திராட்சைப் பயிரிடப்படுகின்றது. வருடத்திற்கு ஒரு இலட்சம் டன் திராட்சை உற்பத்திச் செய்யப்படுகின்றது. திராட்சைத் தோட்டம் அமைப்பதற்கு, ஒரு ஏக்கருக்குக் கட்டுமானச் செலவு ஒரு இலட்சம் ரூபாய் ஆகின்றது; வருடத்திற்கு மூன்று போகம் விளைவிக்கப்படுகின்றது; உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கின்றது. ஒரு இலட்சம் தொழிலாளர்கள் அதை நம்பியிருக்கின்றார்கள். மழை, பனிக் காலங்களில் திராட்சையைச் சேமித்து வைக்க இயலவில்லை; விலை குறைவாக இருக்கின்றது. அதனால் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுடைய வாழ்க்கை சீராக இல்லை. இதை அரசு கருத்தில்கொண்டு, கம்பத்தில் அரசே திராட்சை மற்றும் அதைச் சார்ந்த ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில் திராட்சை சார்ந்த தொழில்கள் தொடங்க உத்தேசிக்கும் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் தொடங்கத் தேவையான எல்லா வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும். தற்சமயம் Tvl. Kamayam Siva Sakthi Food Products, K.K. Patti, கம்பம் என்ற சிறு தொழில் பதிவு பெற்ற நிறுவனத்தில் பழச்சாறு மற்றும் பழக்கூழ் சார்ந்த தொழில்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தனியாருடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் wine தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறுதொழில் துறையின்கீழ் தனியார் தொழில் முனைவோர்கள் திராட்சை சார்ந்த தொழில்களை ஆரம்பிக்க முன்வரும்போது, அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் மாவட்டத் தொழில் மையம்மூலமாக அரசு செய்யும்.



2008 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்தில் திராட்சைப் பயிரிடுகின்ற விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளாவர். அவர்களுக்குப் பொருளாதார வசதி கிடையாது. அதனால்தான் அரசே அந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். அதைப்போல, கம்பத்திலே விளைவிக்கப்படுகின்ற திராட்சை ருசியானது, தரமானது, சத்தானது. மைசூரில் உள்ள C.F.T.R.I. என்ற நிறுவனமும், ஆம்ரூட் என்ற நிறுவனமும் ஆய்வு செய்து, திராட்சையிலிருந்து Squash, Rum, Wine மற்றும் Jam போன்றவற்றைத் தயாரிக்க முடியும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதோடு, மத்திய உணவுத் துறை அரசாணை எண் Ms. 79-ன் அடிப்படையில், மாநில அரசு திராட்சை சார்ந்த தொழிலைத் தொடங்கினால், 50 விழுக்காடு மானியம் தருவதாகவும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே, கம்பம் நகரில் ஒழுங்குமுறை கூடத்திற்குச் சொந்தமாக 7.92 சென்ட் நிலம் காலியாகவே உள்ளது. அந்த இடத்தை அரசே முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, திராட்சையைச் சேமிப்பதற்குக் குளிர்பதனக் கிட்டங்கியையும், திராட்சை சார்ந்த தொழிற்சாலையையும் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் Muscat எனப்படும் பன்னீர் வகை திராட்சை 1,530 எக்டேர் நிலப்பரப்பிலும் மற்றும் Thomson எனப்படும் திராட்சை வகை 583 எக்டேர் நிலப்பரப்பிலும், ஆக மொத்தம் 2,113 எக்டேர் நிலப்பரப்பில் திராட்சை ஆண்டிற்கு சுமார் 47,754 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. தேனி மாவட்டத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கம்மூலம் விதையில்லா தாம்சன் வகை திராட்சையைப் பதப்படுத்தி, உலர் திராட்சை உற்பத்தியை சுமார் 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்க திட்டம் தயாரிக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, அரசின் பங்குத் தொகையாக 12 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், உறுப்பினர்கள் ஆர்வமின்மை மற்றும்

வழங்கப்பட்டது. ஆனால், உறுப்பினர்கள் ஆர்வமின்மை மற்றும் பங்குத்தொகை செலுத்தாமை காரணமாக National Co–operative Development Corporation (NCDC) எனப்படும் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து ரூபாய் 87.5 இலட்சம் கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டது. உலர்ந்த திராட்சை தயாரித்திட தேவையான 22 Brix அளவு இனிப்புச் சுவை உள்ள திராட்சைக்குப் பதில், இப்பகுதியில் விவசாயிகள் 18 Brix அளவு இனிப்புச் சுவை உள்ள திராட்சைகளையே உற்பத்தி செய்வதால் உலர்ந்த திராட்சை தயாரிப்பதற்கு ஏற்புடையதாக இல்லாத நிலை. திராட்சைப் பழங்கள், கொடியிலிருந்து 120 நாட்களுக்குப்பின் பறிக்கப்பட்டால் அதில் 22 Brix அளவு இனிப்புச் சுவை இருக்கும். ஆனால், இப்பகுதி விவசாயிகள் பழங்களை 90 நாட்களில் பறிப்பதால் 18 Brix அளவு இனிப்புச் சுவை உள்ள திராட்சையே கிடைக்கிறது. இது உற்பத்திக்கு ஏற்றதல்ல. மேற்கூறிய காரணங்களால் மேற்படி சங்கத்தினைக் கலைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், உறுப்பினர்கள் மீண்டும் ஆர்வத்தோடு இந்த தமிழ்நாடு திராட்சைப் பதப்படுத்தும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினை நடத்திட முன்வந்து, உறுப்பினர்களின் பங்குத்தொகையைச் செலுத்தினால், அரசு நிச்சயமாக இந்தத் திராட்சைப் பழ பதப்படுத்தும் கூட்டுறவுத் தொழில் நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்குப் பரிசீலிக்கும். மேலும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல்வேறு சலுகைகளை தனது தொழிற் கொள்கைமூலம் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும்மேல் கூடுதலாக, தென் மாவட்டங்கள் வளர்ச்சி அடைவதற்காக 2 நாட்களுக்கு முன்பு தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பல்வேறு சலுகைகளையும் அறிவித்திருக்கிறார்கள். தேனி மாவட்டமும் தென் மாவட்டங்களிலே அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**234—**

## குடமுழுக்கு

***42325—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* குளச்சல் தொகுதி, பெருவிளை சொக்கநாதர் ஆலய திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?



*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, பெருவிளை சொக்கநாதர் ஆலயத்திற்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட நிருவாகத்தால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உபயதாரர்கள் பங்கேற்புடன் திருப்பணி துவங்கியுள்ளது. தொடர்ந்து தேவையான நிதியை திருக்கோயில் நிதியின் மூலமாகச் செய்து குடமுழுக்கு நடத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதியில், எனது சொந்த ஊராகிய பெருவிளையில் அமைந்துள்ளது இந்த சொக்கநாதர் திருக்கோயில். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் திருவிதாங்கூர் மன்னரால் கட்டப்பட்டது இந்தத் திருக்கோயில். இந்தக் கோயிலின் முன்மண்டபத்தின்மீது ஓராண்டுக்கு முன்னால் மரம் முறிந்து விழுந்ததில், மண்டபம் முற்றிலும் சேதம் அடைந்துவிட்டது. எனவே, இந்த ஆலயத்திற்கு தினந்தோறும் வரும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய முடியவில்லை. இந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தற்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருப்பணி தொடங்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திருப்பணி உடனடியாக தொடங்கப்படுமா என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகுவிரைவிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருப்பணி முடிந்து, குடமுழுக்கு நடத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்றாலும், அந்த முன்மண்டபம் சேதம் அடைந்திருக்கிறது. சுமார் 10 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவாகும் என்று நான் கருதுகிறேன். திருப்பணி தொடங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானும், அந்தப் பகுதி பெரியவர்களும் சேர்ந்து நிதி வசூல் செய்து, அந்தத் திருப்பணியை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம். என்றாலும், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக அந்த முன்மண்டபத்தைச் சிறப்பாகக் கட்டுவதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல்வேறு கோயில்களில் பல ஆண்டுகளாக திருப்பணிகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. 2005–2006 ஆம் ஆண்டுகூட, திருப்பணி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சில கோயில்களில் அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பணிகளெல்லாம் விரைவாகத் தொடங்கப்படுமா என்பதை இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மேலும், அனைத்து சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசினுடைய ஆணைப்படி, என்னுடைய தொகுதியில் இராஜாக்கமங்கலம் என்ற ஊரின் அருகே, எள்ளுவிளை என்ற கிராமத்தில் இருக்கக்கூடிய இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான பிள்ளையார் கோயிலில் பல ஆண்டுகளாக தினக்கூலியில் அர்ச்சகராகப் பணியாற்றும் பிள்ளையார் நயினார் என்ற நாடார் சமூகத்தைச் சேர்ந்த அர்ச்சகர், பணி நிரந்தரம் செய்யப்படுவாரா என்பதையும் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்த வினா திருப்பணி சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன தேவையான அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய ஒத்துழைப்போடு அந்தத் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதற்கு நான் உறுதி தெரிவித்திருக்கிறேன். ஆகவே, அவர் தொடர்ந்து பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் என்று ஏறத்தாழ 350 திருக்கோயில்கள் ஒரே நிர்வாகத்தின்கீழ் வருகின்றன. ஆனால் பெரிய அளவிற்கு அந்தத் திருக்கோயில்களில் வருமானங்கள் இல்லை. 3 கோடி ரூபாய் அளவிலேதான் மொத்த வருமானம் இருக்கின்றது. இருந்தாலும் அரசின் சார்பிலே சிறப்பு நிதியாக ஆண்டு நிர்வாகச் செலவுகளுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் வைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் கிராமப் பெரியவர்களுடைய ஒத்துழைப்போடு பெரும்பாலான திருப்பணிகள் முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**235—**

## பள்ளிக் கட்டடம்

***432—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி, பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நபார்டு வங்கித் திட்டம் 3–ன்கீழ் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தேவையெனில், இனிவரும் நபார்டு வங்கித் திட்டம் 9–ன்கீழ் விதிகளின்படி ஆய்வுசெய்து கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதியில் ஆரணி பேரூராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி இருபாலரும் படிக்கின்ற பள்ளி. சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இந்தப் பள்ளியில் 2,600 மாணவ மாணவியர்கள் படிக்கின்றார்கள். இங்கு மரத்தடியில் வகுப்புகள் நடைபெறுகின்ற காரணத்தாலும், போதிய கட்டட வசதி, போதிய கழிப்பிட வசதி, சுற்றுச் சுவர் வசதி உட்காருவதற்கு desk, bench கூட இல்லாமல் இருக்கின்ற காரணத்தாலும், நபார்டு வங்கித் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தி சிறப்பு நேர்வாக நடப்பு நிதியாண்டிலேயே இந்தப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய பொன்னேரி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை இந்தப் பள்ளிக்கு அளித்திருக்கிறேன் என்று கூறி அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய தகவல்கள் உண்மையானவை. அந்தப் பள்ளிக்கு இப்போதைய தேவை ஏறத்தாழ 18 வகுப்பறைகள். அதிலே pucca கட்டடமாக 15 வகுப்பறைகள் இருக்கின்றன. மீதி Asbestos sheet போடப்பட்டிருக்கிற காரணத்தினாலே அந்த நிலைமைதான் அங்கே இருக்கிறது. எனவே, அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல நான் மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும்போதுகூட குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளக்கூடிய நபார்டு வங்கி 9–வது திட்டத்தின்கீழ் அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய பொன்னேரி, இருபாலர் பயிலக்கூடிய மேல்நிலைப் பள்ளியில் அடிப்படை வசதிகள், வகுப்பறைகள், கழிப்பிட வசதி, ஆய்வக வசதிகள் ஆகியவற்றை முழுமையாக உருவாக்கக்கூடிய அளவிற்கு நபார்டு வங்கிக்கு நிச்சயமாக பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.



**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1,100 மாணவிகள் படிக்கின்றார்கள். இந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த 3 இலட்சம் ரூபாய் செலுத்தி 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? மேலும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு நிதி உதவி செய்வதுபோல, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விதியைத் தளர்த்தி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரும் கலந்து பரிசீலனை செய்து அடிப்படை வசதியை செய்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால் அரசுக்கு 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே 3 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாக சொல்லுகிறார்கள். நிறைய தாராள மனம் படைத்த தொகுதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் சொல்லியிருப்பதைப்போல விதிகளுக்குட்பட்டு இந்த ஆண்டு முன்மொழிவுகள் வந்தால் நான் அவசியம் பரிசீலனை செய்கிறேன். இன்னொன்றையும் சொன்னார்கள், அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளிலே கட்டடப் பணிகளைச் செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் தர வேண்டுமென்று. ஏற்கெனவே மானியக் கோரிக்கை விவாதத்தின்போதுகூட நான் இங்கே அதற்கு பதிலளித்திருக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பரிசீலனையில் அது இருக்கிறது. வரக்கூடிய காலங்களிலே பரிசீலித்து, அவரோடு கலந்து ஆலோசித்து அது குறித்து அரசு முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**236—**

## மரக்கன்றுகள்

***11318—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரை ஒட்டியுள்ள மலைப்பகுதியில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் நகரை ஒட்டியுள்ள மலைப்பகுதியில் 2008–2009 ஆம் ஆண்டில் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் பணிகளை மேற்கொள்ள திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரை ஒட்டியிருக்கக்கூடிய சைதாப்பேட்டை மற்றும் சத்துவாச்சாரி பகுதிகளில் இருக்கக்கூடிய மலைகள், இப்போது மரங்கள் மற்றும் செடிகள் எதுவும் இல்லாமல், மொட்டையாக இருந்து கொண்டிருக்கின்றன. அதனால் இப்பொழுது வேலூரில் வெப்பமே 111° இருக்கிறது. வெயிலுக்கு நேற்றுகூட ஒருவருக்கு மயக்கம் ஏற்பட்டு சுருண்டு விழுந்து இறந்துபோனார். இப்படி வேலூர் பகுதியில் வெயில் அதிகமாகத் தாக்குவதற்குக் காரணமே, ஒரு பகுதியில் தண்ணீர் இல்லாத பாலாறாகப் போய்விட்டது. மற்றொரு பகுதி, இப்படி மொட்டையாக, மரங்கள் செடிகள் இல்லாத ஒரு மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, எங்கள் பகுதியில் வெப்பம் அதிகமாகத் தாக்கி, பலபேர் பாதிப்பிற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். வனத் துறை, ஜப்பான் நாட்டு நிதியுதவியோடும், உலக வங்கி நிதியுதவியோடும் மற்ற பகுதிகளிலெல்லாம் மரக்கன்றுகளை நட்டு வளர்த்துக் கொண்டிருக்கக்கூடிய சூழலில், எங்களுடைய சத்துவாச்சாரி, சைதாப்பேட்டை பகுதிகளில் இருக்கக்கூடிய மலைகளில், மரங்களையும்,





செடிகளையும் வளர்ப்பதற்கு ஒரு தனித் திட்டம் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக செடிகளை நடுகிறார்கள். ஜப்பான் நாட்டு நிதியுதவியோடுகூட செடிகளை நட்டார்கள். ஆனால், செடி வளரவில்லை, காய்ந்து போய்விட்டது. இப்படி அவை சரியாகப் பராமரிக்கப்படாததால் காய்ந்து போய்விட்டன. அப்படிப்பட்ட நிலைமையில்லாமல், செடிகளை நடுவதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து அதற்குத் தண்ணீர் ஊற்றி, வளர்த்து, பசுமையாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கேள்வியிலேயே அது மலைப் பகுதி, பாறைகள் நிறைந்த பகுதி என்று சொல்லியிருக்கிறார். இருந்தாலும், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்திலேதான், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது அந்தப் பகுதியிலே இருக்கின்ற அலமேலுமங்காபுரம் காப்புக் காட்டிலும், கோட்டைமலைக் காப்புக் காட்டிலும் உள்ள 592½ எக்டேர் நிலத்திலே, 420 எக்டேர் நிலம் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டது. அதை ஒட்டியுள்ள நிலங்களெல்லாம், வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம் என்கின்ற காரணத்தினால், வருவாய்த் துறை நிலத்திலும் 80 எக்டேர் அளவிற்கு செடிகள் நடவு செய்யப்பட்டன. ஆகவே, அப்போது 500 எக்டேர் நிலத்தில் நடவு செய்யப்பட்டது. அப்படி நடவு செய்யப்பட்டாலும், உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், மழைக்காலங்களிலே மண் சரிந்துவிழுந்துவிட்ட காரணத்தால், பாறையிலே வளர்ச்சி விகிதம் மிகக் குறைவாகத்தான் இருந்தது. இருந்தாலும், இப்பொழுது தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், வனம் இல்லாத நிலங்களிலும், சமுதாய நிலங்களிலும் மரம் வளர்ப்பதற்காக ஊக்கம் தருகிறார்கள். எனவே, மத்திய அரசு நிதியோடு, இந்த ஆண்டு 500 எக்டேர் நிலத்திலே, அந்த சந்துகளிலெல்லாம் இதைப்போன்ற பலா, சீத்தா, பனை போன்ற மரங்களை நடுவதற்கும், புல்வெளிகளில், புல் முளைக்காமல் இருப்பதற்காக தரையில் நிழல் படுகின்ற மரங்களை நடுவதற்கும், இன்னும் 300 எக்டேர் நிலங்களிலே ஈட்டி, எட்டி, குமிழ், சிவப்பு

சந்தனம், ஆலமரம், அரசமரம், ஆச்சா போன்ற மரங்களை நடுவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதைப்போல நீராதாரங்களை உருவாக்குவதற்காக ரூ. 89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2 கோடி ரூபாய் அளவிற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். ஆனால், நாம் திட்டமிடுகிறோம். திட்டமிட்டபிறகு, தண்ணீர் ஊற்றாததால்தான் நிறைய செடிகள் காய்ந்து போய்விடுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே மனிதனே விழுந்து இறந்துபோய்விடுகிறான் என்கிறீர்கள். பிறகு மரம் எப்படி வளரும்? கேள்வியை மட்டும் சீக்கிரம் கேட்டுவிட்டு உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறையோடு இணைந்தாவது, drip irrigation மூலமாக, தண்ணீரை செடிகளுக்கு ஊற்றாத காரணத்தினாலேதான், இன்று பல செடிகள் வாடிப்போய் விடுகின்றன. அதற்கு drip irrigation மூலமாக, நீங்கள் விவசாயத் துறையோடு இணைந்து, ஆராய்ச்சி செய்து, எந்தெந்த இடங்களில் எந்தெந்த செடிகளை நட்டால் வளரும் என்பதைக் கண்டறிய வேண்டும். பொத்தாம்பொதுவாக செடிகளை நட்டுவிட்டு வந்துவிடுகின்ற காரணத்தினால், செடிகளே வளராமல்போய் விடுகின்றன. ஆகவே, அந்தந்த இடத்தில் மண் ஆய்வுசெய்ய வேண்டும். விவசாயத் துறை மற்றும் தோட்டக் கலைத் துறை என்று பெரிய அமைப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. இரு துறைகளுக்கும் இடையே ஒரு co–ordination–ஐ ஏற்படுத்தி, அந்த இடத்தில் செடிகளை நட்டு, drip irrigation மூலமாகவாவது, மரங்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 80 இலட்சம் ரூபாயைத்தான் தண்ணீருக்காக ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதற்கு அதிகமாக நிதியை ஒதுக்கீடு செய்து, drip irrigation கொண்டு வந்தாவது, மரங்களை வளர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாறையிலும், கல்லிலும் ஈரம் உண்டு; எனவே பாறையிலும் பயிர் வளர்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் என்னென்ன வகை மரங்களை நடவிருக்கிறோம் என்பதைச் சொன்னேன். மண் இருக்கின்ற இடங்களில் என்ன மரங்களை நடவிருக்கிறோம், பாறைகளின் நடுவிலே இருக்கின்ற பனை, பலா, சீத்தா, உசில் போன்ற மரங்களை நடவிருக்கிறோம் என்று மர வகைகளையும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி இந்த மரங்களையெல்லாம் நட்டுவிட்டு, கடந்தகால அனுபவத்தை வைத்து, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழே நடப்பட்ட மரங்கள், சில காரணங்களாலே மழையின்மை, தண்ணீர் இல்லாத காரணங்களாலே வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலேதான், இந்தமுறை நீராதாரங்களை ஏற்படுத்துவதற்காக, அந்தத் திட்டத்திலேயே 89 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, செம்மையாகப் பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில், வேட்டவலம், திருவண்ணாமலை மற்றும் முனைப்பால் ஏரி மலைகள், அதேபோல செஞ்சி அருகிலே இருக்கின்ற மலைகளில் எல்லாம் மரங்கள் இல்லாமல் இருக்கும் நிலை இருக்கின்றது. ஆகவே, அதுபோன்ற மலைப் பிரதேசங்களில், மழைக் காலங்களில் ஹெலிகாப்டர்மூலம், விதைகளைத் தூவி காடு வளர்ப்பதற்கானத் திட்டத்தினை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில், வனத் துறைக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி காடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்றன. காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. அந்த இடங்களில் விலையுயர்ந்த மரக்கன்றுகளை, பலா, முந்திரி அல்லது வேறுவகையான பழவகைத் தோட்டங்களை அமைத்து அங்குள்ள விவசாயிகள் தங்கள் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே முந்திரி சரியாக இல்லையென்று சொன்னார்கள். அதற்காகத்தான் முந்திரி வளராத இடங்களில் எல்லாம் தைல மரங்களை உருவாக்கி, தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்திற்குத் தேவையான அந்த மரங்களை உருவாக்கலாம் என்று நாங்கள் திட்டமிட்டால், அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மாண்புமிகு உறுப்பினர்கள் அல்லது மற்றவர்கள்மூலமாக வந்து, எங்களுக்கு அந்தப் பகுதிகளிலே முந்திரி மரம்தான் வேண்டும், அதுதான் எங்களுக்குப் பயன் தரும் என்று வலியுறுத்துகிறார்கள். எனவே, சில நேரங்களில் முந்திரிக்கு தகுதியற்ற நிலங்களில்கூட முந்திரி பயிரிடுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால், அதுபோன்ற இடங்களிலே தைல மரங்கள் வளர்த்தால், துறைக்கும் இலாபம், இந்த நாட்டிற்கும் பயன்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபோன்ற இடங்களைத் தெரிவித்தால், தைல மரங்கள் வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கோடை தொடங்கினால் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆண்டுதோறும் கோடைக்காலங்களில், விலங்குகள் குடிநீர் இல்லாமல் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றன. எனவே, இப்பிரச்சினைக்கு



நிரந்தரத் தீர்வாக, வண்டலூர் உயிரியல் பூங்காவிலுள்ள ஓட்டேரி ஏரியை ஆழப்படுத்தி நீரைச் சேகரித்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா? மேலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி, மரக்கன்றுகள் வைப்பது சம்பந்தமான மூலக்கேள்வி இது. (குறுக்கீடு) நீங்கள் குளத்தினைத் தூர்வாரச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** விலங்குகளுக்குக் குடிநீர்ப் பிரச்சினை. வாயில்லாத ஜீவன்களுக்காகக் கேட்கின்றேன். நமக்கெல்லாம் வாய் இருக்கிறது, பேசுகிறோம், போராடுகிறோம். மேலும், இரவு நேரங்களில், விலங்குகளைப் பார்வையிட அனுமதி வழங்கும் ஒருசில வெளிநாடுகளில் குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ளது போன்று நம்முடைய வண்டலூர் உயிரியல் பூங்காவிலும், இரவு நேரங்களில் மிருகங்களைப் பார்வையிட Night Safari என்ற ஒரு நிகழ்ச்சிக்கு அரசு அனுமதி வழங்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில், அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் அமைந்துள்ள உயிரியல் பூங்காவில் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லை. இருந்தாலும், இதுபோன்ற கோடைக் காலங்களில் தட்டுப்பாடு வந்தாலும், வாகனங்களின்மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிங்கப்பூரில் இருப்பதைப்போல இரவு காணல் உலா ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டே மானியக் கோரிக்கையிலே இதைப் பற்றி அறிவிப்பு வந்திருக்கிறது. ரூ.256 கோடிக்குத் திட்டம் தீட்டப்பட்டு, ரூ.5 கோடியை ஒதுக்கித் தந்து இப்போது திட்டப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உலகத்திலேயே சிங்கப்பூரில்தான் முதல் இரவு காணல் உலா இருக்கிறது. இரண்டாவதாக, சென்னையிலே அமைக்கப்படுகின்ற அந்தப் பெருமையை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது தைல மரங்களை பல இடங்களிலே நடலாம் என்று சொன்னார்கள். அவ்வாறு தைல மரங்களை நடுகின்றபோது காற்றிலே இருக்கின்ற ஈரப்பசையை அவை தழைகள் மூலமாக இழுத்துவிடுகின்றன என்ற அச்சம் மக்களிடத்திலே இருக்கிறது. அதைப் போக்குகின்றவகையிலே, இந்த அரசு மக்களிடத்திலே விளக்குவதற்கு ஏதாவது குழுக்களை வைத்து பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்றமுறையே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். அதுபோன்று தைல மரங்களின் வேர்கள் 30 முதல் 40 செ.மீ. வரையில்தான் ஆழமாகச் செல்கின்றன. அதற்கு ஆணி வேர் இல்லை. பக்க வேர்கள்தான் செல்கின்றன. எனவே, நிலத்திலே இருக்கின்ற தண்ணீரை உறிஞ்சுவது இல்லை. மக்களுக்கு அதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி இப்போது அவற்றை வளர்ப்பதிலே ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 237, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**237—**

### புறவழிச் சாலை

***857—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், சீர்காழி ஆகிய நகரங்களில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 மே 9]

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம், சீர்காழி, சிதம்பரம் ஆகிய நகரங்களுக்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் அரசால் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எம். பன்னீர்செல்வம்.

*முற்பகல் 10–10*

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் புறவழிச் சாலை அமைக்கும் பணி மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 1996–2001–ல், 4–வது முறையாக முதலமைச்சராக இருந்தபோதே அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு தற்சமயம் 22 கோடி ரூபாயாக உள்ளது. அது முதல் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது சீர்காழியில் சாலைப் பணி கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்று, ஒரு பகுதி முடிவடைந்திருக்கிறது. மீதமுள்ள 3¾ கிலோ மீட்டர் பணி நடைபெற்று வருகிறது. ஆற்றுப் பாலப் பணியும் இப்போது முடிவடைய இருக்கிறது. ஆனால், இரயில்வே மேம்பாலப் பணி மட்டும் இதுவரை இன்னும் தொடங்கப்படவில்லை. அதேபோன்று, நாகப்பட்டினத்திலும் சாலைப் பணி முடிவடையும் தருவாயில் இருக்கிறது. நாகப்பட்டினத்தில் உள்ள இரயில்வே மேம்பாலப் பணியும் இதுவரை தொடங்கப்படவில்லை. எனவே, சீர்காழியிலும், நாகப்பட்டினத்திலும் இரயில்வே மேம்பாலப் பணிகள் தொடங்கப்பட்டால்தான், இந்த மழைக் காலத்திற்கு முன்னாலே சாலை வசதி ஆரம்பமாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து இதை முடிப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி புறவழிச் சாலை சுமார் 27 கோடி ரூபாய் மதிப்பில் உப்பனாற்றில் ஒரு பெரிய பாலப் பணியையும், ஒரு இரயில்வே

மேம்பாலப் பணியையும் உள்ளடக்கிய பணி எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இரயில்வே மேம்பாலப் பணி நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது நம்முடைய நெடுஞ்சாலைத் துறையும், இரயில்வே துறையும் இணைந்து செய்ய வேண்டிய பணி என்கிற காரணத்தால், மதிப்பீடு தயார் செய்கின்றபோதும் சரி, நேர்பாடு தயார் செய்கின்றபோதும் இரு துறைகளுக்கும் ஒத்த கருத்து ஏற்பட்டு, அதன்பிறகு முடிவு செய்துதான் அந்தப் பணி தொடங்குகிறது. எனவே, அந்தப் பணி வைப்புத் தொகைப் பணியாக இருக்கின்ற காரணத்தால், இரயில்வே துறையே அந்தப் பணியைச் செய்வதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. IRCON என்கிற இரயில்வே துறையின் sister concern—க்கு, சகோதரி கம்பெனிக்கு அது விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை விரைவில் தொடங்கி, வரக்கூடிய மார்ச் மாதத்திற்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதேபோல, நாகப்பட்டினம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய புறவழிச் சாலைப் பணியும் நடைபெற்று வருகிறது. இரயில்வே பணியும், அதேபோல இரயில்வே துறையினுடைய சகோதரி நிறுவனமான IRCON Company—க்கு (sister concern) விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் வரக்கூடிய மார்ச் மாதத்தில் நிச்சயமாக நிறைவேறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம், பண்ருட்டியிலிருந்து கடலூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. அந்த மாநில நெடுஞ்சாலை, நெல்லிக்குப்பம் நகரில் பல இடங்களில் குறுகலாக இருப்பதன் காரணத்தால், போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, நெய்வேலி, பண்ருட்டி போன்ற பகுதிகளிலிருந்து கடலூர், பாண்டிச்சேரி செல்கின்ற வாகனங்களுக்கு வசதியாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தரும் திட்டம் குறித்து அரசு பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மானியக் கோரிக்கையிலேயே விளக்கமாகக் குறிப்பிட்டேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட இந்த 2 ஆண்டு காலத்தில் மட்டும், போக்குவரத்து நெரிசல் இருக்கக்கூடிய ஏறத்தாழ 10 நகரப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய நிலங்களைக் கையகப்படுத்துகின்ற பணி இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. எனவே, இதுபோன்ற கோரிக்கைகள் ஏராளமாக வந்திருக்கின்றன. மேலும், திருச்செங்கோடு, மயிலாடுதுறை, மன்னார்குடி போன்ற பகுதிகளுக்கெல்லாம் கோரிக்கை வந்திருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப இதுபோன்ற பணிகளை நிச்சயமாக அரசு எதிர்காலத்திலே படிப்படியாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப் பகுதியிலே புறவழிச் சாலை அமைப்பதற்கு, கடந்த 2, 3 ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து, மத்திய அரசுக்குக் கோப்பு அனுப்பப்பட்டுள்ள நிலையிலே, அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 209—ல் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி போன்ற நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி மாநில அரசின்மூலமாக பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, நேர்பாடுகளும் முடிவு செய்யப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி கிடைத்தவுடன் நிச்சயமாக அந்தப் பணி எதிர்காலத்தில் விரைவில் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டத்திலேயே மயிலாடுதுறை ஒரு முக்கியமான நகரமாக

இருக்கிறது. அந்த நகரத்தினுடைய சாலைகள் மிகவும் குறுகிய சாலைகளாக இருக்கின்ற காரணத்தாலே, அங்கே புறவழிச் சாலை அமைக்க வேண்டும். இதுவரைக்கும் அமைக்கப்படவில்லை என்று நான் 2, 3 முறையாக நம்முடைய அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தப் புறவழிச் சாலை விரைவிலே அமைக்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலிலேயே மயிலாடுதுறையைப் பற்றிக் குறிப்பிட்டேன். இதுபோன்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே நிதிநிலைமைக்கேற்ப, இதுபோன்ற பணிகள் எதிர்காலத்திலே படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**238—**

## குழந்தைகள் மையம்

***29426—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், முருகம்பாளையம் ஊராட்சியில் புதியதாக குழந்தைகள் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



திருப்பூர் வட்டம், முருகம்பாளையம் ஊராட்சியில் போதிய எண்ணிக்கையில் குழந்தைகள் மையங்கள் உள்ளதால், புதிய மையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சருடைய ஊரைச் சார்ந்த தென்மாவட்ட மக்கள் நிறைந்திருக்கக்கூடிய பகுதியாக அந்தப் பகுதி இருக்கின்றது. தற்போது கடுமையான நெருக்கடியான இடத்திலே அந்த மையம் இருக்கின்ற காரணத்தால், அங்குள்ள கூடுதலான மக்கள்தொகை எண்ணிக்கையும், அதனால் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்ற சூழலில், அந்த இடத்தின் தேவையைக் கருதி, அரசு மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு குழந்தைகள் நல மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகம்பாளையம் ஊராட்சியில் 1982 முதல் மொத்தமே இரண்டு மையங்கள்தான் இருந்தன. ஆகஸ்டு 2007–ல் 5 புதிய மையங்கள் தொடங்கப்பட்டன. உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் எங்கெல்லாம் குழந்தைகள் மையம் தேவையோ அங்கெல்லாம் தங்குதடையின்றி தொடங்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் குழந்தைகள் நல மையங்கள் உள்ளன. கிட்டத்தட்ட 50,344 மையங்கள் உள்ளன. திருப்பூரில் உங்களுக்குத் தேவையென்றால், நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய தொடக்கப்

பள்ளிகளில் சத்துணவுக் கூடங்கள் இன்னும் ஏற்படுத்தப்படாமல் சில இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில் உடனடியாக சத்துணவு மையங்களை உருவாக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதோடு, திருப்பூரிலுள்ள ஒன்றியப் பகுதிகளில் சத்துணவுக் கூடங்களில் காலியாக இருக்கின்ற பணியிடங்கள் கடந்த ஆண்டு நிரப்பப்பட்டன. ஆனால், தற்போது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட திருப்பூர் மாநகரத்தில் காலியாக இருக்கின்ற சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அதையும் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களைப் பணி நியமனம் செய்வதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்பட்டு, பணி நியமனம் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு முதல் முறையாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் 10 இலட்சம் ரூபாயை கண்டிப்பாக வழங்க வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அதன்வாயிலாக இந்த வருடம் மட்டும் கட்டடம் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 23 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். அதுமட்டுமல்ல, குடிநீர் வசதிக்காக 20 கோடி ரூபாயை உள்ளாட்சித் துறை வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டம் பொருளாதார ரீதியாக நிறைய factories உள்ள மாவட்டம். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் புதிய அரசாணையை வழங்கியுள்ளார்கள். அந்த அரசாணையின்படி நன்கொடை வழங்கினால் குழந்தைகள் நல மையம் அமைத்துக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. அந்த அரசாணையையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.



**239—**

**கட்டடம்**

***29393—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் **வினாவிற்கு விடையளிப்பாரா—**

மேலூர் தொகுதி, அ. வல்லாளபட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் தொகுதி, அ. வல்லாளபட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக நபார்டு திட்டத்தின்கீழ் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியிலுள்ள அ. வல்லாளபட்டி பேரூராட்சியில் இயங்கி வரும் கால்நடை மருந்தகம் ஓட்டுக் கொட்டகையில் மிகவும் மோசமாக இடிந்து விழக்கூடிய நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கடந்த முறை நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே இதற்கு முயற்சி செய்து, அந்தப் பேரூராட்சியில் தீர்மானம் போட்டு 2006-லே 25 சென்ட் இடத்தை இந்தத் துறைக்கு ஒப்படைத்தார்கள். அப்பொழுது அது நபார்டு திட்டம் 12-ன்கீழ் அங்கிருந்து 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனுப்பப்பட்டிருந்தது. இப்பொழுது அது மீண்டும் நபார்டு திட்டம் 16-ன்கீழ் அனுப்பப்பட்டதாகத் தகவல் தெரிகிறது. இடிந்த நிலையிலே உள்ள இந்த அ. வல்லாளபட்டி கால்நடை மருந்தகத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டே கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் மேலூர் தொகுதியிலே நம்முடைய பெருந்தலைவர், முன்னாள் காவல் துறை அமைச்சராக இருந்த கக்கன்ஜி பிறந்த ஊர் தும்பைப்பட்டி. இதே நபார்டு திட்டத்தின்கீழ் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே தும்பைப்பட்டி கிராமத்திலே கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இதையும் இந்த ஆண்டே கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல, பட்டூர் என்ற ஊராட்சியிலே ஒரு கால்நடை மருந்தகமும், மணப்பஞ்சேரி பஞ்சாயத்திலே, வல்லாளபட்டி மற்றும் புதூர் பகுதியிலே ஒரு கால்நடை மருந்தகமும் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேபோல மேலூர் தொகுதியில் இருக்கின்ற 16 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு ஊருக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஆர். சாமி:** அதேதான். மேலூர் தொகுதியில் இருக்கின்ற 16 கால்நடை துணைக் கிளை நிலையங்களுக்கு ஒரேயொரு மருத்துவ ஆய்வாளர்தான் உள்ளார். 16 கால்நடை துணை நிலையங்களுக்கும் ஒரு ஆய்வாளர் சென்று மருத்துவம் செய்வது சிரமமாக இருக்கிறது. ஆகையால், 16 துணைக் கிளை நிலையங்களுக்கும் மருத்துவர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை ஏற்கெனவே இந்தச் சபையிலே





அறிவித்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கட்டடம் கட்டும் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். அதேபோல, கால்நடை கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர்கள், மருத்துவர்கள் பணியில் இல்லை என்று கூறினார்கள். அதை அறிந்துதான் நம்முடைய தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் புதியதாக 444 கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவப் பட்டம் பெற்ற இளநிலை மருத்துவர்களைப் பணியமர்த்த உத்தரவிட்டுள்ளார்கள் என்பது இந்த மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்பட்டது. ஆகவே, நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் அரசு நிறைவேற்றும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சென்னையை அடுத்துள்ள புறநகர் பகுதிகளிலே, பெரும்பாலான விபத்துகள் இரவு நேரங்களிலே, கால்நடைகள் சாலையோரமாக படுத்து தூங்குவதாலும், குறுக்கே திடீரென்று வருவதாலும், இரண்டு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் நிறைய பேர் பாதிக்கப்படுகிறார்கள். உயிரிழப்பும் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் விஷ்ணுபிரசாத், இது கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டுவது குறித்த கேள்வி.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** Main கேள்விதான். நெடுஞ்சாலைத் துறைக்கும் இதைத்தான் வைத்திருந்தேன். கால்நடை துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் சுமுகமாகப் பேசி முடித்து கால்நடை உரிமையாளர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கின்ற கேள்விக்கும், மூலக்கேள்விக்கும் சம்பந்தமில்லை. உட்காருங்கள்.

வினா எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**240—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***25676—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, வி. கைகாட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, விலாங்குடி கைகாட்டியில் தற்போதைய சூழ்நிலையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக முதல்வராக இருந்தபோது, அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையிலே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, கடந்த காலத்திலே அது கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. இப்போது அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க போதிய இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ராஜா அவர்கள்கூட அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று பத்திரிகையிலே அறிவித்தார்கள். ஆனால், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அரசின் பரிசீலனையில் இல்லை என்கிறார்கள். ஆகவே, இது ஏற்கெனவே கலைஞர் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதால், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், அந்த இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், விலாங்குடி கைகாட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்காக மூன்று ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் செலவாகும் என்பதால் அதற்கான முன்மொழிவும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாற்றாக, தற்போது நிதியாதாரங்கள் துறையில் இல்லாத காரணத்தால், 20 இலட்சம் ரூபாய் செலவில் 2 மொத்த பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுவதற்காக, D.R.D.A. மூலம் ஒன்பது இலட்சம் ரூபாயும், துறை மூலமாக பதினோரு இலட்சம் ரூபாயும், ஆக 20 இலட்சம் ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது அரியலூர் மாவட்டத்தில் மாத்திரம் 15 குளிரூட்டும் மையங்கள் அமைப்பதற்காக விவசாய மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் TANUVAS மூலம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் National Agricultural Development Project இவற்றின்கீழாக 15 குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுவதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆறு மாத காலத்திற்குள்ளாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில், ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்படும். நிதியாதாரம் வருகின்ற நேரத்தில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிரந்தரமாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

*முற்பகல் 10–25*

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம் என்பதை மட்டும் காரணம் காட்டி, நிதியாதாரம் வரும்போது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிப்போம் என்று மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே திருச்சியில்தான் பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் பால் வளத் துறை M.D.-யிடம் கேட்டபோது, M.D. அங்கே இருந்து பிரிக்க விரும்பாமல் நிதியாதாரத்தைக் காரணம் காட்டி தள்ளிப் போட்டுக்கொண்டு போகிறார் என்ற உணர்வு இருக்கிறது. ஆகவே, உடனடியாக மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் முதல்வரிடம் பேசி நிதியைப் பெற்று அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு இருந்தாலும்கூட elected body மூலமாகத்தான், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வந்த பிறகு பொதுக் குழுவை, General body-ஐ கூட்டித்தான் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க முடியும். உறுப்பினர் கூறும் காரணங்களுக்காக அல்ல. தற்போதைய திட்ட மதிப்பீடு 5 கோடி ரூபாய் என்ற காரணத்தால், நிதியாதாரம் வருகின்றபோது நிச்சயமாக முன்னுரிமை கொடுத்து அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல்.

**திரு. கே. முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, கமுதியில் மூடப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையம் மீண்டும் திறக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** [illegible]மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் [illegible]ட்ட அந்த நிகழ்வு பற்றி அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு [illegible]து மறுபடியும் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் 43 கூட்டுறவுப் பால் பண்ணைகள் உள்ளன. அவற்றில் கொள்முதல் செய்யப்படும் பால் 80 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்பட்டி ஆவின் கூட்டுறவு ஒன்றியத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. மழைக் காலத்திலும், ஊர்தி பழுதடைந்துவிட்டாலும் குறித்த நேரத்தில் ஆவின் பால், கூட்டுறவு நிலையத்திற்குச் சென்றடைய முடிவதில்லை. அதனால் பால் அனைத்தும் கெட்டுவிடுகிறது. இதனால் எனது தொகுதியிலுள்ள இராமானுஜம்புதூர், முதலூர், நாசரேத் ஆகிய





ஊர்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு 131 மொத்த பால் குளிரூட்டு நிலையங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் பால் வரத்து 2,000 லிட்டருக்கு மேல் இருக்குமானால், நிச்சயமாக அந்தப் பகுதியில் மொத்த பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று வேறு எதையும் எடுக்கும் idea இல்லை. உட்காருங்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

[2008 மே 9

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2008 மே 9]

### (ஆ) தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10–30

## 5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 23– தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 37 –மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

---

**(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை

[பேரவைத் தலைவர்] [2008 மே 9

எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 22, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 234, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9050, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.



2008 மே 9] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 12546, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13796, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14484, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16682, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1734, திரு. பெ. மோகன்.

[2008 மே 9

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2130, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15630, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16361, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,204,94,31,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,43,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16934, திரு. ஆர். வைத்திலிங்கம்.



2008 மே 9]

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல இடங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சும் பணி, தமிழகத்தில் நிகழ்வதைத் தடுத்து நிறுத்த, அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும் கூட்டுப்பொறுப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5502, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் கள்ளச் சாராய விற்பனையை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2008 மே 9] [திருமதி பெ. கமலாம்பாள்]

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6995, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளும் நகரின் மையப் பகுதியில் உள்ளதை மாற்றம் செய்து நகரின் கடைக்கோடியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7041, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதி, அரசு டாஸ்மாக் கடைகளில் கூடுதல் விலைக்கு மது விற்பதன்மூலம் ஊழியர்கள் கையாடல், தில்லுமுல்லு போன்ற முறைகேடுகளில் ஈடுபடுவதைத் தடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7434, திரு. ஆர்.கே. பாரதி மோகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7764, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள மதுக் கடைகளைப் படிப்படியாகக் குறைக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*53,84,75,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8206*, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி சீரழிந்து வருவதைத் தடுக்க மதுக் கடைகளை மூட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*53,84,75,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8884*, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் உள்ள முருகன் கோயில் பிரசித்திபெற்றது. தினமும் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது. முருகன் கோயிலிலிருந்து 10 அடி தூரத்தில் உள்ள மதுபானக் கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*53,84,75,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8963*, திரு. எஸ். ஜெயபால்.





**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதி, நெய்யூர் பேரூராட்சியில் நெய்யூர் சர்வதேச புற்றுநோய் மையம் மற்றும் மருத்துவமனைக்கு எதிரில் டாஸ்மாக் மதுபானக் கடை செயல்படுகிறது. இந்தக் கடையின் பக்கத்திலிருக்கும் கிறிஸ்தவ வழிபாட்டுக் கூடத்திற்கும், மருத்துவமனைக்கும் ஏராளமான நோயாளிகள் மற்றும் பெண்கள் வரும்பொழுது இந்த மதுபானக் கடையினால் பெரும் இடையூறு ஏற்படுவதால், இந்த மதுபானக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*53,84,75,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *9140*, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கள்ளச் சாராயம், கஞ்சா போன்ற சட்ட விரோதப் பொருட்களை விற்பனை செய்பவர்கள்மீது கடுமையான சட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*53,84,75,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *10021*, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக்கில் பணிபுரியும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய *37* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10125, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10201, திரு. இல. வேலுசாமி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11228, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோமனூர் டாஸ்மாக் கடை, மருத்துவமனை, பேரூராட்சி அலுவலகம், பஸ் நிலையம் உள்ள பகுதியில் உள்ளதால் அதை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11572, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரவு 12 மணி வரை மதுக் கடைகளைத் திறந்து விற்பனை செய்வதால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுவது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்





வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11757, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் போலி மதுபானம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது குறித்தும் கடையின் பணியாளர்கள் தவறாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பின் கருணையுடன் வேலையில் சேர்ப்பது மற்றும் அவர்களின் பாதுகாப்பு குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11846, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் நகரில் பேருந்து நிலையத்தில் இருக்கின்ற டாஸ்மாக் கடை அப்புறப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12123, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் பேருந்து நிலையத்தில் 50 அடி இடைவெளியில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் அருகில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையை அரசு மூட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12453, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிப்பது குறித்தும், பூரண மதுவிலக்கு கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12951, திரு. டி. ஜெயக்குமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13075, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம், திருவாலங்காடு ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் அதிகமாக உள்ள கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13388, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் பெருமளவில் போலி மதுபானம் விற்பதைத் தடுக்க தனி அலுவலர்களை நியமித்து,



கடைகளைச் சோதனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14016, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் டாஸ்மாக் விற்பனையகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14145, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் நகரில் வங்கிகள், தேவாலயம், மகளிர் காவல் நிலையம், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள், கோவில்கள், டெலிபோன் ஆபீஸ், அரசு அலுவலகங்கள், கார் மற்றும் வேன் ஸ்டாண்டு போன்றவை அமைந்துள்ள முக்கிய இடங்களில் அரசு டாஸ்மாக் மதுபானக் கடை திறக்கும் முயற்சியைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14935, திரு. எஸ். இராசசேகரன். இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2008 மே 9

வெட்டுத் தீர்மானம் எண் 15215, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் நலன் காக்கும் வகையில் கள்ளுக் கடைகளைத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15739, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளில் பணியாற்றும் சுமார் 35,000 ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16518, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் கடைகளில் மதுபான பாட்டில்கள், அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிடக் கூடுதலாக விற்பனை செய்யப்படுவதாக வரும் புகார்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16778, திரு. சு. குணசேகரன்.



2008 மே 9]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பனையிலிருந்து இறக்கும் பதநீரைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17078, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,84,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, (உள் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சுயேற்றப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புக்களை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 201 முதல் 283 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று 3 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த 3 மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சி என்பதற்கு அறிஞர்கள் கூறுகின்றபோது, புரட்சி என்பது பூகம்ப வேகம், புரட்சி என்பது புலித் தாயின் நகைப்பு, புரட்சி என்பது புரட்டின் எதிரி, புரட்சி என்பது பூரண பரிமாற்றம், இத்தகைய புரட்சியின் தத்துவங்களை உள்ளடக்கிக் கொண்டு, புரட்சியின் வடிவமாக தமிழக அரசியலில் அவதரித்த தலைவி, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அச்சத்திலிருந்தும், பசியிலிருந்தும் தமிழக மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்து, அமைதியின் மடியில் தமிழகத்தை அமர வைத்து, சட்டம் ஒழுங்கைச் சரி செய்து சரித்திர சகாப்தம் படைத்து, சாந்தியும் சமாதானமும் உருவாக, கலவரமில்லாத பூமியாக, தென்றல் உலாவும் சோலையாக தான் ஆட்சி செய்த காலத்தில் இந்தத் தமிழகத்தை உருவாக்கிக் காட்டிய எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என் வணக்கத்தைத் தெரிவித்து, என் உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மானியக் கோரிக்கை எண் 22, மானியக் கோரிக்கை எண் 23, மானியக் கோரிக்கை எண் 37 ஆகிய துறைகளின்மீது நான் இன்றைக்குப் பேசுவதற்கு முழு முதற்காரணமாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசைசையைத் தட்டும் ஒலி) பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்திற்கு வரும்பொழுது தமிழகத்தைத் துண்டாடுகின்ற வகையிலே 6 தீவிரவாதக் குழுக்கள்



அன்றைக்குத் தமிழகத்தில் வேரூன்றியிருந்தன. அந்த 6 தீவிரவாதக் குழுக்களையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திக் காட்டிய பெருமை, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இராஜிவ் காந்தி கொலைக்குப் பிறகு தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அறவே ஒழித்துக்காட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீவிரவாதத்திற்கு என்றுமே வளைந்துகொடுக்காமல், நிமிர்ந்த மனதோடு தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடிய தலைவர் ஒருவர் தமிழகத்திலே இருக்கின்றார் என்றால், அதற்கு முழு முதற் சொந்தக்காரர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டியதால், மத்திய அரசிற்கு உண்டான 'Z plus' பாதுகாப்பிற்குரிய பாதுகாப்பை மத்திய அரசு வழங்கியும், பிற மாநில முதலமைச்சருக்கு வழங்குவதுபோல புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வழங்காததால், இன்றைக்கு நீதிமன்றத்தை நாட வேண்டிய ஒரு சூழ்நிலை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற மாவட்டம் சென்னை. இந்தச் சென்னையிலே 2006 ஆம் ஆண்டு அபாயகரமான கொலைகள் என்று நடந்த கொலைகளின் எண்ணிக்கை 7. 2007 ஆம் ஆண்டு அது 6. ஆனால், தற்போது 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் 10 கொலைகள் நடந்தேறியுள்ளன, இந்த 4 மாதகாலத்தில். அதேபோன்று பெரிய திருட்டுக்கள், 2006 ஆம் ஆண்டு 15, 2007 ஆம் ஆண்டு 16, இந்த 4 மாதகால 2008 ஆம் ஆண்டில் 18 பெரிய திருட்டுக்கள். அதேபோன்று, வழிப்பறி 2006–ல் சுமார் 8, 2007–ல் 10, 2008–ல், இது இந்த 4 மாதங்களில் 12. அதேபோன்று, சிறிய திருட்டுக்கள், 2006 ஆம் ஆண்டு 105, 2007 ஆம் ஆண்டு 110, இந்த 4 மாதங்களில், இந்த 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் 108. 2006–2007 ஆம் ஆண்டுகளில் ஒப்பிடுகின்றபோது ஆண்டு முழுவதும் நடைபெற்ற பெரிய திருட்டுக்கள், திருட்டுக்கள், வழிப்பறி, கொள்ளைகளை ஒப்பிடுகின்றபோது, இந்த 4 மாதகாலங்களில் திருட்டுக்களின் அளவு அதிகமாகி சென்னை மாநகரம் பீதிக்குள்ளாக்கப்பட்டிருப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்,

சென்னை மாநகரம் என்பது உலக வங்கிக் கிளையைத் தொடங்குவதற்குத் தேர்வு செய்யப்பட்ட மாநகரமாக இருந்தது. ஆனால், இன்றைக்கு உள்ளூர் மக்களுக்குக்கூட போதிய பாதுகாப்புத் தர முடியாத மாவட்டமாக, இந்தச் சென்னை மாநகரம் திகழ்கின்றது என்பதை இந்த ஆட்சியினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 10—50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைபேசி ஒட்டுக்கேட்பு விவகாரம். இந்தத் தொலைபேசி ஒட்டுக்கேட்பு விவகாரம் என்பது 1885 ஆம் ஆண்டு Telecom சட்டம் 5 உட்பிரிவு (2)—ன்படி தீவிரவாதிகள், மதவாத சக்திகள் இவர்களுடைய நடவடிக்கைகளை ஒட்டுக்கேட்டு நாட்டின் இறையாண்மைக்கு பங்கம் வராமல் இருப்பதற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், ஒருவருடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட வேண்டும் என்றால் அதற்கு உள் துறைச் செயலாளர் அவர்கள் உத்தரவு வழங்க வேண்டும். அந்த உள் துறைச் செயலாளரின் உத்தரவோடு, தலைமைச் செயலாளர் நிலையில் ஒரு குழுவை அமைத்து, இந்த ஒட்டுக்கேட்புக்குண்டான தன்மை இதில் இருக்கிறதா என்று ஆராய்ந்து, அதன்பிறகே உத்தரவு வழங்கப்பட வேண்டும். இந்த Telephone ஒட்டுக்கேட்பு விவகாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால், இந்தப் பிரச்சினை தொடங்கி ஒரு மாத காலமாகியும், இதுவரையிலும் உள் துறைச் செயலாளர் அவர்கள் அதற்குண்டான பதிலை அளிக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் கமிஷன் நியமித்த பிறகு, இந்த கமிஷன் குறித்து இதுவரை Gazette—ல் வெளியிடப்படவில்லை. Gazette—ல் வந்த பிறகு, இந்த கமிஷனிடம் யாராவது புகார் தெரிவிக்க வேண்டும் என்றால் தெரிவிக்கலாம் என்று அனைத்து பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும். அதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. ஒட்டுமொத்தமாக பார்த்தால். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. Wrong ஆக சொல்லக்கூடாது. அப்படி ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. திரு. சேகர்பாபு அவர்கள் அதைப் பார்க்காமல் இருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.



**திரு. பி.கே. சேகர்பாபு:** கமிஷன் அமைக்கப்பட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்த பிறகு, அடுத்த நாள் Telephone ஒட்டுக்கேட்பு விவகாரத்தில் சம்பந்தப்பட்டத் துறை அதிகாரியின் வீடு ரெய்டு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த கமிஷன் இந்தப் பாதையில்தான் செல்ல வேண்டும் என்று இந்த ஆட்சி கோடிட்டுக் காட்டுவதுபோல் அந்த ரெய்டு நடந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் சட்டம். உச்ச நீதிமன்றத்தில் ஒரு நாட்டின் காவல் துறை என்பது தனித் தன்மையுடன், பொது நோக்குடன், மக்களின் நலனுக்காக செயல்பட வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, 2006 ஆம் ஆண்டு திரு. பிரகாஷ்சிங் என்பவர் தொடுத்த ஒரு வழக்கில், அன்றைக்கு உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியது. அதனுடைய சாராம்சம், அடிக்கடி அதிகாரிகளை பணி இட மாற்றம் செய்யக்கூடாது. தகுதியுடையவர்களை D.G.P. போன்ற பதவிகளில் நியமிக்க வேண்டும். (குறுக்கீடு)—காவல் துறை அதிகாரிகள் தவறு செய்யும்போது அவர்கள்மீது விசாரணை செய்து (குறுக்கீடு) உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருப்பதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்—நடவடிக்கை எடுப்பதற்குக் குழு அமைக்க வேண்டும். இந்த உச்ச நீதிமன்ற பரிந்துரை என்பதை ஏற்றுக்கொண்டு, அனைத்து மாநிலங்களிலும் Police Act என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்தச் சட்டத்தை பீகார் போன்ற பின்தங்கியுள்ள மாநிலம்கூட இன்றைக்கு நடைமுறைப்படுத்தியிருக்கிறது. இந்தச் சட்டத்தை, எப்போது தமிழக அரசு நிறைவேற்றி அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 1-2-2005 அன்று இந்தியக் காவல் பணியினுடைய எண்ணிக்கை 214. அன்றைக்கு பணியில் இருந்தவர்களின் எண்ணிக்கை 193 பேர்கள். தற்போது உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதுபோல் 31-3-2008 வரை 189 பேர்கள் பணியில் இருப்பதாகவும், தேவைப்படக்கூடிய பணியாளர்களின் எண்ணிக்கை 236 என்று கூறியிருக்கிறீர்கள். அப்படியென்றால், மீதம் தேவைப்படுகின்ற இந்தியக் காவல் பணியினுடைய எண்ணிக்கை 47. இப்படி 47 பணியிடங்களைக் காலியாக வைத்திருக்கின்றபொழுது, தலைமைப் பொறுப்பிலே இருந்து காவலர்களைப் பணி செய்வதற்கு

[திரு. பி.கே. சேகர்பாபு] [2008 மே 9

முடுக்கி விடுகின்றவர்களுடைய இந்தப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றபொழுது எப்படி நாட்டிலே சட்டம்—ஒழுங்கு சீராகச் செயல்படும்? இது எப்படி இருக்கிறது என்றால், 'மாலுமி இல்லாத கப்பலாக'த்தான் இந்த காவல் துறை இன்றைக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

*முற்பகல் 10—55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008—2009 ஆம் ஆண்டு உங்களுடைய கொள்ளை விளக்கக் குறிப்பிலே பக்கம் 49—ல் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். 2006 ஆம் ஆண்டு கொலைகளுடைய எண்ணிக்கை 1,274 என்று, 2007 ஆம் ஆண்டு கொலைகளுடைய எண்ணிக்கை 1,521 என்று, அதேபோன்று ஆதாயக் கொலைகள் 2006 ஆம் ஆண்டு 89 ஆக இருந்தது. 2007 ஆம் ஆண்டு 102 ஆக உயர்ந்துள்ளது. வழிப்பறிக் கொள்ளை 2006 ஆம் ஆண்டு 450 ஆக இருந்தது. 2007 ஆம் ஆண்டு 495 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு குற்றங்கள் பெருகியிருக்கின்றன. இந்த நிலையில் காவல் துறையை நவீனப்படுத்த கடந்த ஆண்டு 101 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தீர்கள். இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே 51 கோடி ரூபாய் ஒதுக்குவதற்குண்டான வரைவுத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், ஆண்டுக்காண்டு கொலைக் குற்றங்களும், ஆதாயக் கொலைகளும் கூடுகின்ற இந்த வேளையிலே காவல் துறையை நவீனப்படுத்துவதற்குண்டான நிதியை கூட்ட வேண்டுமே தவிர, நீங்கள் குறைத்திருக்கிறீர்கள். இன்றைக்கு நடைபெறுகின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபொழுது எப்படி நர்கீஸ் புயலின் தாக்குதலுக்குப் பலியானோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகிறதோ, எப்படி தமிழகத்திலே விலைவாசி ஏற்றம் நாளுக்குநாள் கூடுகிறதோ அதைப்போல், ஆண்டுக்காண்டு உங்கள் ஆட்சியில் கொலைகளும், ஆதாயக் கொலைகளும் கூடிக்கொண்டே போகிறது என்பதை இந்த ஆட்சியாளர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களுக்குத் தண்டனை பெற்றுத் தருவது என்பது ஒரு பணி. குற்றங்களே நடக்காமல் முன்கூட்டியே கண்காணித்துத் தடுப்பது என்பது ஒரு முறை. இன்றைக்குத் தென் மாவட்டங்களில் சட்டம்—ஒழுங்கு என்பது முற்றிலும் சீரழிந்து வருகிறது. ஜாதிக் கலவரங்களாலும், சமூக விரோத



2008 மே 9] [திரு. பி.கே. சேகர்பாபு]

சக்திகளாலும் தென் மாவட்ட மக்களுடைய இயல்பு நிலை முழுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

மதுரையிலே கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 7 ஆதாயக் கொலைகள் நடந்திருக்கின்றன. இதற்குண்டான தடயங்கள் இருந்தும் இந்தக் குற்றவாளிகளை விரைவாகப் பிடிப்பதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. புதியதாக காவல் துறைக்குப் பொறுப்பேற்ற காவல் துறைத் தலைவர் அவர்கள், சட்டம்—ஒழுங்கு சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கூட்டம் நடத்திய இடத்திற்கு அருகிலேயேகூட இரண்டு கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. தென் பொதிகை தவழுகின்ற திருநெல்வேலி மாவட்டத்தில் மதக் கலவரத்தால் பல உயிர்கள் பலி. தேசிய தலைவர்கள் சிலையில் தொடர் அவமதிப்பை ஏற்படுத்தியதால், மக்களிடையே ஏற்பட்டுள்ள கொந்தோளிப்பான நிலை, எலியார் பகுதியில் காவல் துறையினர் வாகனம் எரிப்பு, 7 மோட்டார் சைக்கிள் வாகனங்கள் எரிப்பு, ஒரு காவல் துறை ஆணையாளர் தன்னையும், தன்னுடைய வாகனத்தையும் காப்பாற்றிக்கொள்ள வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய ஒரு நிலை. மேலும், தருமபுரி மாவட்டத்தில் அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் கொள்ளைபோன சம்பவம். தென்னகரம் சார் நிலைக் கருவூலத்தில் காவலர் வசமிருந்த துப்பாக்கி களவுபோன நிலை, கோவையில் காவலுக்கு நின்ற காவலரின் துப்பாக்கிப் பறிப்பு, கொடைக்கானல் வருஷ நாட்டில் தீவிரவாதிகளின் தடம், ஒட்டுமொத்தமாக இன்றைக்குத் தமிழகம் ஆயுதச் சந்தையாக மாறியுள்ளது. இந்த நிலையில் காவல் நிலையங்கள் இரவிலே பூட்டப்பட வேண்டும் என்று காவல் துறையே தகவல் தெரிவிக்கிறது. சென்னை மாநகரத்தில் கொள்ளையர்களிடமிருந்து தப்பிக்க ஜன்னல்களைப் பூட்டி வைத்துக்கொள்ள வேண்டும் என்று காவல் துறை உத்தரவு பிறப்பிக்கிறது. சென்னையிலே கடந்த இரண்டு தினங்களிலே நடைபெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் பூட்டிய வீட்டிலும் களவு போயிருக்கின்றது, ஆள் இருக்கின்ற வீட்டிலும் அவர்களைக் கட்டி வைத்துவிட்டு, அவர்கள் விருப்பம்போல் அந்த வீட்டிலும் களவாடிச் சென்றிருக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழகம் முழுவதும் கொலை, கொள்ளை, இனக் கலவரம், மதக் கலவரம், வழிப்பறி, திருட்டு, மாநிலம் முழுவதும் தடையில்லாமல் நடைபெற்று வருகிறது. எங்கள் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றபோதெல்லாம் அதை இரும்புக் கரம் கொண்டு அடக்கி,

இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று பெயரெடுத்தத் தலைவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-00*

இன்றைக்குத் தமிழகம் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறியிருக்கின்றது. ஒரு கருத்தினைச் சொல்வார்கள். சட்டத்திற்கு அடங்கிய சுதந்திரம் என்பது அடுப்பிலே இருக்கின்ற நெருப்பைப் போன்றது. அடுப்பிலே இருக்கின்ற நெருப்பு பால் காய்ச்சுவதற்கும் உணவு சமைப்பதற்கும் பயன்படும். சட்டத்திற்கு அடங்காத சுதந்திரம் என்பது தரையின்மீது பரவிய நெருப்பு; கூரையின்மீது பரவிய நெருப்பு. கூரையின்மீது பரவியிருக்கின்ற இந்தத் தீவிரவாதம் என்ற நெருப்பானது இந்த நாட்டையும், தமிழகத்தையும் வெகுவிரைவில், முதலமைச்சர் துரிதமான நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், சீரழித்துவிடும் என்பதை இந்த சர்க்காருக்கு நான் எச்சரிக்கையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையச் சூழ்நிலையில் பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலைகள் நடப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. இந்த நிலையை எடுத்துப் பார்த்தால் முத்தாப்பேட்டை, கிருஷ்ணா கால்வாயில் 35 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் கழுத்தறுக்கப்பட்டு கொலை; சென்னை மாநகரில், குன்றத்தூர் போலீஸ் எல்லையில் மார்ச் மாதம் 19 ஆம் தேதி எரிந்த நிலையில் 30 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் கொலை; மடிப்பாக்கம், மேற்கு அண்ணா நகர், கொரட்டூர், முகப்பேர் என நான்கு இடங்களில் கழுத்தறுக்கப்பட்டு பெண்கள் கொலை; சென்னையை அடுத்த தாம்பரம் அருகே ஏப்ரல் 8 ஆம் தேதி ஆசிட் வீசப்பட்ட நிலையில் ஒரு பெண் கொலை; மதுரவாயல் பை-பாஸ் சாலையில் பூங்காவனம் என்ற பெண் மர்மமான முறையில் கொலை; இப்படி அடுக்கடுக்காக தமிழ்நாடு முழுவதும் பெண்கள் கொலை செய்யப்பட்டு இதுவரையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலை. பெண்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்படுவதால், தமிழகத் தாய்மார்கள் பயத்தால் இன்றைக்கு உறைந்துபோய் இருக்கிறார்கள். பெண் பாதுகாப்பிற்கு காந்தி கண்ட கனவை நினைவாக்கிய தலைவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் காந்தியினுடைய கனவு, கானல் நீராகின்ற ஒரு சூழ்நிலை, இந்த ஆட்சியினரால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல் துறையினரே இன்று தாக்கப்படுகின்ற நிலை. கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சமூக விரோதிகள் காவல் துறையின் துணையோடு பல்வேறு இடங்களில் அராஜகம், அட்டூழியங்களை நடத்தினார்கள். இது ஒரு புறம். கடந்த 2 மாதங்களாக வருகின்ற செய்தி, உள்ளாட்சித் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் காவல் துறை துணையோடு, காவல் துறையினரை வைத்து தாக்கியது ஒரு புறம். இன்றைக்கு உங்களுடைய உட்கட்சித் தேர்தலில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது இதுவரையிலே குறுக்கிடவில்லை. ஆனால், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின்போது இந்த ஆட்சியிலே ஏதோ காவல் துறை தவறாக நடந்து கொண்டதாகச் சொன்னார்கள். உங்களுடைய ஆட்சியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மேயருக்குப் போட்டி போட்டபோது, எந்த அளவிற்கு வன்முறையிலே அ.தி.மு.க.வினர் ஈடுபட்டார்கள் என்பதும், *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்த அளவிற்கு வாக்கு எண்ணக்கூடிய அந்தச் சாவடிகளையே கைப்பற்றினார்கள் என்பதும், வாக்குகள் எண்ணப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்திற்குள்ளே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட அனுமதிக்க முடியாமல் காவல் துறையினரால் வெளியேற்றப்பட்டார்கள் என்பதும் கடந்த கால வரலாறு. எனவே, உள்ளாட்சி மன்றத் தேர்தலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நேர்மையாக நடத்தினோம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே சட்டத்திற்கு விரோதமாக, பல முறைகேடுகள் நடந்தன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்றைக்கு மேயராக வந்திருக்க முடியாது. அது ஒன்று. *(குறுக்கீடுகள்)* அடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொன்னால் வெட்கக்கேடு. எந்த அளவிற்கு அந்த வாக்குச் சாவடியிலே அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் வாக்கு எண்ணிக்கையிலே தவறு செய்ய முயற்சித்தார்கள் என்பதைத் தெரிந்து நாங்களே ஆளுநரிடத்திலே சென்று முறையிட்டதற்குப் பிறகு, ஆளுநர் தலையிட்ட காரணத்தினால்தான் இலட்சக்கணக்கான வாக்குகளிலே வெற்றி பெற வேண்டிய திரு. ஸ்டாலின் அவர்கள் சில ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடத்திய லட்சணத்தை நீதிமன்றத்திலேயே (குறுக்கீடுகள்) நீதிமன்றத் தீர்ப்பிலேயே 99 இடங்களுக்கு மீண்டும் (மணியடிக்கப்பெற்றது) மறு தேர்தல் நடத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னாலேயே அந்த வார்டுகளுக்கெல்லாம் மறு தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்த ஒரு முதலமைச்சர் இந்தியாவிலே கலைஞர் ஒருவர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தோழமைக் கட்சியினரேகூட அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த, கண்டனத்தைத் தெரிவித்த காட்சிகள் எல்லாம் அரங்கேறியதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தரமணியில் ரூ.30 கோடி செலவில் காவல் துறை இயக்குநர் அலுவலகம் கட்ட உத்தரவு பிறப்பித்த தலைவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பக்கம் 31, பத்தி 68–ல் ஊனமாஞ்சேரியில் ரூபாய் 50 கோடி செலவில் போலீஸ் அகாடமி 5–3–2008 அன்று முதலமைச்சர் திறந்து வைத்ததாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். இதை முழுவதுமாகக் கட்டுவதற்கு



வரைவைத் தயாரித்து, போதிய நிதியை ஒதுக்கித் தந்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மேலும், பக்கம் 2–ல் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் டைம் ஆகவில்லை, சார். 11 நிமிடங்கள்தான் ஆகியிருக்கிறது. நீங்கள் குறிப்பைப் பாருங்கள். பக்கம் 2–ல், பத்தி 5–ல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10–45–க்கு ஆரம்பித்தீர்கள். 11–06 ஆகிறது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை, இல்லை. எழுதிவைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** பக்கம் 2–ல் பத்தி 5–ல் 755 உதவி ஆய்வாளர்கள் உட்பட 5,000 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அந்தப் பயிற்சி அகாடமியில் பயிற்சி பெறுகின்ற காவலர்களுக்கு கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரையில் பயிற்சிப் பணி தொடங்கப்படவில்லை. அங்கே பயிற்சி பெறச் சென்ற காவலர்கள், அங்கே இருக்கின்ற செடி, கொடிகளைப் பிடுங்குவதற்கும், புல்லை வெட்டுவதற்கும், தண்ணீர் பாய்ச்சுவதற்கும், காவல் துறை பயிற்சி பெறுகின்றவர்களுக்காக நடத்தப்படுகின்ற canteen–ஐ வெளிப்புறமாக வைத்து, அந்த canteen–ஐ பொது மக்களுக்கும் பயன்படுத்துகின்ற நிலையை ஏற்படுத்தி, அந்த canteen–லே பணியாற்றுவதற்கும் பயிற்சியாளர்கள் இன்றைக்குப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

இறுதியாக, தவழும் கைகளைத் தாங்கிடும் தலையில்தான் சுமையேறும், தழுவிடும் கைகளில்தான் குழந்தை வரும், குளிர்ந்த முகம்தான் திரும்பத் திரும்பப் பார்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் கையில் பெல் இருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன். *(குறுக்கீடு)* உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள். நீங்கள் 23 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* என்ன, திரு. வேல்துரை?

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, 2002-லே மணிமுத்தாறு வாய்க்கால் வெட்டப்பட்டது, முதல் ரீச்சிலே தண்ணீர் கிடைக்கவில்லையென்று சொல்லி—ஆனால், என்னுடைய குடும்பத்திலே யாரும் அதில் தலையிடவில்லை—எங்களுடைய குடும்பத்தாரைப் பழிவாங்குகிற நோக்கத்திலே, கூட்டணியிலே இருந்தபோதும்கூட, எங்கள்மீது, 45 பேர்மீது பொய் வழக்குப்போட்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த 45 குடும்பங்களும் இன்றைக்குத் தெருவிலே நிற்கின்றன. அந்த அளவிற்குச் சட்டம்-ஒழுங்கு மோசமாக இருந்தது 2002-லே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்பதை இப்போது தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கூட்டணியிலே இருந்தோம், அதனால்தான் case போட்டார்கள் என்கிறீர்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கால் நூற்றாண்டு பொது வாழ்வின் முதல் மனிதரே, தந்தை பெரியாரின் பகுத்தறிவு வடிவம் நீங்கள். அறிஞர் அண்ணாவின் பேச்சுக்கு இலக்கணம் நீங்கள். உமது நாற்றங்காலில் விளையாத பயிர்கள் இந்தச் சபையில் இல்லை. முத்தமிழின் முதல் மகனே, முரசொலிக்கும் தமிழ் மகனே, நீங்கள் பிடரல் காஸ்ட்ரோவும், நெல்சன் மண்டேலாவும் சேர்ந்த மொத்த உருவம். பொய்யான புரட்சிகளுக்கு நடுவில் மெய்யான புரட்சியாளராய் இருப்பவர் நீங்கள் மட்டுமே. *(மேசையைத் தட்டும் ஒலி)*

உங்கள்மீது அடித்த வெயில் சற்று இடம் மாறி அடித்திருந்தால் பாதி சமுத்திரம் பாலைவனமாகியிருக்கும். உங்கள்மீது வீசிய புயல், சற்று இடம் மாறி வீசியிருந்தால் இமயமலைகூட இடம் பெயர்ந்திருக்கும். எதையும் தாங்கும் எஃகுக் கோட்டையல்லவா நீங்கள்! அதனால்தான், தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாய் இந்தக் கோட்டையில் உங்கள் வாசம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எங்கள் அரசியல் ஆசானே, உம்மில் தமிழ் செழித்தது, செம்மொழி ஆனது. தமிழகத்தின் புதிய புறநானூறே, உங்களால் தமிழன்





வரலாற்றுக்கும் ஒரு தனித் தத்துவம் கிடைத்தது. தமிழ்த்தாய், தமிழ் மகனாய் ஒட்டுமொத்த உருவமாய்க் காட்சியளிக்கும் எங்கள் தலைவரே, உங்கள் பாதமலர்களைப் பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு நிதி அமைச்சர் ஐயா பேராசிரியர் அவர்களையும் வணங்கி, இந்தியத் திருநாட்டின் இரண்டாவது கலைஞரே, நெல்லைச் சீமையில் போர்ப்பரணி பாடிய எங்கள் கழகத் தளபதியே, இருபத்தைந்து இலட்சம் இளைஞர்களின் இமயமே, வருங்கால வரலாறே, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்மூலம் *(மேசையைத் தட்டும் ஒலி)* ஊர்தோறும் குளங்கள் அமைத்தும், நூலகம் நிறுவியும் குடிமக்கள் காக்கும் எங்கள் கோமானே, சுய உதவிக் குழுக்களைக் காக்கும் சுட்டு விழிச் சுடரே! உன் சுட்டு விரல் நீளும் திசைகளில் நாங்கள்; உங்கள் சீரிய சிந்தனை வீச்சில் வளர்கிறது தமிழகம்! வணங்குகிறேன் தளபதியாரே! *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* கலைஞர் விட்டுவிட்டுச் சென்ற அரிசி எல்லாம் புழுத்த அரிசி என்று சொன்னவர்கள் மத்தியிலே, நல்ல அரிசி என்று நாட்டுக்கு எடுத்துக் காட்டிய விழுப்புரம் மாவட்டச் செயலாளர், எங்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைக் காணிக்கையாக்கி, காவல் துறை, தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

காவல் துறையினர் காக்கிச் சட்டைக்குள் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள்; தியாகத்தின் திருவுருவங்கள்; இவர்கள் விழித்திருப்பதால்தான் நாட்டில் மக்கள் அமைதியாய் உறங்குகிறார்கள். இவர்கள் மழையில் நனைபவர்கள்; வெயிலில் காய்பவர்கள். இடி விழுந்தாலும், அடி விழுந்தாலும், எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள்; 24 மணி நேரம் இவர்களுக்கு மட்டுமே சொந்தம். சூரியனின் சுற்று வட்டப் பாதையில் கோள்களைப்போல, மக்களின் சுற்று வட்டப் பாதையில் இவர்கள். இவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதால், மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி மலர்கிறது.

[திரு. தா. உதயசூரியன்] [2008 மே 9

இந்தியாவின் இளைய இராணுவமான இந்தத் துறை முதல்வர் கலைஞர் பொறுப்பில்; எடுத்தார் சிறந்த முடிவு! உருவானது போலீஸ் கமிஷன்கள். இந்தியாவிலே முதல் மாநிலமாக, 1969 ஆம் ஆண்டு திரு. கோபாலசாமி அவர்களுடைய தலைமையில் முதல் போலீஸ் கமிஷனை உருவாக்கித் தந்த பெருமை எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

போலீசாருடைய நலனைக் கருதியும், காவல் துறையினருக்கு ஊதிய உயர்வு இல்லாததை எண்ணியும், அவர்களுடைய குடும்ப அவல நிலையையும் எண்ணிப் பார்த்த எங்களுடைய தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நானெல்லாம் பிறப்பதற்கு முன்பாகவே, 47 ஆண்டுகளுக்கு முன்பு என் பெயரிலேயே 'உதயசூரியன்' என்ற ஒரு நாடகத்தை ஏற்பாடு செய்து, அந்த நாடகத்தில் அவர் எழுதிய பாடலை நான் இப்போது படித்துக் காட்ட விரும்புகிறேன்.

*'ஆராரோ ஆரிரரோ, ஆணழகா கண் வளராய்,*
*அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளர வந்த*
*அஞ்சுகமே கண் வளராய்!*
*போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்குப்*
*புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!*
*துப்பாக்கி எடுத்துக்கிட்டு போகின்ற நொப்பனிடம்,*
*பழம் பாக்கி கேட்டுக்கிட்டு வழிமறிக்கும் கடன்காரன்*
*வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண் வளராய்!*
*நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு,*
*ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே!*
*குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற குலவிளக்கே!*
*கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண் வளராய்!*
*காக்கி உடை போட்டுக்கிட்டு, சேப்புத்தொப்பி மாட்டிக்கிட்டு,*
*நாட்டைக் காக்கும் வீரனுக்கு, உன்னைப் போல நாலுவந்து பிறந்துவிட்டால்,*
*காவி உடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா,*
*கண்மணியே கண் வளராய்!*

என்றார் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2008 மே 9] [திரு. தா. உதயசூரியன்]

1947 ஆம் ஆண்டு போலீசாருடைய நலனிலே அக்கறை கொண்ட கலைஞர் அவர்கள்தான், முதலிலே போலீஸ் கமிஷனை திரு. ஆர்.ஏ. கோபாலசாமி அவர்களுடைய தலைமையில் அமைத்து, அந்த கமிஷனுடைய மொத்தப் பரிந்துரைகளான 133-ல்—எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது—115 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 1989 ஆம் ஆண்டு திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்களுடைய தலைமையிலே இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் 112 பரிந்துரைகளில், 87 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திக் காட்டியவரும் எங்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே போலீஸ் துறைக்கென்று மூன்றாவது போலீஸ் கமிஷனை திரு. ஆர். பூரணலிங்கம் அவர்களுடைய தலைமையிலே உருவாக்கி, அந்தக் கமிஷனின் நடைமுறைக்கு உயர்நிலைக் குழு அமைக்கப்படுகின்ற சூழ்நிலையை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இப்போது உருவாக்கி, இந்தத் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் என்பதைப் பெருமையோடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதன்முதலாகத் தமிழகத்தில் காவல் துறையினருக்கு கமிஷன் அமைக்கின்றபோது, காவலர்களுடைய ஊதியம் ரூ.65/- என்றிருந்ததை, அந்தக் காவல் துறையினுடைய முதல் கமிஷனின் சிபாரிசினுடைய அடிப்படையில், மாதச் சம்பளத்தை ரூ.200/– ஆக உயர்த்தித் தந்தவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். அடுத்து, இரண்டாவது கமிஷனில் ரூ.200/– ஆக இருந்ததை, ரூ.500/– ஆக உயர்த்தித் தந்ததும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் வாயிலாக காவலர்களுக்கு ஊதியத்தை உயர்த்துகின்றபோது, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக எடுத்துக்கொண்டு, ரூ.500/– ஆக இருந்ததை உயர்த்தி, ரூ.65/– மாதச் சம்பளத்திலிருந்த காவலர்களுக்கு இப்போது 6,500/– ரூபாய் சம்பளம் கிடைக்கின்ற வகையிலே வழிவகுத்தவர்தான் எங்களுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. தா. உதயசூரியன்] [2008 மே 9

ஏதோ உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததாகவும், எந்தவொரு போலீஸ் அதிகாரியையும் மாற்றக்கூடாது என்பதைப் போலவும் இங்கே பேசுகின்றபோது சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

சிலப்பதிகாரத்திலே ஒரு பாடல் உண்டு:

பாண்டிய நாட்டின் வேந்தன் 'கோவலனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க' எனக் கட்டளையிட, கோவலனைக் கொல்வதற்கு வந்த காவலர்களிலே ஒருவன், 'இவன் கள்வன் அல்லன்' என்று சொன்னதாகச் சிலம்பு சொல்கிறது.

*'பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட,*
*இலக்கண முறைமையில் இருந்தோன்,*
*ஈங்கிவன் கொலைபடு மகனல்லன் என்று கூறும்'*

என்று காப்பியக் கவிஞர் இளங்கோ அடிகள் பாடுகிறார்கள்.

முற்பகல் 11–15

காவல் துறையில் யார் நல்லவர்கள், யார் திறமை மிக்கவர்கள், யார் நியாயமாக நடப்பவர்கள், யார் நேர்மையாக நடப்பவர்கள் என்றெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்து உயர் பதவிகளை அமைப்பதுதான் ஒரு துறையினுடைய சாராம்சம். அதைத்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அப்போதைக்கப்போது ஏற்படுத்துகின்ற நிலைமைகளைப் பார்த்து செய்வார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒரே நாளில் D.G.P.–ஐ மாற்றுகின்ற நிலைமையெல்லாம் கடந்தகால ஆட்சியில் உண்டு என்பதை இந்தநேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தீவிரவாதத்தைப் பற்றி இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். வனப் பகுதிகளில் தீவிரவாதிகள் பயிற்சி முகாம்களை அமைக்க இரு முறை முற்பட்டபோது அவர்களின் முயற்சிகளை முறியடித்த மாவோயிஸம் குழுவைச் சார்ந்தவர்களைக் கைது செய்து, அந்தத் தீவிரவாதத்தைத் தலைதூக்க விடாமல் தடுத்த முதலமைச்சர்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிமாநிலங்களிலேயிருந்து வருகின்ற அடிப்படைவாதத் தலைவர்கள்கூட பத்திரமாக வந்து செல்லும் அமைதிப் பூங்காவாக



[திரு. தா. உதயசூரியன்]

2008 மே 9]

இந்த மாநிலம் இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தீவிரவாதத்திற்கும் சட்டம்–ஒழுங்கிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லும்போது அதை நாம் ஒரு கேலிக்குரிய செய்தியாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டம்–ஒழுங்கு என்பது வேறு, தீவிரவாதம் என்பது வேறு. தீவிரவாதம் என்பது ஒரு வட்டாரத்திற்கோ அல்லது மாநிலத்திற்கோ அல்லது ஒரு நாட்டிற்கோ உரிய செயல் அல்ல. இது அகில உலக செயல். உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அதேபோல் Senior Advocate, திரு. பாலி நாரிமன் போன்றவர்களெல்லாம் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றத்தில் வைக்கின்றபோது, பல மாநில அரசாங்கங்களைக் கலைக்கச் சொல்லி எதிர்க்கட்சிகள் வைத்த அந்த வாதம் எடுபடாமல் போனதைத் தெரிந்துகொண்டும், அரசியல் பிழைப்பிற்காக தீவிரவாதத்தைப் பேசுகின்ற கேவலமான செயல்களையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

2002 ஆம் ஆண்டு வீடுகளிலே நடந்த கன்னக் கொள்ளைத் திருட்டுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2002 ஆம் ஆண்டு 5,532 குற்றங்களும், 2003 ஆம் ஆண்டு 4,849 குற்றங்களும், 2004 ஆம் ஆண்டு 4,147 குற்றங்களும், 2005 ஆம் ஆண்டு 3,738 குற்றங்களும் நடைபெற்ற காட்சிகள் உண்டு. ஆனால், எங்கள் தலைவர் கலைஞர் ஆட்சியில், இந்த 2007ஆம் ஆண்டில் 3,717 குற்றங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், திருட்டு வழக்குகள், 2002 ஆம் ஆண்டு 18,614 குற்றங்களும், 2003 ஆம் ஆண்டு 18,213 குற்றங்களும், 2004 ஆம் ஆண்டு 17,530 குற்றங்களும், 2005 ஆம் ஆண்டு 15,853 குற்றங்களும், நடைபெற்றன. எங்கள் கலைஞர் ஆட்சியில் 2006 ஆம் ஆண்டு அது 13,651 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. 2007 ஆம் ஆண்டு 13,217 குற்றங்களாகக் குறைந்துள்ளது.

அதேபோல, பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட குற்றங்கள் 2002–லே 1,866 குற்றங்கள், 2003 ஆம் ஆண்டு 2,022 குற்றங்கள், 2004 ஆம் ஆண்டு 1,861 குற்றங்கள், 2005 ஆம் ஆண்டு 1,264 குற்றங்கள், 2006 ஆம் ஆண்டு எங்கள் கலைஞர் ஆட்சியில் 1,179 குற்றங்களாக இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. 2007 ஆம் ஆண்டு 1,558 குற்றங்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, போதை மருந்துத் தடுப்புக் குற்றங்கள் 2002 ஆம் ஆண்டு 3,657 குற்றங்கள், 2003 ஆம் ஆண்டு 4,727 குற்றங்கள், 2004 ஆம் ஆண்டு 5,916 குற்றங்கள், 2005 ஆம் ஆண்டு 4,390 குற்றங்கள் நடைபெற்றுள்ளன. எங்கள் கழக ஆட்சியில்

[திரு. தா. உதயசூரியன்] [2008 மே 9

2006 ஆம் ஆண்டு 3,161 குற்றங்களும், 2007 ஆம் ஆண்டு 2,051 குற்றங்களாக இன்றைக்கு குறைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல் விபச்சார வழக்குகள் 2002 ஆம் ஆண்டு 3,488 குற்றங்கள், 2003 ஆம் ஆண்டு 2,839 குற்றங்கள், 2004 ஆம் ஆண்டு 3,022 குற்றங்கள், 2005 ஆம் ஆண்டு 2,777 குற்றங்கள். எங்கள் கழக ஆட்சியில் 2006 ஆம் ஆண்டு 1,732 குற்றங்கள், 2007 ஆம் ஆண்டு 1,199 குற்றங்கள், இப்படியாகக் குற்றங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபோது சுட்டிக்காட்டினார்கள், சட்டம்-ஒழுங்கு சரியாக இருந்த காலக்கட்டத்தில்தான் இங்கே உலக வங்கி வந்தது என்று எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் இங்கே பேசியது விந்தையாக இருக்கிறது. எங்கள் மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய அரும்பெரு முயற்சியினால்தான் சென்னைக்கு உலக வங்கி அலுவலகம் வந்தது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சியில், போலீசாரையே போலீசார் தாக்குகின்றார்கள் என்றெல்லாம் இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கடந்த கால ஆட்சிக் காலத்தில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சாமி கொலை, முத்தாண்டிகுப்பம் காவல் நிலையக் கற்பழிப்பு, I.A.S. அதிகாரி திருமதி சந்திரலேகா மீது acid வீசியது, தேர்தல் கமிஷனர் திரு. டி.என். சேஷன் அவர்கள் தங்கியிருந்த ஓட்டல்மீது தாக்குதல், நீதியரசர் திரு. சீனிவாசன் அவர்களின் வீட்டின்மீது தாக்குதல், திரு. சுப்பிரமணிய சாமிக்கு உயர் நீதிமன்றத்தில் காட்டிய காட்சியெல்லாம் சட்டம்-ஒழுங்குக்கு அடையாளமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் காவல் துறையின் நவீன நலனைக் கருதி, 2005-2006 ஆம் ஆண்டில் 1,344 கோடி ரூபாயாக இருந்ததை 2008-2009 ஆம் நிதியாண்டில் இந்தத் துறையை மேலும் வலுப்படுத்திட மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2,427 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்துள்ளார்கள். காவலர் குடியிருப்புகளுக்கு கடந்தகால ஆட்சியில் 1991-96 ஆம் ஆண்டுகளில்



2008 மே 9] [திரு. தா. உதயசூரியன்]

3,500 குடியிருப்புகள்தான் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. 1996-2001 ஐந்தாண்டு கால கழக ஆட்சியில் 12,503 காவலர் குடியிருப்புகள் கட்டித் தர ஆணையிடப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டன. அதற்குப் பிறகு, 2006-2007 கழக ஆட்சியில் 3,000 குடியிருப்புகள் கட்டித் தர ஆணையிடப்பட்டும், 2007-2008-ல் மேலும் 2,000 வீடுகள் கட்டித் தர ஆணையிடப்பட்டுள்ளது.

காவல் துறையின் வருங்கால பயிற்சித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வசதிகள் அடங்கிய உயர் பயிற்சியகம், போலீஸ் அகாடமி ஒன்று சென்னைக்கு அருகே வண்டலூரில் கடந்த 15-03-2008 ஆம் தேதி அன்று டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக 1997 ஆம் ஆண்டில் பணம் வைப்பீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்க தனிச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டில் பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவும் தொடங்கப்பட்டது. வங்கிப் பணிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை தகுதி பெறாத நிதி நிறுவனங்களில் பொதுமக்களால் முதலீடு செய்யப்பட்ட வைப்புத் தொகையை அதன் முதிர்ச்சி காலத்திற்குப்பின் பட்டுவாடா செய்யத் தவறிய நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுக்கும்வகையில் காவல் துறையில் இப்பிரிவு அமைக்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டில் 118.28 கோடி ரூபாய் வைப்புத் தொகையை முதலீட்டாளர்களுக்குப் பெற்றுத் தந்ததும் கழக ஆட்சி என்பதை இந்த நேரத்தில் பெருமையோடுச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

புதிய காவல் நிலையங்களை உருவாக்குவதிலே எங்கள் கழகத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதிகமாக செய்திருப்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். 1996-2001 கழக ஆட்சியில் 53 காவல் நிலையங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். 2001-2006 கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் 22 காவல் நிலையங்கள் மட்டுமே உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றன. 2006-2008 வரை இரண்டாண்டு கழக ஆட்சியில் 11 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துக் காவல் நிலையங்கள். 2001-2006 அ.தி.மு.க. ஆட்சியில் 7 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) 2006-2008 வரை

இரண்டாண்டு கால கழக ஆட்சியில் 24 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) புறக் காவல் நிலையங்கள். 1996–2001 கழக ஆட்சியில் 36 புறக் காவல் நிலையங்கள் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டன. 2001–2006 அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு புறக் காவல் நிலையம்கூட அமைக்கப்படவில்லை. 2006–2008 வரை இரண்டாண்டு கால கழக ஆட்சியில் 22 புறக் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஐயா கலைஞர் அவர்களிடம் இரண்டே இரண்டு கோரிக்கைகளை வைத்து விடைபெற விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியில் உள்ள கள்ளக்குறிச்சியில் மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றது. அதற்கு அரசுக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஊராட்சி ஒன்றியத்தின்மூலமாக நிலம் கொடுக்கப்பட்டு துறைக்கு வரப்பெற்றிருக்கிறது. ஆகவே, கள்ளக்குறிச்சியில் உள்ள மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தரவேண்டும்.

அதேபோல, என் தொகுதியில் கீழ்குப்பம் என்கின்ற கிராமத்தில் இருந்த புறநகர் காவல் நிலையத்தை சென்ற ஆண்டு காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அந்தக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடமும், காவலர்கள் குடியிருப்பதற்குக் குடியிருப்புகளும் கட்டித்தர வேண்டுமென்று உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இரண்டு கோரிக்கைகள் என்று சொன்னீர்கள். இரண்டு கோரிக்கைகளும் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திரு. தா. உதயசூரியன், சொல்லுங்கள் சீக்கிரம்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையின் சார்பில் கள்ளக்குறிச்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. என் தொகுதியில் இருக்கிற சின்ன சேலம் அல்லது நயினார்பாளையம் கிராமத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையமும், சங்கராபுரம் தொகுதியில் மூங்கில்துறைப்பட்டு என்ற இடத்தில் சர்க்கரை ஆலைகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே ஒரு தீயணைப்பு



நிலையமும் இந்த நிதியாண்டிலே கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்...... (குறுக்கீடு) திரு. கி. ஆறுமுகம், சொல்லுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலே என்னுடைய செங்கற்பட்டு நகரிலே இருக்கிற செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற இராஜேஷ்குமார் என்ற மாணவன் தமிழ்நாட்டிலேயே அதிகமாக 1,182 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார். அவருக்கு என்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை அவருடைய கல்விக்கு ஊக்கமளிக்கிற வகையிலே பரிசாக வழங்குகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இதே மதிப்பெண்களை திருச்செங்கோடு மாணவி தாரணியும் எடுத்திருக்கிறார். எனவே, இந்த மாணவனை, மாணவியைப் பாராட்டுகின்ற வகையிலே நம்முடைய தமிழக அரசாங்கம் அவர்களைக் கௌரவிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை உள்ளிட்ட காவல் துறையின்மீது நான் பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அருமை அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி, என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

காவல் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு முன்னதாக, நன்றி தெரிவிக்கின்ற ஒரு நிகழ்வினை இங்கே சுட்டிக்காட்டிவிட்டு, எனது உரையினைத் தொடங்கலாம் என்று நினைக்கின்றேன். ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் பொருளாதார வசதியின்மை காரணமாக, சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து படிக்க இயலாத நிலையை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற 300 ஆதி திராவிட மாணவ மாணவியர், தங்களின் விருப்பத்தின்படி சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்ந்து 11 ஆம் வகுப்பு படிப்பதற்காக, 168 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்து, வரலாறு படைத்தார்கள். அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக, இவ்வாண்டு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு ஒருவர்வீதம், 388 மாணவ, மாணவியரை சிறந்த தனியார் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை பயில ஆகும் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் என ஆணையிட்ட தமிழக முதல்வர் அவர்களை நான் மனமாரப் பாராட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்று ஆண்டவனைக் கூறுவார்கள். ஆனால், இன்று ஆண்டு கொண்டிருப்பவரை ஆதியும் நீரே, அந்தமும் நீரே என்று கூறுவதற்குக் காரணம் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவை நடப்பதற்கும், தீயவற்றை அகற்றுவதற்கும் முதலும் நீரே, முடிவும் நீரே என்று கூறுவது சாலப் பொருத்தமானதாக இருக்கும் என்பதால், தமிழகத்தின் காவல் துறைமூலம் சட்டத்தையும், அமைதியையும் காத்துத் தரும் கருணையே, உம்மை வணங்குகின்றேன்.

கருப்புச் சட்டைக்காரன், காவலுக்குக் கெட்டிக்காரன் என்று சாதாரணமாக ஒரு பழமொழி உண்டு. அது பூட்டுக்குப் பெயர். இன்றைக்கு அந்தப் பூட்டையெல்லாம் உடைத்தெறியக்கூடிய சூழ்நிலை வந்தாலும், அதைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுக்கின்ற காவல் துறையை உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். கவிஞர் கண்ணதாசன் அவர்கள் ஒரு பாடல் பாடியிருக்கின்றார், “உடலுக்கு உயிர் காவல், உலகுக்கு ஒளி காவல், கடலுக்குக் கரை காவல், கண்ணுக்கு இமை காவல்” என்று. அதுபோல, 6 கோடி மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும், பாதுகாப்பிற்கும், அச்சமற்ற நிலைக்கும் தாங்கள்தான் காவல் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





பத்திரிகைகளிலே வருகின்ற சில செய்திகளைப் படிக்கின்றபோது, உண்மையிலேயே வேதனையாகவும் இருக்கின்றது. தமிழகத்தை இந்தியத் திருநாட்டிலேயே முதல் மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக, உங்கள் வயதைப் பற்றியும் கவலைப்படாமல், உங்கள் உடல் நிலையைப் பற்றியும் கவலைப்படாமல், கிட்டத்தட்ட 24 மணி நேரத்திலே, 20 மணி நேரம், தமிழகத்தையும், தமிழகத்தினுடைய ஏற்றத்தையும் பற்றியே நிச்சயமாக நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அந்த நினைப்பு, தமிழகத்திலே உங்களுக்குக்கீழே பணியாற்றுகின்றவர்களுக்கும் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக தமிழகம் மிக விரைவிலே இந்தியாவினுடைய முதல் மாநிலமாக மாறுவதற்கு மிகச் சிறந்த எதிர்பார்ப்பு இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 25–12–2007 அன்றும், 12–4–2008 ஆகிய நாட்களில் Lifeline Rigid–பெருங்குடி பகுதியில் செல்வி சோபனாவும், சந்தோஷ் மருத்துவமனையில், திருவான்மியூரைச் சேர்ந்த வேறு ஒரு மாணவியும் முறையான சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினால், +2 படிக்கின்ற மாணவிகள் இறந்திருக்கிறார்கள். செய்தி மற்றும் ஊடகங்கள்மூலம் செய்தி வெளியாகியும், இதுநாள் வரையில் முதல் தகவல் அறிக்கை பதிவே செய்யப்படாமல் காவல் துறை இருப்பது, பொறுப்பான செயலாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதுகுறித்து நிச்சயமாக தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

முற்பகல் 11–30

காவல் துறையோடு அரசியல்வாதிகளுக்கும், குற்றவாளிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்ற காரணத்தினால், கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்புகள் என்று நிகழ்ந்து சட்டம்–ஒழுங்கு சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. இந்த உறவை முழுமையாகத் துண்டித்தால் மட்டுமே, சட்டம்–ஒழுங்கு நிலைநிறுத்தப்படும்.

பெண்கள் இரவு நேரங்களில் கைது செய்யப்படக் கூடாது. பகலில் கைது செய்யப்பட்டு, மாலைக்குள் விசாரணையை முடித்திட வேண்டும். இதனால், பல ஏழைப் பெண்களுடைய உயிர் பாதுகாக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்கள் தவறு செய்தால் ஆண்களைத் தேடிப் பிடிக்க வேண்டும். ஆண்களைப் பிடிப்பதற்கு

[திருமதி டி. யசோதா]



பதிலாக, அவர்களுடைய தாயையோ அல்லது மனைவியையோ அல்லது சகோதரியையோ பிடித்து, அங்கு அவர்களுக்குப் பதிலாக வைப்பது என்பது எந்தவகையிலும் நியாயம் கிடையாது. ஆகவே, குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள். அவர்களுடைய வீட்டிலேயிருக்கின்ற பெண்களைக் கைது செய்து அவர்களை போலீஸ் காவல் நிலையத்திலே வைப்பதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் ஆகின்றன. திராவிடப் பாரம்பரியம் தமிழகத்தை ஆண்டு 40 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும்கூட, இன்றைக்கும் இரட்டை டம்ளர் முறை ஒழிக்கப்படவில்லை என்ற நிலையை எண்ணி நான் உண்மையிலேயே வேதனைப்படுகின்றேன்.

வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் அதிகமாக உயிரிழப்பிற்கு ஆளாகிறார்கள். இவ்வழக்குகளைக் காவல் துறைமூலமாகவோ அல்லது ஆர்.டி.ஓ. மூலமாகவோ விசாரணையை நடத்தாமல், மாவட்ட மனித உரிமை நீதித் துறையின்மூலமாக விசாரணை நடத்தினால், விசாரணையைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே நடத்த வேண்டுமென்ற வழிக்காட்டுதல்களையும் காட்டினால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு தங்கத்தைவிட நிலத்தினுடைய விலை அதிகரித்துக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. நில புரோக்கர்களால் விலை அதிகரித்து இருக்கின்ற காரணத்தினாலே, ஒரே நிலத்தை மூன்று டாக்குமெண்ட்ஸ் தயார் செய்து இன்றைக்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேயே இதுபோன்ற டாக்குமெண்ட்ஸ் தயார் செய்து, அடமானம் வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நில மோசடிகளிலே நிச்சயமாக காவல் துறை தன்னுடைய கவனத்தை மிக அதிகமாகத் திருப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சீட்டு கம்பெனிகள். சீட்டு கம்பெனிகள்மூலமாக, நிறையபேர் தங்களுடைய பொருளாதார சூழ்நிலையிலே பணத்தை எல்லா இடங்களிலும் இந்தச் சீட்டு கம்பெனிகளுக்குச் செலுத்தி, அதன்மூலமாக அப்பணம் திரும்பக் கிடைக்காத காரணத்தினால், காவல் துறையை நாடுகிறார்கள். தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் சரியான வழிவகை இருந்தும், அது பொதுமக்களுக்கு முழுமையாகப்



[திருமதி டி. யசோதா]



பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. இதற்கு அரசு நிர்வாகம் முறையாகச் செயல்பட்டு, அந்த மக்களுக்கு அந்தத் தொகைகள் திரும்பக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல் நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் காவலர்கள் இல்லை. குறைவாகவே இருக்கிறார்கள். அதிலும், காவல் சுற்றுப் பணிக்கு காவலர்கள் மிக, மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், குற்றங்கள் தடுக்கப்படாமல் போய்விடுகின்றன. ஒரு காவல் நிலையத்திற்கு இத்தனை காவலர்கள் என்று சொல்கின்றபோது, அங்கே அந்தக் குறிப்பிட்ட அளவிற்கு காவலர்கள் இல்லை. அதற்கும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அதிலேயும்கூட மேல் அதிகாரிகளின் வீட்டிற்கு போய், அவர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்வதற்கு அந்தக் காவலர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, ஒரு காவல் நிலையத்திற்கு இத்தனை காவலர்கள் என்று நியமிக்கப்படுகின்றபோது, அந்தக் காவலர்கள் அந்தக் காவல் நிலையத்திலேதான் வேலை செய்ய வேண்டும். உயர் அதிகாரிகளினுடைய வீடுகளிலே எந்தவிதமான அதிகாரப்பூர்வமான மாறுதலும் இல்லாமல், அவர்கள் அதிகாரிகளுடைய வீடுகளுக்குப் போய் வேலை செய்கின்ற காரணத்தினாலே, பல வழக்குகள் இன்றைக்கு நிச்சயமாக கண்டுபிடிப்புகள் இல்லாமல் கிடப்பிலே போடப்பட்டுக் கிடக்கின்றன. ஆகவே, வழக்கு விசாரணைக்காக வழங்கப்படும் செலவுத் தொகை காவல் நிலைய அதிகாரிகளுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. உயர் அதிகாரிகள் பற்றுச்சீட்டு தயார் செய்து, நிலைய அதிகாரிகளின் கையெழுத்தைப் பெற்று பயன்படுத்திக்கொள்வதாக அறிகிறேன். ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தொகை புலனாய்வு செய்வதற்காக அரசு கொடுக்கவேண்டுமோ அதை நிச்சயமாக அந்தக் காவல் நிலையத்திற்குக் கொடுத்து அதை அந்தக் காவல் நிலையம்தான் பயன்படுத்த வேண்டும். உயர் அதிகாரிகள் அதைப் பயன்படுத்தக் கூடாது. அதுமட்டுமல்ல, அந்தக் காவல் துறைக்குக் கொடுக்கின்ற அந்தத் தொகையை அவர்கள் எப்படி அதைப் புலன் விசாரணைக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்காணிக்க ஒரு குழுவை நியமித்து அந்தக் குழுவிலே மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து அந்தப் புலன் விசாரணைத் தொகை ஒவ்வொரு காவல் நிலையங்களிலேயும் எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள், எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்கின்ற அந்த விவரத்தினை அரசாங்கத்திற்கு அந்தக் குழு தெரிவிக்க வேண்டுமென்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கித் தந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி டி. யசோதா]

[2008 மே 9

முற்பகல் 11–35

பட்டப் படிப்பு படித்து 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாக இருப்பவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர்களாகவோ அல்லது உதவி ஆய்வாளர்களாகவோ பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கு விசாரணை தற்போது Head Constable, Inspector மூலமாக, S.I. மூலமாக நடைபெறுகிறது. தற்போதைய காலகட்டத்தில் Cell phone, கணினி ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிற காரணத்தால், வழக்குகளுடைய தன்மையும் மாறி ஜாதிச் சண்டை, ஆதாயக் கொலைகள், இரட்டைக் கொலைகள் போன்றவற்றை, S.P., A.I.G., D.I.G., ஆகியோர் புலன் விசாரணை அதிகாரிகளாக இருந்து செய்தால் நல்ல பலன் கிடைக்கும், அரசுக்கும் நல்ல பெயர் கிடைக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் நிலையங்களில் உள்ள வாகனங்களுக்குத் தரப்படும் பெட்ரோல், டீசல், 15 நாட்களுக்குக்கூட வருவது இல்லை. அதனால் குற்றவாளிகளைப் பிடிக்க, குற்றவாளிகளிடமே பெட்ரோல் போடும் நிலையைத் தவிர்க்க அரசு, காவல் நிலையங்களில் உள்ள வாகனங்களுக்கு பெட்ரோல், டீசல்களை கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Bureau pulling வழக்கு பற்றித் தெரியும். எங்கே பார்த்தாலும், ஜன்னல்களை உடைத்து, Bureau-வை இழுத்து கொள்ளை அடிக்கின்ற நிலைமை. (குறுக்கீடு) கிரில் கொள்ளையர்கள். அந்த கிரில் கொள்ளையர்களைக் கண்டுபிடித்து, அவர்களிடமிருந்து பொருள்களையெல்லாம் மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு இன்னும் அது கிடப்பிலேயே கிடக்கின்றது. அந்த கிரில் கொள்ளையர்களைக் கண்டுபிடித்து அந்தப் பொருள்களையெல்லாம் திருப்பிக் கொடுத்த ஒரு நிகழ்ச்சியிலேகூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்கு நகைகளைத் திருப்பிக் கொடுக்கின்றபோது 'இந்தாருங்கள், உங்கள் மோதிரம் என்று கொடுக்கின்றபோது, அவர் அதை வாங்கி கையிலே மாட்டிக்கொண்டார். அப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார், 'இந்த மோதிரத்தை கையிலே போட்டிருந்தால் அது திருடு போய் இருக்காது, அதை கையிலே போடாமல், நீ வேறு எங்கேயோ, பீரோவிலே வைத்தாய், அதனாலேதான் திருடு போய்விட்டது' என்று சொல்லியிருக்கிறார்.



[திருமதி டி. யசோதா]

2008 மே 9]

அதுபோன்ற கொள்ளையர்களைக் கண்டுபிடிக்கக்கூடிய அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு என்று உங்களிடத்திலே நல்ல மனசு இருந்தும், அதற்கான நேரம் வரவில்லையோ, என்னவோ தெரியவில்லை. இந்த நேரத்தில், அந்த கிரில் கொள்ளையர்களைக் கண்டுபிடித்த அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நீங்கள் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம்.

**திருமதி டி. யசோதா:** என்ன ஒரு நிமிடமா? ஆகவே, இன்றைக்கு...... ஒரு நிமிடம் என்று சொன்ன காரணத்தால் எதுவுமே பேச முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த மோதிரம் திருடு போனதைப் பற்றிப் பேசியதிலே கொஞ்சம் நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

**திருமதி டி. யசோதா:** இல்லை, இல்லை. அது முக்கியமானது ஆயிற்றே. சொல்லித்தானே ஆக வேண்டும். பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும்—மற்ற விவரங்களுக்கு நான் செல்லவில்லை, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும்— மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவருடைய பெரும் கருணையால் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி என்று சொன்னால் நித்தம் நித்தம் ஒரு தொழிற்சாலைக்குக் கையெழுத்து போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பன்னாட்டு நிறுவனங்களை என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குக் கொண்டு வந்து கொடுத்த பெருமை அவரையே சாரும். அதுமட்டுமல்ல, கையெழுத்து போடுவதோடு நிறுத்தவில்லை, அவர் என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு, மாதங்கள் தவறினாலும் தவறும், ஆனால், அவர் வருவது தவறுவது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாதத்திற்கு ஒரு தொழிற்சாலையை அங்கே திறந்து வைத்துக்கொண்டிருக்கிறார். அவர், உடல்நிலையைப் பற்றிக் கவலைப்படவில்லை, அவருடைய வயதைப் பற்றி அவர் நினைப்பதே இல்லை. அங்கே வந்து ஒரு தொழிற்சாலையை, தமிழகத்திலே எந்த ஒரு மூலையிலே இருந்தாலும்கூட, ஒரு மாதத்திற்கு ஒரு தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று அங்கே பன்னாட்டு நிறுவனங்களைக் கொண்டு வந்து இப்போது திறப்பு விழா நடத்திக்கொண்டிருக்கிறார்கள். யார் கண் பட்டதோ தெரியவில்லை, பக்கத்திலே இருக்கின்றவர்களெல்லாம் பொறாமைப்பட்டார்கள்.

ஸ்ரீபெரும்புதூரிலே உங்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை வந்துகொண்டிருக்கின்றது, உனக்கு என்ன பஞ்சம், உனக்கு என்ன பஞ்சம் என்று சொன்னார்கள். ஆனால் இன்று பஞ்சம் வந்திருக்கின்றது. அங்கே தொழில் அமைதி குலையக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அங்கே தொழில் அமைதி குலையக்கூடிய ஆபத்தினை தடுக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே உங்களால்தான் அங்கே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. உங்கள்மீது நம்பிக்கை வைத்துதான் பன்னாட்டு நிறுவனத்தினர் அங்கே வந்திருக்கின்றார்கள். உங்கள்மீது நம்பிக்கை வைத்துதான், சட்டம்–ஒழுங்கு தமிழ்நாட்டிலேதான் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில் வந்திருக்கின்றார்கள். அப்படி வந்திருக்கின்ற நேரத்திலே இன்றைக்கு சிறிய சிறிய காரணங்களுக்காக, மிகப் பெரிய அளவில் தொழில் அமைதியைக் கெடுக்கக்கூடிய, அமைதி குலையக்கூடிய நிலையை நீங்கள் கண்டிப்பாக தடுத்து நிறுத்த வேண்டும். அந்தப் பன்னாட்டு நிறுவனத்தினர் தமிழ்நாட்டுக்கு வருகின்ற வேளையில் இந்த நிலை நீடித்தால், அவர்கள் அச்சப்பட்டு, கண்டிப்பாக அவர்களால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) நான் யார் பெயரையும் சொல்லவில்லை. நான் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நன்மாறன், அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** நான் என் தொகுதியைப் பற்றித்தான் பேசுகின்றேன். நான் மதுரையைப் பற்றிப் பேசவில்லை. ஆகவே, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 30 ஆம் தேதி அங்கே இராமானுஜர் கோயில் குடமுழுக்கு விழா. இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ஸ்ரீபெரும்புதூருக்கு 29 ஆம் தேதி வருகின்ற காரணத்தினால், நான் 29 ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூரிலேயே தங்கினேன். அமைச்சர் அன்று தங்குகின்றார் என்ற காரணத்தினாலே நானும் அங்கே தங்கினேன். அன்று காலையில் எனக்குச் செய்தி தெரிகின்றது. மாலை 6 மணிக்கு அங்கே ஹூண்டாய் கம்பெனியில் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. பிரச்சினை ஆரம்பிக்கின்ற நேரத்திலே (குறுக்கீடு) இதோ சொல்லி முடித்துவிடுகின்றேன். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன், நான் வேறு எதையும் சொல்லவில்லை. காவல் துறை மானியத்தைவிட்டு வேறு எங்கும் செல்லவில்லை. அங்கேயே நிற்கின்றேன். மாலை 6 மணிக்கு பிரச்சினை ஆரம்பிக்கின்றது.



6 மணி ஆயிற்று. 7 மணிக்கு மறுபடியும் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. 7 மணிக்குப் பிறகும் பிரச்சினை தொடர்கின்றது. உள்ளே இருந்தவர்களுக்கும், வெளியே போகின்றவர்களுக்கும் பிரச்சினை. அங்கே security room அடித்து நொறுக்கப்படுகின்றது, கணினிகள் அடித்து நொறுக்கப்படுகின்றன, அங்கே இருந்த கேமராக்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலையிலே காவல் துறையினர் அங்கே வந்தார்கள். 29 ஆம் தேதி மாலை 6 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 7 மணி வரையிலும் பேச்சுவார்த்தை என்று சொல்லி, காவல் துறையைச் சேர்ந்த ஒருவரே அங்கே தாக்கப்பட்டதற்குப் பிறகும், security–யினர் தாக்கப்பட்டதற்குப் பிறகும் அங்கே நிலைமை என்னவென்று சொன்னால், காவல் துறை அதிகாரிகள் (குறுக்கீடு) நான் காவல் துறையைப் பற்றிதான் பேசுகின்றேன். வேறு யாரைப் பற்றியும் நான் பேசவில்லை. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் காலை 7–30 மணிக்குதான் தங்களுடைய நடவடிக்கையை எடுக்கின்றார்கள் என்று சொன்னால், இதிலே அவ்வளவு காலதாமதம் ஏன் என்றுதான் (மணியடிக்கப்பெற்றது) நான் கேட்க விரும்புகின்றேன். ஒரு பழமொழி சொல்வார்கள், நகக் கண்ணிலேயே கிள்ளி எறிய வேண்டியதை, கடப்பாரை கொண்டு எடுக்க வேண்டிய அளவுக்கு பிரச்சினை வளர்வதற்கு என்ன காரணம்? ஏன் இதில் காலதாமதம் என்றுதான் நான் கேட்க விரும்புகின்றேன். அதைத் தடுத்திருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கின்றோம். அடுத்து நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது, அப்போது நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) திருமதி யசோதா அவர்கள் பொதுவாகச் சொல்லும்போது, there won't be any point of order. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகின்றேன். நான் பல விஷயங்களைப் பேச வேண்டுமென்று இருந்தேன். நான் யாரையும் குறை சொல்லவில்லை. இப்போதுகூட சொல்கின்றேன், சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பிரச்சினை பெரிதாக ஆகிவிட்டது. அதில்

நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதைத் தவிர்த்திருக்க வேண்டும் என்றுதான் சொல்கின்றேன். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, உங்களை நம்பி வந்திருக்கின்ற, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த கம்பெனிக்கு எந்தவிதமான பிரச்சினையும், குழப்பமும், அமைதிக்குக் குந்தகமும் ஏற்படாவண்ணம் நீங்கள் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, திரு. மணி அவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்போது mention பண்ணுங்கள். There won't be any point of order. உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** ஒரு மணித் துளியில் சொல்லிவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்குச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் சொல்லலாம். வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாலபாரதி அவர்கள்தான் அடுத்து பேச இருக்கிறார்கள். அவருடைய நேரத்திலே அதைப் பேசலாம். நேரம் இல்லை. இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கை. மற்றவர்களுக்கெல்லாம் நேரம் ஒதுக்க வேண்டும். எனவே, தயவு செய்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காவல் துறை மானியக் கோரிக்கை எண் 22, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கை எண் 23, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை எண் 37 ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திற்கு அரணாக, மாநிலத்து மக்களுக்கும். இந்த நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு அரணாக இருப்பதுதான் காவல் துறை. ஆகவே, ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் பாதுகாப்பாக இருக்கின்ற





காவல் துறை, மிகச் சிறப்பாகப் பணியாற்றுகின்ற காவல் துறை, தமிழக காவல் துறை என்று பாராட்டுவது தொடர்ந்து நீடித்து வருகிறது. உலகத்தில் மிகச் சிறந்த காவல் துறை என்று பாராட்டப்படுகின்ற Scotland Yard–க்கு இணையான Police, காவல் துறை என்று எல்லோரும் பாராட்டக்கூடிய நிலையிலே, நம்முடைய காவல் துறை பல்வேறு நிலைகளிலே அரிய திருட்டுகளை கண்டுபிடித்தல், இன்னும் சாதனைகளையெல்லாம் புரிந்திருப்பதை இந்த நேரத்திலே நான் நினைவில்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவலர்கள் முதல் உயர் காவல் துறை அதிகாரிகள் வரையிலே, மிகச் சிறப்பான அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகள், உடனுக்குடன் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய துடிப்பான அதிகாரிகள் எல்லோரும் இருக்கின்ற காரணத்தினாலே, அந்த நல்ல அதிகாரிகளை அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த மாமன்றத்தில் நான் தலைவணங்கி பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

அதேவேளையில், பாதுகாப்பாக இருக்கின்ற காவல் துறையில் சிலர் தவறு செய்தால், குற்றங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னால், அவர்களை காவல் துறையினுடைய உயர் அதிகாரிகளும், நம்முடைய அரசும் உடனடியாகத் திருத்த வேண்டும். திருந்தவில்லையென்றால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய தமிழகக் காவல் துறையிலே, தொடர்ந்து நாம் 2006 ஆம் ஆண்டு, 2007 ஆம் ஆண்டு, 2008 ஆம் ஆண்டிற்கு வந்திருக்கிறோம். இந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக எட்டியிருக்கின்ற நேரத்தில், காவல் துறையிலே குற்றங்கள் அதிகரிப்பதாகவே கருதுகிறோம். அரசு புள்ளிவிவரங்களும் சொல்கிறது. இந்தக் குற்றங்கள் அதிகரிப்பதற்கு, குற்றவாளிகள் அதிகம் என்ற காரணம் ஒரு பக்கம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அதேவேளையில், உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், உரிய வழக்குப் பதிவு செய்து, அவர்களுக்குரிய தண்டனையினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அப்படி உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் வழக்கு வெற்றி பெறுவதற்கு, தண்டிக்கப்படுவதற்குண்டான ஆதாரங்களெல்லாம் இல்லாத காரணத்தினாலே, குற்றவாளிகள் வழக்கிலிருந்து தொடர்ந்து வெளிவருகின்ற நிலை ஏற்பட்டு வருகிறது. இப்படிக் குற்றவாளிகள்

[திரு. ஜி.கே. மணி] [2008 மே 9

தண்டிக்கப்படாத காரணத்தினாலே, குற்றங்கள் அதிகரித்துக்
கொண்டிருக்கின்றன என்று வல்லுனர்கள் எல்லாம்
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஓய்வுபெற்ற நீதியரசர்களும் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய காவல் துறையும், தமிழக
அரசும் அதிலே அக்கறை கொள்ள வேண்டும் என்று நான் இங்கே
வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, இப்போது
நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே குற்றங்கள் அதிகமாக
நடப்பதாக கருதப்படுவது, இங்கே கொலை, கொள்ளை, ஆட்கடத்தல்,
கூலிப்படை கொலை என்று அதிகரித்தே செல்கிறது. கொலை
செய்தவருக்கும், இறந்தவருக்கும் சம்பந்தமே இருக்காது. நான்
சுட்டிக்காட்டுவதற்காக சொல்கிறேன். திருவாரூர் மாவட்ட தி.மு.க.
செயலாளர் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கொலை
செய்தவர்கள் யார்? அங்கே கொலைக் குற்றவாளிகளுக்கும் அந்த
தி.மு.க. மாவட்டச் செயலாளருக்கும் சம்பந்தமே இல்லை. கூலிப்
படையினரை ஏவிவிட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.
இதேபோல், தமிழ்நாட்டிலே பல இடங்களிலே கொலை
செய்யப்படுகிறது. நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம்,
ஏதோ கட்சியையோ ஆட்சியையோ அல்ல. நினைவில்கொள்வதற்காகச்
சொல்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட கொலைகள் நிறைய நடக்கின்றன.
ஆகவே, பின்னணியில் யார் தூண்டிவிட்டார்கள். குற்றவாளிகளை,
கொலையாளிகளை கண்டுபிடிப்பது மட்டுமல்ல, தண்டிக்கப்படுவது
மட்டுமல்ல, யார் அவர்களை பின்னால் இயக்குகிறார்கள்,
உந்துகிறார்கள் என்பதையெல்லாம் கண்டுபிடித்து அவர்கள்
தண்டிக்கப்பட்டால்தான் இந்தக் கூலிப்படைக் கொலை கட்டாயம்
தடுக்கப்படும் என்ற காரணத்தினாலேதான் இந்தக் குற்றவாளிகள்
உடனடியாகக் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை
வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே வேண்டி, விரும்பிக்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–50*

இங்கேகூட குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகச் சொல்லி
பல்வேறு புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. பெண்களுக்கு எதிரான
குற்றங்கள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.
2006–2007–லே பார்த்தால் கற்பழிப்பு, ஆள் கடத்தல், வரதட்சணை
மரணங்கள், கணவர் மற்றும் உறவினர்கள் கொடுமை, மானபங்கம்
என்று சொல்லி இந்த வழக்குகளின்கீழே பதிவு செய்யப்பட்டது
2006–ல் 3,789. 2007 ஆம் ஆண்டு 5,362 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே,



2008 மே 9] [திரு. ஜி.கே. மணி]

இதற்கு என்ன காரணம் என்பது கண்டறியப்பட்டு அவர்கள்
உடனடியாகத் தண்டிக்கப்படுவார்களேயானால் குற்றங்கள் குறையும்
என்று ஓய்வுபெற்ற நீதியரசர்கள் எல்லாம் சொல்கிற
காரணத்தினாலேதான் இந்தக் குற்றவாளிகளைக் கடுமையாகத்
தண்டிப்பதற்குக் காவல் துறை முறையாக வழக்கு பதிவு செய்கின்ற
அந்த நிலையிலேயிருந்து அந்த வழக்குகள் முடிகின்ற வரையிலே
உறுதியாகயிருந்து யாரும் தப்பிச் செல்ல விடாமல் அதைப்
பாதுகாப்பதற்கு காவல் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று இங்கே நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நடந்திருக்கிற மோசடி மிகப் பெரியது, தங்கக் காசு
சங்கிலித் தொடர் மோசடி. இது எவ்வளவு பெரிய மோசடி. இப்போது
நடந்து கொண்டிருக்கிறது. இதிலே உரிய நடவடிக்கை எடுக்க
வேண்டும். காவல் துறை அதிகாரிகள் எந்த வகையிலும் பின்தங்கிவிடக்
கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம்
குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் காவல் துறை ஒரு தன்னாட்சி
பெற்ற அதிகாரமுள்ள அமைப்பாகச் செயல்பட வேண்டும். இதில்
யாருடைய தலையீடும் இருக்கக் கூடாது.

சாதாரண காவல் நிலையத்திலே பார்த்தால், புகார் கொடுக்கிற
நேரத்திலே வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அந்த வழக்கிலே யார்
குற்றவாளியாக இருக்கிறார்களோ அந்தக் குற்றவாளியின்மீது
உண்மையிலேயே வழக்குப் பதிவு செய்யப்படாத இடங்கள் நிறைய
உண்டு. குற்றம் செய்யாதவர்கள்மீது பழி சுமத்தப்பட்டு வழக்குப் பதிவு
செய்யக்கூடிய நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற
காரணத்தினாலேதான் குற்றவாளிகள் தப்பி விடுகிறார்கள்.

அதைப்போல, தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையிலே
காவல் நிலையத்திலே துப்பாக்கித் திருட்டு. அதை யார் திருடினார்கள்
என்று வெளியாகி இருக்கிறது. காவல் துறையைச் சார்ந்தவர்களே
இந்தத் திருட்டு வழக்கிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய
வேதனை. திருட்டு வழக்கு என்று சொன்னவுடனே அங்கே காவல்
துறை அதிகாரியிடத்திலேகூட நாங்கள் தொடர்பு கொண்டு
பேசினோம். பேசியதற்குக் காரணம் எந்தத் தப்பும் செய்யாத
அப்பாவிகளாக இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சிக்காரர்கள் பல
பேரை குடும்பத்தோடு அழைத்துச் சென்று அடித்து, உதைத்து வாரக்
கணக்கிலே கொடுமைப்படுத்தினார்கள். இப்போது உண்மை
கண்டறியப்பட்டிருக்கிறது. நிரபராதிகள் ஒரு வார காலம் அடிபட்டு
உதைபட்டு காவல் நிலையத்திலே பட்டக் கொடுமைகள்

[திரு. ஜி.கே. மணி] [2008 மே 9

சொல்லிமாளாது. குடும்பத்தோடு பெண்கள் உட்பட. ஆகவே, செய்யாத தவறுக்கு குற்றம் இழைக்காதவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எல்லாம் இங்கே சுட்டிக்காட்டுவதற்காக இதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல தூத்துக்குடி SIPCOT காவல் நிலைய எல்லைக்குட்பட்ட STERLITE குடியிருப்பு வளாகத்தில் 16–4–2008 அன்று பரிமளா என்ற ஒரு பெண் பொறியாளர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலை செய்யப்பட்ட பெண் இப்போது அது தற்கொலை என்று புனையப்பட்டு அங்கே காவல் துறையினராலும், கோட்டாட்சியர் அவர்களாலும், மருத்துவப் பரிசோதனையிலும் அது தற்கொலை என்று சொல்லப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால் அங்கே Cell Phone, தொலைபேசியில் பேசிய ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கே அது தற்கொலை அல்ல கொலை என்பதற்கு சுற்றுவட்டாரத்திலே நடந்த சம்பவங்கள் சொல்கின்றன. ஆக, இப்படிக் குற்றங்கள் மறைக்கப்படுகின்றன என்பதற்கு இது ஒரு சான்று.

அதைப்போல, மதுரை மாவட்டம், தெற்கு வட்டம், எலியார்பத்தி கிராமத்தில் 6–5–2008–ல் ஏற்பட்ட சாதிக் கலவரம். கலவரத்தைப் பற்றி நான் ஆழமாகச் சொல்ல விரும்பவில்லை. அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் இரண்டு நாட்களுக்குள்ளே. ஆகவே, இதையெல்லாம் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் சமுதாய மோதல்கள் அடக்கப்பட வேண்டும் என்று சொன்னால், நல்லிணக்கம் தொடர வேண்டுமென்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 2,3 நாட்களுக்கு முன் அறிவித்த மாதிரி இரண்டு தரப்பினரையும் அழைத்துப் பேசி ஒரு சுமுகத் தீர்வை, நல்லிணக்க உணர்வை உடனடியாக உண்டாக்க வேண்டும். இதிலே காவல் துறை அதிகாரிகள் ஏதோ நாம் சட்டப்படி தண்டனையை வழங்குகிறோம் அல்லது நடவடிக்கை எடுக்கிறோம் என்ற நிலையிலே இல்லாமல் அங்கே அழைத்துப் பேசி நல்லத் தீர்வினை உண்டாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றுகூட சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அங்கே சாதாரணமாக பார்க்கிறோம். தங்கும் விடுதிகளிலே பெண்கள் எப்படியெல்லாம் அங்கே முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். விலைமாதர்கள்கூட அங்கே இருக்கிறார்கள் என்ற நிலை பல்வேறு நட்சத்திர விடுதிகளிலே



2008 மே 9] [திரு. ஜி.கே. மணி]

பல்வேறு தங்கும் விடுதிகளிலே ஏற்பட்டிருக்கிறது. அதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தச் சூழ்நிலையிலே சுற்றுலாப் பயணிகளை வீட்டில் தங்க வைத்து உணவு பரிமாறும் திட்டம் என்று "Bed and Breakfast" என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். ஒருவர் குடியிருக்கிற வீட்டிலே, ஒரு அறையைக் கொடுத்து, அங்கே சுற்றுலாப் பயணிகளைத் தங்க வைப்பது, அவர்களுக்கு உணவு பரிமாறுவது இப்படிப்பட்ட திட்டத்தை நாம் கொண்டு வருவோம் என்று சொன்னால், இங்கே எவ்வளவு பெரிய குற்றம் நடக்க ஏதுவாக அமைந்துவிடும் என்பதை அரசும், காவல் துறையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது மிகப் பெரிய திருட்டுக்கு, கொலைக்கு, கொள்ளைக்கு, இன்னும் முறைகேடான பெண்களைப் பயன்படுத்துவதற்கு வழி வகுக்கும் என்கிற காரணத்தினாலேதான் இங்கே நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னாலே தமிழ்நாடு முழுவதும், சுற்றுலாத் துறையிலே தங்கும் விடுதிகள் இருந்தன. தமிழ்நாடு ஓட்டல் என்று சொன்னோம். அவற்றையெல்லாம் நாம் தனியாருக்குக் கொடுத்திருக்கிறோம், குத்தகை அடிப்படையிலே கொடுத்து இருக்கிறோம். ஏன் இந்த நிலைமை. இப்படி தனியார் வீடுகளிலே தங்குவதைவிட அவற்றையெல்லாம் அரசாங்கமே நடத்தி, துறையே நடத்தி அதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு சுற்றுலாத் துறையின்மூலமாக இலாபம் ஈட்டுவதற்கு, இன்னும் குறைந்த வாடகையிலே நிறைய தங்கும் விடுதிகளைக் கட்டி, அதன்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படித் தங்கும் விடுதிகளில், கோவாவிலே வந்த காரணத்தினாலேதான் நிறைய முறைகேடு நடப்பதாகத் தினந்தோறும் செய்திகளைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதையெல்லாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–55*

இன்னொன்று பார்த்தால், அடிக்கடி தினந்தோறும் போக்குவரத்திலே விபத்து. போக்குவரத்து விபத்தில், காவல் துறை உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேதான் ஓட்டுநர்கள், குடித்துவிட்டு ஓட்டுவது, உரிமம் இல்லாமல் ஓட்டுவது, தாறுமாறாக விதிமுறைகளை மீறி ஓட்டுவது விபத்துக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. அப்படி ஓட்டியவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும். வழக்கில் இருந்து தப்பிவிடக்கூடாது. நேற்றுகூட 8–5–2008

[திரு. ஜி.கே. மணி] [2008 மே 9

பகல் 11–00 மணிக்கு, சென்னை மேடவாக்கத்திலே குடித்துவிட்டு ஒருவன் வண்டியை ஓட்டியதனாலே, ஒரு பெண் அடிபட்டு, உணவு விடுதிக்குள் சென்று விழுந்து இருக்கிறது அந்த வண்டி. ஆகவே, இப்படிப்பட்ட வழக்குகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே சகோதரிகூட சொன்னார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் grill கொள்ளை, bureau pulling கொள்ளை என்று சொன்னார்கள். அதில் யார் அதிகமாக ஈடுபடுகிறார்கள் என்று சொன்னால், வட மாநிலத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலத்தைச் சார்ந்தவர்கள், சென்னை நகரிலேயும், சென்னையைச் சுற்றி இருக்கிற பெரும் தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு வருவதாகச் சொல்கிறார்கள். வேலைக்கு வருவது, வேலைக்குச் செல்லாமல் பால் விற்பனை செய்வதாகத் தொழிலிலே ஈடுபடுவது, வீடுக்ளையெல்லாம் அறிந்துகொண்டு அப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். இவர்களைக் காவல் துறை உடனடியாகக் கண்டறிய வேண்டும். தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இங்கே கொலை செய்துவிட்டு, இங்கே திருடிவிட்டு அவர்கள் சொந்த மாநிலங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். இப்படி அடையாளம் தெரியாத நபர்கள், சந்தேகத்திற்கு உரியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டறிய வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், மனித உரிமைக் கல்வி. காவல் துறையிலே, மனித உரிமை மீறுவதாக பல கோணங்களிலே இருந்து சொல்லப்படுகிறது. மனித உரிமை ஆர்வலர்கள் எல்லாம், தொண்டு நிறுவனம் வைத்து இருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், காவல் துறையில் இருப்பவர்களுக்கு அல்லது பள்ளிக் குழந்தைகளுக்கு, கல்லூரி மாணவர்களுக்கு மனித உரிமைக் கல்வி கட்டாயம் நாம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கிற நேரத்தில், மனித உரிமைகளை மீறக்கூடியவர்களும் சரி, மனித உரிமை மீறுவதற்கு யாரெல்லாம் ஆளாக்கப்படுகிறார்களோ அவர்களுக்கும் அந்த விழிப்புணர்வு இருக்கும். ஆகவே, மனித உரிமை மீறல் கூடாது என்பதற்காக, மனித உரிமைக் கல்வி எல்லா பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் கொண்டு வரவேண்டும். அதேநேரத்தில் காவல் துறையில் இருப்பவர்களுக்கு, மனித உரிமைக் கல்வி கட்டாயம், இடைக்காலப் பயிற்சியாக, பணியிடைப் பயிற்சியாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2008 மே 9] [திரு. ஜி.கே. மணி]

சாலை விபத்தைப் பார்த்தால் 2006–ல் விபத்து நடந்தது 55,145. உயிரிழப்பு மட்டும் 11,009 பேர். அதைப்போல், 2007–ல் 59,140 விபத்து, அதில் உயிரிழந்தவர்கள் 12,036 பேர். எண்ணிப் பார்க்க வேண்டும், ஒரு ஆண்டுக்கு 12 ஆயிரம் பேர் சாலை விபத்தில் உயிரிழக்கிறார்கள் என்றால் எவ்வளவு வேதனை? மனித உயிர் விலை மதிக்க முடியாதது. இதில் மிக முக்கியமானவர்கள் ஒரு வேலையாகச் செல்லக்கூடியவர்கள், முக்கிய மனிதர்கள், இந்த நாட்டுக்குச் சேவை செய்யக்கூடியவர்கள், நாட்டுக்குத் தேவையானவர்கள் அல்லது குழந்தைகள், குடும்பத்தோடு அழிகிற நிலை எல்லாம் பார்க்கிறோம். ஆகவே, போக்குவரத்து விபத்தைக் கடுமையாகக் கண்காணித்து தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட்டு விபத்துகளைத் தவிர்த்து உயிரிழப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

நண்பகல் 12–00

காவல் துறையிலே, நீண்ட காலமாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். காவல் துறையின் பணி தன்மையை நாம் எண்ணிப் பார்க்கிறோம். மற்ற துறைகளைக்காட்டிலும் பணியின் தன்மை மிக, மிகக் கடுமையானது. நின்றுகொண்டே இருக்கிறார்கள். நாம்கூட சட்டமன்றத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். காவலர்கள் நின்று கொண்டு இருக்கிறார்கள். பணிக்குச் செல்கிற நேரத்திலே கடும் வெயிலிலும் ஒரு நாள் முழுவதும் நின்று கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியினுடைய தன்மையைக் கருதி, 8 மணி நேரம் பணி வரன்முறை கட்டாயம் கொண்டு வரப்பட வேண்டும். இதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நீண்டகாலமாக நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, காவல் துறையில் காவலர்கள் முதலாக எல்லா நிலையிலேயும் இருப்பவர்களுக்கும், அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் 8 மணி நேரம் பணி வரன்முறை என்பதைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, காவல் துறையில் இருப்பவர்களுக்கு இடர்பாட்டுப்படி என்று கொடுக்கிறோம், Risk Allowance அது வெறும் 180 ரூபாய் என்று சொல்கிறார்கள். அது போதாது. அந்த இடர்பாடுகள் ஏற்படுகின்ற நேரத்தில் எவ்வளவு இடர்பாடுகளுக்கிடையிலே பணியாற்றுகிறார்கள். 180 ரூபாய் என்பது பணித் தன்மைக்கேற்ப போதாது. அதை 1,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, கூடுதலாக வழங்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்க வேண்டுமென்று நான்

பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதுமாதிரி ஊதிய உயர்வும் அவர்களுக்குக் கட்டாயம் தேவை, எல்லா நிலையிலேயும் இருப்பவர்களுக்கு. அதுமட்டுமல்ல, அவர்களுக்கு சீருடை வழங்குகிறோம். தொப்பி வழங்குகிறோம். அதுமாதிரி இடுப்புக் கச்சை வழங்குகிறோம். இதெல்லாம் வழங்குகிற நேரத்தில் அது சரியாக இல்லையென்ற குறை மேலோங்கி இருக்கிறது. 2006–ல் 2 ஜோடி கொடுத்திருக்கிறீர்கள். 2007 –லே 1 ஜோடிதான், அந்த 1 ஜோடி போதாது ஒரு ஆண்டுக்கு. அதுமட்டுமல்லாமல், அந்தத் துணி சரியாக இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, யாரோ ஒரு ஒப்பந்தக்காரர்மூலம் துணி வழங்குவதைவிட மற்ற உடைக்குத் தேவையானவற்றை வழங்குவதைவிட அந்தத் தொகையை நேரடியாக அவர்களுக்கே கொடுத்து விடலாம். ஒரு ஆண்டுக்கு 2 ஜோடிகள் அல்லது 3 ஜோடிகள் துணி கொடுத்து விடலாம். அதுபோல தொப்பி கொடுக்கிறோம், சின்ன தலைக்கு பெரிய தொப்பி, பெரிய தலைக்கு சின்ன தொப்பியாக இருக்கிறது. காலணி கொடுக்கிறோம். அதுபோல சின்ன காலுக்கு பெரிய காலணி, பெரிய காலுக்கு சின்ன காலணியாக இருக்கிறது. இடுப்புக்கு கச்சை கொடுக்கிறோம். அதுவும் அதுமாதிரிதான் இருக்கிறது. ஆக இவற்றிற்காக ஒப்பந்ததாரர்களுக்கு என்ன தொகையை கொடுக்கிறோமோ, அந்தத் தொகையை காவலர்களுக்கே கொடுத்து விட்டால் அவர்கள் அவற்றை விலைக்கு வாங்கிக்கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் காலணிக்கு பாலிஷ் கொடுக்கிறோம். அது பழையதைக் கொடுக்கிறார்கள், டப்பாவைத் திறந்தால் கெட்டிப்பட்டிருக்கிறது என்றும் அப்படியே கொட்டிப்போகிறது என்றும் சொல்கிறார்கள். இதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1993–லே காவலர்களாக பணியில் சேர்ந்தவர்கள் 5,000 பேர்கள் இருக்கிறார்கள் தமிழ்நாடு முழுவதும். இன்றைக்கு வரைக்கும் அவர்களுக்கு முதல் நிலைக் காவலர் பதவி கிடைக்கவில்லை. ஆனால் என்ன சொல்கிறார்கள் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை காவலர்களுக்குப் பணி உயர்வு வழங்க வேண்டும். முதல் நிலைக் காவலர்களாக அவர்கள் வந்திருக்க வேண்டும். இன்றைக்கு வரையில் வரவில்லை. அதுமாதிரி முதன்மைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக வர வேண்டும். அவர்களுக்கும் பதவி உயர்வு கிடைக்கவில்லை. 25 ஆண்டுகளாக தலைமைக் காவலர்களாகப் பணியாற்றியவர்களுக்கு சார்பு ஆய்வாளர், உதவி ஆய்வாளர், சப்–இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு இதுவரை வராமல் இருக்கிறது. ஆகவே, எல்லோரும் எதிர்பார்ப்பது என்னவென்று





சொன்னால் நல்ல முதலமைச்சர், நிர்வாகத் திறனில் அக்கறை உள்ள முதலமைச்சர், எங்கே குறை இருந்தாலும் அதைக் களைந்தெறியக்கூடிய முதலமைச்சர், உங்களுடைய காலத்திலேதான் இந்த முரண்பாடுகள் களையப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, காவலர்கள் முதல்நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் என்று ஆண் பெண் இரு பாலருக்கும் எல்லா நிலைகளிலும் உரிய காலத்தில் குறைந்தபட்சம் 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் அதற்குள்ளாக ஒரு படி பணி உயர்வு கட்டாயம் வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன். அதேபோல, காவலர் குழந்தைகளுக்கு, அவர்கள் படிப்பதற்குத் தரமான பள்ளிக்கூடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் உங்கள் காலத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது காவலர்களுக்கு மருத்துவமனை. அது 12 இடங்களில் இருக்கிறது. எல்லா. மாவட்டங்களிலும் 31 மாவட்டங்களிலும் மாவட்ட தலைநகரங்களில் காவலர் மருத்துவமனையைத் தரம் உள்ளதாக உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்கள் எண்ணிக்கைக்கேற்ப குடியிருப்புகள் இல்லாமல் இருக்கிறது. இந்த ஆண்டுகூட நிறைய அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, எண்ணிக்கைக்கேற்ப அதிகம் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சேலம் மாவட்டத்தில் ஏறக்குறைய 400 குடியிப்புகள் ஆயுதப் படைக்குக் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டு நீண்டகாலமாக நிலுவையிலே இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும்.

சேலம் காவல் துறை துணைத் தலைவர், D.I.G. அலுவலகம் சொந்தக் கட்டடம் இல்லாமல் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அதையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லா காவல் நிலையங்களுக்கும் ஈப்பு வேண்டும். ஈப்பு கட்டாயம் வழங்க வேண்டும்.

இன்னுமொன்று, இந்த மருத்துவமனையைப் பற்றிகூட நான் சொன்னேன். அந்த மருத்துவமனை என்பது இராணுவ மருத்துவமனை,

தொடர்வண்டித் துறை, இரயில்வே துறையில் இருக்கிற அந்த மருத்துவமனைகளைப்போல, அதற்கு இணையான, தரமுள்ள மருத்துவமனை கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை. இந்த மனித உரிமை மீறல் தொடர்ந்து நம்முடைய பகுதியிலே காவல் துறையினரால் ஏற்பட்டு வருவதைப் பற்றி, மனித உரிமை அமைப்புகள், ஓய்வுபெற்ற நீதியரசர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மோதல் சாவுகள், encounter என்று சொல்கிறார்கள். இந்த encounter–ல் உள்ளபடியே மோதல் நடந்ததா? அந்த மோதலில் செத்தார்களா என்பதை அரசு கண்டறிய வேண்டும். அங்கே விசாரணைக்கு என்று கொண்டு போகிறார்கள். 2 நாட்கள், 3 நாட்கள் வைத்து படுகொலை செய்யப்படுவதாக தகவல் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதிலும் அக்கறை கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–05*

அடுத்தது, காவல் துறையில் உள்ள அமைச்சுப் பணியாளர்கள். இவர்கள் கருணை அடிப்படையிலே ஏறக்குறைய 2002–லே நியமனம் செய்யப்பட்டவர்கள், 230 காவலர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், 2002–லேயிருந்து இன்றுவரைக்கும் 2,000 ரூபாய் தொகுப்பூதியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர் இறந்துவிட்டார். கருணை அடிப்படையிலே குடும்பத்திற்கு வேலை கொடுத்திருக்கிறீர்கள். குறைந்தபட்சம், வெறும் 2,000 ரூபாய் சம்பளத்திலேதான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையும் நிரப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

காவல் துறை குறித்து நிறைய கோரிக்கைகளை எல்லாம் வைத்திருக்கிறேன். அதையெல்லாம் நிறைவேற்றுகிற வகையிலே, ஒரு நல்ல எண்ணத்தோடு, இதுவரையிலே இல்லாத அளவிற்கு 3–வது காவல் ஆணையத்தை உருவாக்கிய பெருமை ஆழ்ந்த சிந்தனையுள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. ஆகவே, 3–வது காவல்





ஆணையத்தை உருவாக்கியிருக்கிற தாங்கள், காவல் துறையைச் சீர்திருத்துவது, நவீனப்படுத்துவது, குற்றமில்லாத நல்லதைச் செய்யக்கூடிய காவலர்களுக்குப் புத்துணர்வுப் பயிற்சியளிப்பது போன்ற நல்ல நடவடிக்கைகளை எடுத்து, காவல் துறை சுதந்திரமாகச் செயலாற்றுவதற்கு வழி வகுக்க வேண்டும்.

அதே நேரத்தில், முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், காவல் துறை மேலும் சிறப்பாகச் செயலாற்றுவதற்குத் தங்களுடைய தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட, சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், மூத்த வழக்கறிஞர்கள், ஓய்வுபெற்ற நீதியரசர்கள் ஆகியோரைக்கொண்ட காவல் பாதுகாப்பு ஆணையம் ஒன்று நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டும். காவல் பாதுகாப்பு ஆணையம் என்பது இருந்தால், காவல் துறை எந்த நேரத்திலேயாவது சற்றுத் தடம் புரண்டாலும், குறைகள் ஏற்பட்டாலும்கூட, அதையெல்லாம் செம்மைப்படுத்துவதற்கும், செழுமைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, தீயணைப்புத் துறை. தீயணைப்புத் துறையிலே பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு ரொம்ப குறைந்த சம்பளம் அளிக்கப்படுகிறது. காவல் துறைக்கே குறைந்த சம்பளம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலே பார்த்தால், காவல் துறையிலே வாங்கக்கூடிய ஊதியத்தைவிட மிகக் குறைவாக இருக்கிறது. மேலும், அவர்கள் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அவர்களுக்குக் குடியிருப்புக்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான நவீன கருவிகளையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுக்கு இப்போது தீயணைப்புத் துறையிலே உணவுப்படிக்காக வாரத்திற்கு வெறும் 150 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையை மேலும் நவீனப்படுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். சேலம் மாவட்டம் ஓமலூருக்குப் பக்கத்திலேயிருக்கிற வெள்ளாளப்பட்டியிலே ஒரு காவல் நிலையம்

வேண்டுமென்று காவல் துறை அதிகாரிகளும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை இந்த ஆண்டிலேயே அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரையிலே, பூரண மதுவிலக்கு வேண்டுமென்று பலபேர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. நான் ஏதோ முதலமைச்சருக்கோ, அரசுக்கோ நெருக்கடிக்காக தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என்ற அந்த நிலையிலே அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், உங்களுக்கு இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவ்வளவுதான் முடியும்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இரண்டு நாட்களுக்கும் சேர்த்து நான் ஓர் உறுப்பினர்தான் பேசுகிறேன். மற்ற கட்சிகளிலே 3 பேருக்கு வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். 12 ஆம் தேதி பேசப் போகிறார்கள். நாங்களும் ஒரு பெரிய கட்சிதான். பெரிய கட்சி என்று நாங்களே சொல்லவில்லை. அடக்கத்தோடு சொல்கிறோம். ஆனால், ஒரேயொரு உறுப்பினருக்குத்தான் பேச வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். அப்படியென்றால், இரண்டு பேருக்கும் சேர்த்து நேரத்தையாவது கொஞ்சம் கூடுதலாகக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உங்களுக்கு ஒதுக்கிய நேரத்தில் இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** ஒருவேளை மதுவிலக்கு என்று சொன்னவுடனே மணியடித்தீர்களா என்று பார்த்தேன்.

இதிலே, பீர், அயல்நாட்டு மதுவகை, உற்பத்தியும் விற்பனையும் மிக அதிகமாக இருக்கிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக இருக்கிறது. கடந்த ஆண்டு 2006–07 ஆம் ஆண்டில் விற்பனை 7,473.61 கோடி. 2007–08–ல் 8,816.87 கோடி, இவ்வளவு விற்பனை. இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரையிலும் அதிக எண்ணிக்கையிலே குடிகாரர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். சரி, குடித்தால் என்ன நிலைமை? குடிகாரனுக்கு உடல் நலம் பாதிக்கும். உடல் நலம் பாதித்தது என்று சொன்னால், நுரையீரல் கெட்டு பல வியாதிகள் வருகின்றன. மருத்துவச் செலவு அதிகரிக்கிறது. மருத்துவச் செலவு அதிகரிப்பது





மட்டுமல்ல, அதனால் அவருக்கு வேலையும் செய்ய முடியாது, வருவாயும் இருக்காது. உடல் உழைப்பும் குறைந்து போய்விடுகிறது. இந்தச் சூழ்நிலையில் மனைவி வேலைக்குப் போய்தான் அவனுக்குச் சோறு போட வேண்டும், குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். இதனால் சில பெண்கள் முறைகேடான செயலில் ஈடுபடக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நிறைய குடிகாரர்கள் இளம் வயதிலேயே செத்துப் போய்விடுகிறார்கள். அப்போது மனைவி விதவை ஆகக்கூடிய நிலை. அதுமட்டுமல்லாமல், குடிகாரர்கள் மனைவியை அடித்து உதைக்கிறார்கள். இதைத் தாங்கமுடியாமல் குடும்பத்தைவிட்டே ஓடக்கூடிய நிலைமை. சில நேரங்களில் குடிகார கணவன் இறந்துவிடுகிறான் அல்லது வேறு குடும்பத்தில் பார்த்தீர்கள் என்று சொன்னால், குடிகாரர்களின் தொல்லை தாங்க முடியாமல் மனைவி இறந்துவிடுவதும், குழந்தைகள் எல்லாம் நடுத்தெருவில் நிற்கின்ற நிலைமையும் இருக்கிறது. இப்படி ஒரு பக்கம். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். ஆகவே, குடிகாரன் மூளை பாதிக்கப்படுகிறது. அறிவு பாதிக்கப்படுகிறது. கடைசியில் ஒட்டுமொத்தமாக கடன்பட்டு, இருக்கின்ற வீடு, நிலத்தை விற்கின்ற நிலைமை.

பிற்பகல் 12–10

குடிகாரர்களை யாரும் மதிப்பதில்லை. குடிகாரன் வாகனம் ஓட்டினால் விபத்து அதிகரிக்கிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கூலிப்படை இதற்கெல்லாம் காரணமாக இருப்பது குடி என்று சொல்கிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமான மனித சீரழிவிற்கும், குடும்பச் சீரழிவிற்கும் அதிக காரணமாக இந்தக் குடிப்பழக்கம் இருக்கிறது என்கிற காரணத்தினாலேதான், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், மதுக் கடைகளின் எண்ணிக்கையை படிப்படியாகக் குறையுங்கள். விற்பனை நேரத்தினையும் குறையுங்கள் என்று நான் இங்கே பணிவோடு வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு, தருமபுரி மாவட்டத்தில், மொரப்பூர் ஒன்றியத்தில் நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். கந்தகவுண்டனூரில் 50 வீடுகள்தான் இருக்கின்றன. அதில் 30 பெண்கள் விதவையாக இருக்கிறார்கள். அய்யம்பட்டியில் 500 வீடுகள் இருக்கின்றன. அங்கு 85 பெண்கள் விதவையாக இருக்கின்றனர். அதுபோல் நத்தமேடு என்ற ஊரில் 60 பெண்கள் விதவை. அதுபோல், கேத்திரெட்டிப்பட்டி, லிங்கநாயக்கன்பட்டி, அஸ்தகிரியூர் என்று இப்படி மொரப்பூர்

ஒன்றியத்தில் மட்டும் 15 ஊர்களிலும், திருப்பத்தூர் ஒன்றியத்தில், மாடப்பள்ளி என்ற ஒரு ஊரில் மட்டும் 160 பெண்கள் விதவைகளாக இருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. ஒரு ஆய்வு நிறுவனம், தொண்டு நிறுவனம் சொல்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தினால்தான் நீங்கள் இதை தயவுசெய்து மாற்றியமைக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இதற்கெல்லாம் காரணம் சொல்கிறேன். இளைஞர்கள் 30 வயதிலிருந்து, 40 வயதிற்குள் இறந்துவிடுகிறார்கள் என்ற நிலையைச் சொல்லி, எனவே, மதுக்கடைகளைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்; கந்து வட்டி, கஞ்சா, கள்ளச்சாராயம், லாட்டரிச் சீட்டு கள்ளத்தனமாக விற்பது போன்ற குற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. காவல் துறை அதிலும் அக்கறை செலுத்தி அதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட கடந்த காலத்தில் முதலமைச்சராக இருந்தபோது குறிப்பிட்டிருக்கிறீர்கள். காவல் துறையில் உள்ள நிலைமைகளையெல்லாம் சொன்னீர்கள். இருக்கின்ற குறைகளைச் சொன்னீர்கள். ஆகவே, தங்களுடைய காலத்தில் இந்தக் குறைகளைக் களைய வேண்டும். காவல் துறை சீராக இருக்கிறது. இவர்கள் நேர்மையாகச் செயல்படுகிறார்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

காவல் துறையில் ஊழல் தடுப்புத் துறை இருக்கிறது. அந்த ஊழல் துறைமூலம் எங்கெங்கெல்லாம் ஊழல் நடக்கிறதோ அது கண்டறியப்பட வேண்டும். அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காவல் துறையில் இருக்கின்ற கருங்காலிகள்மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து காவல் துறையை நீங்கள் செழுமைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம்கூட இப்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார்கள். சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழிலினை அவர்கள் அந்த அதிகாரத்தினை வைத்துக்கொண்டு செய்வதாக பல பேர் பத்திரிகையில்





இந்தச் செய்தியை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதில் நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் மற்றும் சென்னை மாநகரத்தில் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆணையாளர், துணை ஆணையாளர் இவர்களெல்லாம் ஒரே காவல் நிலையத்தில் பல ஆண்டுகள் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு பணியாற்றுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, அவற்றையெல்லாம் கண்டறிந்து அதையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காலத்தில் தமிழ்நாடு காவல் துறை சிறப்பான காவல் துறை என்று பெயர் பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, வற்புறுத்தி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி. கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது வணக்கத்தை சமர்ப்பித்துக்கொள்கிறேன். காவல் துறையினுடைய தொடர் நடவடிக்கைகளால் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் மத நல்லிணக்கம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்று கொள்கைக் குறிப்பினுடைய முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து மிகச் சரியானது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் பார்க்கின்றோம். தமிழகத்தினுடைய காவல் துறை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய நேரடி கண்காணிப்பில் செயல்படுவதிலிருந்தே அதனுடைய முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். கொள்கை விளக்கக் குறிப்பை ஆழமாக நான் படித்தறிந்தபோது, பக்கம் 107–ல் இறுதிப் பத்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமுதாயத்தினுடைய சாதாரண மக்களும், நலிந்த மற்றும் அடித்தட்டு மக்களும் பயனுற வேண்டும் என்ற அரசின்

அடிப்படை நோக்கத்தைச் செயல்படுத்துவதில் காவல் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்நோக்கம் வெற்றி பெறுவதற்கு காவல் துறை அதிவேகமாக நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதோடு எண்ணங்களில் புதுமை, பொறுப்புணர்வுமிக்கத் தன்மை, செயலாற்றும் திறன், மக்களுடன் நட்போடு பழகும் அணுகுமுறை, இவை யாவும் தேவை என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய முத்தான கருத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கின்றோம். அந்தவகையிலேதான், தமிழக அரசினுடைய நடவடிக்கைகளில் என்னுடைய சொந்த அனுபவமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தீண்டாமை அகற்றப்பட வேண்டும் என்று சில இடங்களில் போராட்டங்களுக்குச் செல்கிறபொழுது, தமிழக அரசினுடைய காவல் துறை மிகுந்த பொறுப்புணர்வோடு, அரசினுடைய கொள்கையைப் புரிந்து கொண்டு செயல்படுகிறார்கள் என்பதனை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடியில் 40 ஆண்டு காலமாகப் பூட்டப்பட்டிருந்த காளியம்மன் கோயிலைத் திறக்க வேண்டும் என்று எங்களுடைய கட்சி முடிவு செய்கிறது. அதற்கு முதல் நாளே மாவட்ட அதிகாரிகளும், காவல் துறையும் 40 ஆண்டு காலமாகத் திறக்காத கோயிலைத் திறந்தால் பூகம்பமே வெடிக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்த எல்லாவற்றையும் மீறி அந்தக் கோயிலைத் திறந்தார்கள். அந்த மக்கள் வழிபடுவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்கள். அடுத்த நாள், மறியல் என்று சென்ற நாங்கள் காளியம்மன் திருவிழாவாகவே அந்தப் போராட்டம் மாறிய அதிசயத்தைப் பார்த்தோம். இப்படி தீண்டாமையை அகற்றுவதில் மிகுந்த பொறுப்புணர்வோடு தமிழக அரசும், முதலமைச்சர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய காவல் துறையும் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது என்னுடைய கருத்து, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சினுடைய கருத்து.

*பிற்பகல் 12–15*

உத்தபுரம், மிகச் சிறந்த முன்னுதாரணம். இந்த நேரத்தில், இந்தச் சபையில் அதை நான் ஆழமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். பாவத்தின் சின்னமாக இருக்கக்கூடிய, அந்தத் தீண்டாமைச் சுவரை அகற்றுவதும், பாதை ஏற்படுத்திக் கொடுத்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பும் கொடுப்போம் என்று முதலமைச்சர் சொன்னது மட்டுமல்ல, அதை உறுதியோடும் நின்று செய்தார்.





அன்றிலிருந்து இந்த நிமிடம் வரை அந்தப் பகுதி மக்கள் ஒற்றுமையோடு வாழ்வதற்கும், தீண்டாமை அகற்றப்படுவதற்கும், பிரச்சினையின் தன்மையைப் புரிந்து கொண்டு தமிழகத்தினுடைய காவல் துறையினர் இரண்டிரண்டு பேர், மூன்று மூன்று பேர் அங்கே இந்த நிமிடம் வரை காவல் காத்துக் கொண்டிருக்கிறார்களே இது மிகச் சிறந்த நடவடிக்கை என்ற முறையிலே தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை யாரும் குறைத்தே பார்க்க முடியாது. ஏனென்று சொன்னால், கொள்கை ரீதியாகத் தீண்டாமையை அகற்றுவோம் என்று சொல்வது வேறு. ஆனால், பிரச்சினை என்று வருகிறபொழுது பிற்படுத்தப்பட்ட, சாதாரண மக்களையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதேசமயத்தில் பல்லாயிரம் ஆண்டு காலமாக இருக்கக்கூடிய தீண்டாமையும் அகற்றப்பட வேண்டும். ஆகவே, அதில் நடவடிக்கையும் உறுதி. அதேசமயத்தில், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் இப்பொழுதுகூட அந்த மலையிலே இருக்கக்கூடிய மக்களைக் கெஞ்சிக் கொண்டு இருக்கிறார் என்று சொன்னால், அது இந்த அரசுக்கு பெருமை சேர்க்கக்கூடிய காரியம். இத்தகைய நடவடிக்கையை நீங்கள் தொடருங்கள், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறோம் என்று இந்த நேரத்திலே நான் பதிவு செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்றுதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கைகள் சிலவற்றைச் சொல்ல நான் முன்வருகின்றேன். பொதுக் கூட்டங்களை சிறந்த திறந்த வெளி பல்கலைக்கழகங்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதனுடைய பொருள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் புரியாதது அல்ல. எங்களைக் காட்டிலும் மிகுந்த ஆழமான அரசியல் அனுபவங்கள் உள்ள உங்களுக்கு அதை மீண்டும் விளக்க நான் முன்வரவில்லை. வ.உ.சி. அவர்களிலிருந்து சுப்பிரமணியம் சிவா அவர்கள் வரையில் மெரினா கடற்கரையிலே உதிர்த்த வார்த்தைகள் உருண்டு போன வார்த்தைகள் அல்ல, அவை விதைகள். அவை விடுதலைக்கான விருட்சங்களாக, கனிகளாக கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், கடற்கரையிலே நம்முடைய விடுதலையினுடைய அடையாளச் சின்னம் இருக்கிறது. ஆகவேதான், சீரணி அரங்கத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழக முதலமைச்சர் அவர்களும் இங்கு அமைத்துக் கொடுத்தீர்கள். அந்த அரங்கத்திற்கு மீண்டும் நீங்கள் உயிர் கொடுக்க வேண்டும். உங்கள் காலத்திலேயே நீங்கள் அங்கே பொதுக் கூட்டத்தை நடத்த வேண்டும். இது நம்முடைய வரலாற்று

விடுதலைப் போராட்டத்தினுடைய அடையாளச் சின்னமாக மெரினா கடற்கரையில் உள்ள சீரணி அரங்கத்தில் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி அளித்து மீண்டும் நீங்கள் சீரணி அரங்கத்திற்கு உயிர் தர வேண்டும்.

தொழிற்சங்க அமைப்புகள் ஏதோ பாவப்பட்ட அமைப்புகளல்ல. வ.உ.சி. அவர்கள் அன்னிய கம்பெனியை எதிர்த்துதான் சுதேசிக் கப்பலுக்காக தன் சொத்து முழுவதையும் விற்றார். விற்றது மட்டுமல்ல, அன்னிய கப்பலை வெளியேற்றுவோம் என்று சொன்னதோடு அங்கே சுதேசிக் கப்பலை நடத்தியது மட்டுமல்ல, அன்னியத் துணியை பகிஷ்கரிப்போம் என்று அவர்கள் சொன்னார்கள். அத்தகைய போராட்டப் பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் இயக்கத்தினுடைய தலைவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்று இந்திய அரசமைப்புச் சட்டம் சொல்லுகிறது. அது ஒன்றும் குற்றமான காரியமல்ல. ஒரு தொழிற்சாலைக்கு முன்னால், ஆலைக்கு முன்னால் கொடியேற்றுவது, தொழிலாளிகள் சங்கம் வைத்துக்கொள்வது, தங்களது உழைப்புக்கான மதிப்பை, கூலியைக் கேட்பது இந்த உலகத்திலே குற்றம் என்று காங்கிரஸ் கட்சி பார்க்கிறதா? நமது அருமைச் சகோதரி திருமதி யசோதா அவர்கள் தொடர்ந்து அந்த நிருவாகத்திற்கு ஆதரவாகவே பேசுவது எனக்கு வ.உ.சி.–யை நினைவுபடுத்துகிறது. மகாத்மா காந்தியினுடைய போராட்டத்தை நினைவுபடுத்துகிறது. ஆகவே, நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அடுத்த கருத்துக்கு நான் வருகின்றேன்.

*பிற்பகல் 12–20*

தமிழகத்தில் encounter–கள் பற்றி பலர் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) என்னதான் ஒருவர் குற்றங்களை இழைத்தாலும் அவர்மீது வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்த வேண்டிய கடமையை தமிழக அரசு செய்ய வேண்டும். அதற்காக காவல் துறையே தண்டனை கொடுப்பது என்பதை நாம் அனுமதிக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். சமூக விரோதச் செயல்களைச் செய்திருக்கக்கூடிய ஒன்றிரண்டு நபர்கள் பத்திரிகைகளிலே பேட்டி கொடுக்கிறபோது 'என்னுடைய பெயர்தான் அடுத்த பட்டியலிலே இருக்கிறது' என்று ஏதோ Attendance Register–ல் பார்த்தது மாதிரி, அவர்கள் பகிரங்கமாகப் பேட்டி கொடுக்கிறார்கள். ஆகவே encounter முறையை அரசு தடுக்க வேண்டும். காவல் துறை இதுபோன்ற குற்றவாளிகளைப் பிடித்து அரசிடம் கொடுக்க வேண்டும்;





நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்த வேண்டும்; மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். மனித உரிமை மீறல் இருக்கக்கூடாது என்ற முறையிலே காவல் துறைக்கு தமிழக அரசு அறிவுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் திருப்பூரிலே நிறைய திருடுகள் நடைபெறுகின்றன. தொழில் நகரமாக திருப்பூர் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதிகாலை நேரத்திலே பெண்கள் கோலம் போடுவதற்கு வெளியே வரக்கூட அச்சப்படுகிறார்கள். ஏனென்றால், உழைக்காமலேயே சம்பாதிக்க வேண்டுமென்ற அந்த நுகர்வு கலாச்சாரம், உலகமயக் கொள்கை, எல்லாத் துறைகளையும் சீரழிக்கிறது. அதுதான் திருடு பெருகுவதற்கும் காரணமாக இருக்கிறது. போலீசே திருடுவது என்பதும் அதிலிருந்துதான் வருகிறது. ஆகவே, திருட்டைத் தடுப்பதற்குரிய முறையிலே திருப்பூரில் உள்ள காவல் நிலையத்தின் காவலர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். 5 மணிக்கு மேல் எந்தப் பெண்ணையும் கைது செய்து lock–up–க்கு அழைத்துச் செல்லக் கூடாது என்று விதியிருந்தாலும் வேலூர், பாகாயத்தில் மூன்று நாட்களுக்கு முன்னால் இருளர் சமுதாயத்தைச் சார்ந்த பெண் அழைத்துச் செல்லப்படுகிறார்; திருட்டு வழக்கு போடப்படுகிறது. ஏழை என்றாலே திருடுவார்களா, தெரியவில்லை. ஆனால் காவல் துறைக்கு அப்படி ஒரு பார்வை இருக்கிறது. அதை அகற்றுவதற்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறைக்கு அறிவுறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல. வாணியம்பாடி காவல் நிலையத்தில் கடந்த காலத்திலே நடந்த பாலியல்ரீதியான குற்ற வழக்கு அப்படியே இருக்கிறது. அதன்மீதும் நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்ற மாவட்டங்களில் தண்டனை பெறக்கூடியவர்கள் எல்லாம் நாகர்கோவில் பகுதிக்குத்தான் போகிறார்கள். அங்கு பல சிறுபான்மை மக்கள் இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு பகுதியில், சமீபத்திலே மே 2 ஆம் தேதி நடந்த பந்த் போராட்டத்தில் B.J.P. கட்சியினர் 50 பஸ்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். S.P. அவர்களே இரண்டு பேர்களை கைது செய்து தக்கலை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார். ஆனால் அந்த local station–இலே உடனடியாக petty case போட்டு வெளியில் அனுப்புகிறார்கள். ஆகவே, அதிகாரிகள் அங்கு இருக்கக்கூடிய வகுப்புவாத சக்திகள், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது.

[செல்வி கே. பாலபாரதி] [2008 மே 9

சிறுபான்மை மக்கள் 7 இலட்சம் பேர் அங்கு ஒரு மலையிலே வழிபடுகிறார்கள். சிலர் நிழற்குடைகளைப் போட்டிருந்தபோது, அந்த நிழற்குடைகளை பிய்த்து எறிகிறது அந்தக் காவல் துறை. ஆகவே, இதுபோன்றப் பிரச்சினைகளில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதனை நாம் காவல் துறைக்குச் சொல்ல வேண்டும். அதேபோன்றுதான் நாகை மாவட்டத்தில் நடந்திருக்கக்கூடிய சம்பவம். அங்கிருக்கக்கூடிய civil பிரச்சினை. ஆதி திராவிட மக்கள் குடிசைகள் போட்டு இருக்கிறார்கள். R.D.O.–உடன் பேச்சுவார்த்தை நடக்கிறது, முடிந்துவிடும். இதில் காவல் துறையினர் 150 பேர் போய், குடிசைகள் பூராவையும் அப்புறப்படுத்தி, case போட்டுவிட்டு வந்தால், அதனால் யாருக்குக் கெட்ட பெயர் ஏற்படும்? ஆகவே, காவல் துறை இந்த மாதிரி அத்துமீறுவதை தடுத்த நிறுத்த வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டத்திலேகூட சாமி கும்பிடுவதில், உண்டியல் பிரிப்பதிலே இரண்டு சமுதாயங்கள் மோதிக்கொள்கின்றன. அதில் காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தி, 3 பேர் ஆபத்தான நிலையில் இருந்தார்கள். உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணத் தொகையை அனுப்பி வைத்தார்கள். கடந்த காலங்களில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று சொன்னால், நடக்கவேயில்லை என்றும், இதற்கு அரசு பொறுப்பில்லை என்றும் சொல்லப்படக்கூடிய நிலைமை மாறி, இன்றைக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்து, விசாரணையும் செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துப்பாக்கிச் சூடு எங்கிருந்து துவங்கியது; யார்மூலமாக நடந்தது என்பதையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்தால், அது அரசுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய நடவடிக்கையா, யார் இதற்கு எதிராக இருக்கிறார்கள் என்கிற உண்மையை நீங்கள் கண்டுகொள்ள முடியும். ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் வருகின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்களும் நமது அரசும் இன்னும் ஆழ்ந்து பரிசீலித்து அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் தவறு செய்திருந்தாலும் உரிய நடவடிக்கை எடுங்கள். இதுவரைக்கும் இந்த அரசு அரசியல் விருப்பு, வெறுப்பு காரணமாக யார் மீதும் கஞ்சா வழக்கு போடவில்லை என்பதே மிகப் பெரிய சாதனை என்று நான் பார்க்கின்றேன். ஏனென்றால், கடந்த காலங்களில் அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் அனுபவித்தோம். ஆகவே, இரவு நேரங்களில் பெண்களை lock-up-க்கு அழைத்துச் செல்லக் கூடாது. மனித உரிமை மீறல் பாதுகாக்கப்பட வேண்டும். தொழில் சங்க ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.



2008 மே 9] [செல்வி கே. பாலபாரதி]

வருவாய்த் துறை மனு நீதி நாளை நடத்துவதைப்போன்று காவல் துறையும் மனு நீதி நாளை நடத்துவதற்கு ஒரு நாளை நீங்கள் நிச்சயிக்கலாம். மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட அமைச்சர், மாவட்ட கலெக்டர் உட்பட, காவல் துறைக்கு வரக்கூடிய மனுக்களின்மீது கலந்துபேசி சில கருத்து ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அத்தகைய நிர்வாக ஏற்பாடுகள்கூடப் பயன்படும் என்று நாங்கள் பார்க்கிறோம்.

பிற்பகல் 12–25

மகளிர் காவல் நிலையம் கிட்டத்தட்ட கட்டப் பஞ்சாயத்து நிலையமாகவே போய்விட்டது. பெண் உரிமையைப் பற்றி அவர்களுக்குப் புரியவில்லை. பெண் அடிமைத்தனமும், ஆணாதிக்க உணர்வும் இரண்டும் கலந்து காவல் நிலையங்கள் செயல்படுகின்றன என்று சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன். ஏனென்றால், கணவர் அடித்துவிட்டார் என்று அந்த அம்மா சொல்கிறார்கள். 'என்னையே என் வீட்டுக்காரர் அடிக்கிறார், நான் எங்கே போய் complaint பண்ணுவது' என்று இன்ஸ்பெக்டர் அம்மா சொல்கிறார். சில நேரங்களிலே, 'இப்படி வாயடிக்கிறாயே, உன்கூட எப்படித்தான் குடும்பம் நடத்துகிறான்' என்று ஆணாதிக்க முறையிலே பேசுகிறார்கள். ஆகவே, மகளிர் காவலர்களுக்கு தயவுசெய்து பெண் உரிமையைப் பற்றிய நமது அரசினுடைய கொள்கை குறித்து பயிற்சி கொடுக்க வேண்டும். பெண்களினுடைய முடிவுக்கு, அந்த மகளிர் காவல் நிலையம் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

டாஸ்மாக் ஊழியர்கள் 35,000 பேர் இருக்கிறார்கள். ஆண்டிற்கு 10,000 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அந்தத் துறை ஊழியர்கள் 13 மணி நேரம் ஒரு நாளைக்கு வேலை செய்கிறார்கள். அவர்களைத் தயவுசெய்து நீங்கள் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அவர்களுக்கு, மகாத்மா காந்தி ஜெயந்தி, வள்ளுவர் பிறந்த நாள், வள்ளலார் பிறந்த நாள் ஆகிய நாட்களில்தான் விடுமுறையே கிடைக்கும். ஒருவேளை அவர்களெல்லாம் பிறக்காமல் இருந்திருந்தால் இந்த விடுமுறைகூட இவர்களுக்கு இல்லாமலே போயிருக்குமோ என்று கவலையாக இருக்கிறது. ஆகவே, இது அரசுக்கு நல்ல வருவாய் ஈட்டக்கூடிய ஒரு துறை. அதிலே பா.ம.க.வுக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், அரசுக்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு துறை. நம்முடைய இளைஞர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அவர்கள் 13 மணி நேரம் வேலை செய்வதனால், அவர்களை அரசு ஊழியர்களாக நீங்கள் ஆக்க வேண்டும். திருப்பூர், கோவையில் 7 ஊழியர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். பழி வாங்கிய அதிகாரி,

illegal–ஆக bar நடத்தி 7 இலட்சம் ரூபாய் மாதம் சம்பாதித்து அவரும் suspend ஆகிவிட்டார், ஆகவே கீழே இருக்கக்கூடிய பழி வாங்கப்பட்ட அந்தச் சங்க நிர்வாகிகள்மீது பரிவு காட்டி நீங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். டாஸ்மாக் ஊழியர்களை அரசு ஊழியர்களாக நீங்கள் அங்கீகரிக்க வேண்டும்.

காவலர்களுக்கு மருத்துவப் படியாக 50 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். வார விடுமுறையில் தினசரி 150 ரூபாய் அவர்களுக்கு வழங்க வேண்டும். சென்னையில் இருக்கக்கூடிய காவலர்களுடைய மருத்துவமனையினுடைய தரம் உயர்த்தப்பட வேண்டும். காவலர்களினுடைய பணிப் பளுவைக் குறைப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்ட வாரிசுகள் இல்லப் பணியாளர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

நம்முடைய மாவட்டக் காவல் துறை அலுவலகங்களில், மற்ற அலுவலகங்களில் எல்லாம் துப்புரவுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் துப்புரவுப் பணியாளர்களுக்கு 400 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. ஆகவே, காவல் நிலையங்களில் பணி செய்யக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுடைய பணி வரன்முறை செய்யப்பட வேண்டும். அதேபோன்று, சிறைக் காவலர் பணியாக இருக்கக்கூடிய சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தேர்வு செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கும் காவல் துறையைச் சார்ந்த காவலர்களுக்கும் அடிப்படை ஊதியத்தை இணையாக்க வேண்டும். காவல் துறை காவலர்களுக்கு வழங்குவதுபோல் boots, socks மற்றும் சீருடை சம்பந்தப்பட்ட பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.

தென் மாவட்ட சிறைக் கைதிகளைச் சேலம் சிறையில் அடைக்கும்போது கைதிகளைச் சந்திக்க வரும் அவர்களது குடும்பத்தினர் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஆகவே, சிறைக் கைதிகள் சொந்த மாவட்டச் சிறைகளில் இருக்க தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். கிளைச் சிறையில் பணியாற்றும் காவலர்களுக்கு தொடர்ச்சியான 8 மணி நேர வேலையை நீங்கள் உறுதிசெய்து கொடுக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், காவலர்கள் சங்கம் வைத்துக்கொள்வதற்கும், ஜனநாயக ரீதியாக தங்களது கருத்துகளைச் சொல்வதற்குமான வாய்ப்புகளை நீங்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், மகளிர் காவலர்கள் இளம் பெண்கள் இரவு நேரத்திலே duty–க்கு





அமர்த்தப்படுகிறார்கள். அதைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதேபோன்று, Cyber crime. செல்போன்களைப் பேசுவதற்குப் பயன்படுத்தலாம், புகைப்படம் எடுக்கலாம், ஆனால், ஆபாசப் படங்களை எடுத்து ஆபாசமாக அனுப்புவதே தொழிலாக இன்றைக்கு குற்றங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. திரைப்பட நடிகைகள் அவர்களுடைய முகங்களை வைத்து, உடலினை வேறு ஒன்றாக வைத்து மிக ஆபாசமாக அவர்கள் கொச்சைப்படுத்தப்படுகிறார்கள். இதுபோன்ற குற்றங்கள் நூதனமான முறையிலே நடந்துகொண்டிருக்கின்றன. இது நமது தமிழ்ச் சமூகத்தில் வளரக்கூடிய தலைமுறைக்கு (மணியடிக்கப்பெற்றது) ஆபத்தானது. ஆகவே, இதுபோன்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு Cyber crime–ல் இருக்கக்கூடிய வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும் என்கிற முறையிலே என்னுடைய கருத்துகளை (மணியடிக்கப்பெற்றது) நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** தனிப்பட்ட முறையிலே ஒரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். அதற்கு நான் பதில் சொல்கிறேன், தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

பிற்பகல் 12–30

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரி பாலபாரதி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள், அந்தத் தனிப்பட்ட நிருவாகத்திற்கு ஆதரவாக இருப்பதைப் போன்று பேசினார்கள். எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை 'தொழிற் சங்கம் கூடாது' என்பதல்ல. தொழிற் சங்கம் என்ற பெயரிலே, அங்கே சட்டம்–ஒழுங்கு பாதிக்கப்படக்கூடாது. அதேநேரத்திலே, தொழில் அமைதி காக்கப்பட வேண்டும். தொழில் அமைதி காக்கப்படுவது மட்டுமல்லாமல், அன்றைக்கு நிகழ்ந்த நிலைமையைப் பற்றிச் சொல்லி, 12 மணி நேரம் காவல் துறையினர் சரியாகப் பணியாற்றவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைத்தான் அவர் சொன்னாரே தவிர, தொழிற் சங்கத்தை அவர்கள் தொடங்குவதைப் பற்றியோ அல்லது கொடியேற்றுவதைப் பற்றியோ, யாரைப் பற்றியும்

அந்த அம்மையார் அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனால், அன்றைக்கு அந்தப் பகுதியில் நடைபெற்றது என்னவென்று சொன்னால், security room அடித்து நொறுக்கப்பட்டது; கம்ப்யூட்டர்கள் உடைக்கப்பட்டன; பல்வேறு பொருட்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் நியாயம் என்று சகோதரி பாலபாரதி அவர்கள் சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதற்கான விளக்கம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, இருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இரு சாராரையும், நிர்வாகத்தையும், தொழிற் சங்கத் தலைவர்களையும் கூப்பிட்டுப் பேசி, அந்தப் பிரச்சினை சரியாகிவிட்டது. மறுபடியும் பேசிப் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று தயவுசெய்து நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள், ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த Hyundai Car தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கிற தொழிற் தகராறு பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஓர் அமைதிப் பேச்சுவார்த்தை இங்கே நடைபெற்று வருகிறது என்பதை நான் அறிவேன். ஆனால், இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அங்கே ஏதோ தொழிற் சங்கம்தான் வன்முறையில் ஈடுபட்டதைப்போல ஒரு தவறான தோற்றத்தை, சித்தரிப்பை இங்கே உருவாக்க முயற்சிக்கிறார்கள். சில இடங்களில் நிர்வாகமே, ஒரு தொழிலாளரைப்





பழி வாங்குவதற்காக, அவர்களே கண்ணாடிகளை உடைத்துவிட்டு, தொழிலாளியின்மீது பழி போடக்கூடிய, பொய் வழக்குப் போடக்கூடிய நிருவாக அமைப்பு அங்கே செயல்படுவதை அவர் பார்க்க மறுக்கிறார். ஆகவே, அந்தத் தொழிற்சாலையைப் பற்றிய பிரச்சினை வருகிறபோதெல்லாம், அவர் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் என்பதற்குப் பதிலாக, அந்த கம்பெனியின் நிர்வாகத் துணைத் தலைவரைப் போலச் செயல்படுவது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. ஆகவே, தயவுசெய்து இதுபோன்ற தொழில் தகராறு பிரச்சினைகளில், உண்மையை அறியாமல், ஒருதலைப்பட்சமாக அவர்கள் பேசக்கூடாது என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இப்போது நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) Time இல்லை. (குறுக்கீடுகள்) அந்த விவாதத்தை இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடுகள்) அவர் சொல்கிறார், நீங்கள் உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். அங்கேயிருக்கின்ற பிரச்சினைகளை நான் பார்த்து, அதைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அவர்கள் கொஞ்சம்கூட, எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், ஏதோ Hyundai Company–க்கு நான் support செய்வதுபோல் சொல்லிக் கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு) 'சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் Hyundai Company–க்கு ஆதரவாகப் பேசுகிறார்' என்று சொன்னார்; நான் ஆதரவாகப் பேசவில்லை. (குறுக்கீடு) அவர் சொன்னது, Hyundai Company–யின் துணைத் தலைவரா அல்லது சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரா என்றார். ஆனால், நான் ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். தொழிலாளர்களைப் பற்றியும், அவர்களுடைய பிரச்சினைகள் குறித்துப் பேசுவதைப் பற்றியும், நான் அந்த விவரத்திற்குள்ளே எல்லாம் போக விரும்பவில்லை. ஆனால், அதே

நேரத்திலே, நான் அங்கேயிருக்கிற நேரத்திலே நடைபெற்ற அந்த வன்முறைச் சம்பவத்தில், காவல் துறை காலதாமதமாக நடவடிக்கை எடுத்தது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுகுறித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் காவல் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது, இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், (குறுக்கீடு) என்னைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்போது, நான் எப்படி பதில் சொல்லாமல் இருக்க முடியும்? இன்னொன்று.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், நான் பேசச் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வ.உ. சிதம்பரம் அவர்கள் வெள்ளைக்காரனை எதிர்த்து அன்றைக்குக் கப்பல் ஓட்டினார்கள் என்று சொன்னால், அன்றைக்குச் சுதந்திரம் கிடைக்காத நேரத்திலே, சுதந்திரத்திற்காகப் போராடிய நேரத்திலே, அன்றைக்கு வெள்ளைக்காரனை எதிர்த்தோம். இப்போது அப்படியல்ல; வெள்ளைக்காரன் நம்முடைய நாட்டிற்கு வந்து தொழில் தொடங்குவதற்கு நாம் அனுமதி கொடுக்கின்றோம். அதன் காரணமாக அவர்கள் வருகின்றார்கள். ஆகவே, காந்தியத்திற்கும், எங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாததுபோல அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நாங்கள் உண்மையிலேயே காந்தியத்தின்மீது நம்பிக்கை வைத்த காரணத்தினால்தான், அராஜகத்தை எதிர்த்து இப்போது குரல் கொடுக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சரி. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, சொல்கிறேன் கேளுங்கள். இப்போது time இல்லை. இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. Please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு) இதிலே உங்களுக்கு என்ன locus standi இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், please பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)





*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், ஒரு நிமிடம் பொறுங்கள். திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுக்கும் கொள்கையிலே, கூட்டணியிலே குழப்பம் ஏற்பட்டிருப்பது இங்கே தெரிகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிய பொதுவுடைமைக் கட்சியினுடைய உறுப்பினர் சகோதரி பாலபாரதி அவர்கள் டாஸ்மாக் பணியாளர்கள் பிரச்சினையில், பாட்டாளி மக்கள் கட்சிக்கு மாறுபட்ட கருத்து இருக்கலாம் என்று சொன்னார்கள். தொழிலாளர் பிரச்சினையிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்தே இல்லை. பூரண மதுவிலக்கு வேண்டுமென்று சொல்கிறோம். அதே நேரத்தில், டாஸ்மாக் பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அப்படி வழங்கிய பிறகு அவர்களை வேறு துறைகளிலே பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம். அதைத்தான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லுகிறேன். வீரப்பன் தேடுதல் என்ற பெயராலே அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிச் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் ஒரு பட்டியல் கேட்டார்கள். பட்டியல் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கைந்துபேர் விட்டுப்போனதாகச் சொன்னீர்கள். நீங்கள் அதைத் தருவீர்கள் என்று எதிர்பார்த்து அந்தப் பெயர்களைச் சொல்லுங்கள் என்று சொன்னேன். நீங்கள் 870 பெயர்களை எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். அதை எப்படி எங்களால் கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நேரமில்லை. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** [2008 மே 9 மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மூன்று மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நான் பேசுவதற்கான நேரத்தைக் குறைத்துவிட வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நமது அருளாளர், ஆற்காட்டார் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக சமீப காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவங்களை ஆழமாக உற்றுநோக்கி, அதன்மீது உரிய தீர்வு காண்பதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பல்வேறு சமூகப் பிரச்சினைகளை, விரைவாக, வேகமாகத் தீர்க்க நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதிலே தேவையில்லாத சம்பவங்களும், தேவையில்லாத வன்முறை வெறியாட்டங்களும் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. இதிலே எந்தச் சமூகம் என்று பார்க்காமல், இதிலே என்ன உண்மை நிலை என்று கண்டறிந்து அதற்கு உரிய தீர்வு காண வேண்டுமென்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலைப்பாடாகும்.

குறிப்பாக, சமீபத்திலே பல்வேறு சம்பவங்கள் நமது மாவட்டங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மதுரை மாவட்டம், எலியார்பத்தி என்ற கிராமத்திலே இப்போது ஒரு வார காலமாக பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்திகளைப் பார்க்கும்போது ஒரு தேவையற்ற சமூகப் பதட்டத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஒரு சமூகத்தினுடைய பெயர்ப் பலகையிலே செருப்பு மாலை அணிவித்ததாகச் சொல்லி, அதன்மீது போராட்டங்கள் நடைபெற்று, அரசுப் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைப்போலவே, பல்வேறு சம்பவங்கள் இதற்கு முன்னரும் நடைபெற்றன. ஒரு மாத காலத்திற்குள்ளாகவே, சிலை அவமதிப்பு, பெயர்ப் பலகைகள் அவமதிப்பு என்ற பெயராலே வன்முறை வெறியாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கிறபோது ஒரு சந்தேகம்







வலுக்கிறது. இப்போது தமிழகத்திலே இருக்கிற இந்த ஆட்சியின்மீது ஒரு களங்கத்தை ஏற்படுத்தி, எப்படியாவது சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்குவதற்கான முயற்சியை எடுத்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட காரியங்களை சிலபேர் தூண்டிவிடுகிறார்களோ என்ற சந்தேகமும் அச்சமும் எழுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுபவர்களை ஆழமாகப் பரிசீலித்து அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், எலியார்பத்தி கிராமத்திலே நடைபெற்ற சம்பவத்திலே ஈடுபட்டவர்கள்மீது காவல் துறை உரிய நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால், சாதாரண மக்களாக இருக்கக்கூடியவர்கள் உட்பட்ட 150-லிருந்து 200 பேர்களைக் கைது செய்து, அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, உண்மைக் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதாரண அப்பாவி மக்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப் பற்றி இந்த அரசு உடனடியாகப் பரிசீலித்து அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, 10 கிராமங்களில் உள்ள மக்கள் காவல் துறையினருடைய அச்சுறுத்தலுக்குப் பயந்து இப்போது வெளியேறியிருக்கிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. சுமார் 300-க்கும் மேற்பட்ட மோட்டார் வாகனங்களை போலீசாரே, லாரிகள்மூலமாக ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்ற செய்திகள் வருகின்றன. ஆகவே, காவல் துறை அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அங்கே கலவரத்தை உண்டுபண்ணுகின்ற நோக்கத்தோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகைவாயிலாக வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் செய்தியாக இங்கே அனுப்பியிருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலித்து காவல் துறையினுடைய அத்துமீறல் நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 மே 9

பிற்பகல் 12–40

குறிப்பாக தமிழகத்திலே பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். எங்களுடைய திருவாரூர் மாவட்டத்திலே அப்படி ஒரு வருத்தமான சம்பவம் நடைபெற்றது. இங்கே பேசியவர்கள்கூட சொன்னார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல அங்கே மாவட்டச் செயலாளர் படுகொலை செய்யப்பட்டார். இது ஒரு மிகப் பெரிய வேதனைக்குரிய செய்தி. அடுத்து குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாகவே எங்களது கட்சியைச் சேர்ந்த மாங்குடி ஊராட்சி மன்றத் தலைவர், திரு. ஜெயக்குமார் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் கொலைக்கான காரணம் என்பது சமூக விரோதிகள் குறிப்பாக சாராயம் விற்பவர்களாலே நடந்திருக்கிறது. பட்டப்பகலிலே நடந்த சம்பவம். சாராயம் விற்கக்கூடாது என்று அந்தப் பகுதியிலே சொன்ன காரணத்தினாலே அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். சொல்லி வைத்துவிட்டே செய்தார்கள். இதிலே ஒரு வருத்தமான செய்தி என்னவென்றால், திருவாரூர் காவல் நிலையத்திற்கும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. வந்தச் செய்தியை வைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு சம்பந்தப்பட்டவரே நேரடியாகச் சென்று புகார் கொடுக்கிறார். கொடுத்துவிட்டு ஊருக்குப் போகிறபோது அந்தக் காவல் நிலையம் உரிய பாதுகாப்பு அளிக்காத காரணத்தினாலே, அவர் சொல்லிவிட்டுச் சென்ற ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே கொலை செய்யப்பட்டுவிட்டார். ஆகவே, அந்தக் காவல் துறை உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வேதனையளிக்கிறது. இப்படிக் காவல் துறையிலே சில இடங்களிலே அலட்சியப்போக்கு இருக்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்துவிடுகின்றன.

அதைப்போலவே நெல்லை மாவட்டத்திலே மணல் கொள்ளையிலே ஈடுபட்டவர்களுடைய பிரச்சினையைத் தடுக்க வேண்டுமென்பதற்காக இளைஞர் பெரு மன்றத்தினுடைய எங்களது மாவட்டச் செயலாளர் சுடலைமுத்து என்பவர் போராட்டங்களை நடத்தினார். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சுடலைமுத்து என்பவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். எதிர்த்துப் போராடினார் என்ற காரணத்தினாலே கொலை செய்யப்பட்டார். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஏற்றுக்கொண்டு விசாரணை



2008 மே 9] [திரு. வை. சிவபுண்ணியம்]

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. CB CID விசாரணை இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புதிய நிகழ்வு என்னவென்றால், அந்தக் கொலைக் குற்றவாளிகளாக இருந்து இருக்கிறவர்கள், சுடலைமுத்துவோடு ஆதரவாக இருந்து போராடினார்கள் என்ற காரணத்தினாலேயே, அவர்களும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அவரோடு இருந்து போராடினார்கள் என்று காரணம் காட்டி— அவர்கள்மீது P.C.R. வழக்கு பதிவு செய்யப்படுகிறது. ஆகவே, வன்கொடுமைச் சட்டம் யார்மீது பயன்படுத்த வேண்டுமென்று உருவாக்கப்பட்டதோ அதுவே தலைகீழாக மாறியிருக்கிறது. கொலை செய்யப்பட்டவர் கொலைக்கு ஆளானவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். அந்தக் கொலையைக் கண்டித்துப் போராடியவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்திலே இருக்கிற உறுப்பினர்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினாலே கொலைக் குற்றவாளியினுடைய தூண்டுதலிலே அந்தக் காவல் நிலையத்திலே அவர்கள்மீது வன்கொடுமைச் சட்டத்தின்மூலமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசிலித்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த வழக்கை உரிய முறையிலே விசாரித்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே கொலைகள் இதர சம்பவங்கள் நடப்பதைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகின்ற சமூகவிரோதிகளை ஒடுக்குவதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே, உரிய காலத்திலே காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை இங்கு பட்டியலிட்டுப் பேசுவதற்குரிய வாய்ப்புகள் வருகிறபோது இந்த ஆட்சியா அந்த ஆட்சியா என்றெல்லாம் இங்கே பேசப்படுகிறது. நான் அதனுள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து, காலத்திலே தடுப்பதற்குரிய முயற்சியை காவல் துறை எடுக்க வேண்டும். அதை எடுக்கத் தவறுகிறபோதுதான் அந்தச் சமூகக் குற்றவாளிகள் ஒன்று, இரண்டு, மூன்று என்று சிறிய குற்றங்கள் புரிகிறபோது காவல் துறைக்குத் தெரிகிறது. தெரிந்தே அவர்கள் வளர்க்கப்படுகிறார்கள். வளர்ந்த காரணத்தினாலே தைரியமாக கொலை வெறியிலும் போய் அவர்கள்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 மே 9

அந்தக் காரியத்திலே ஈடுபடுகிறார்கள். ஆகவே காலத்திலே தடுப்பதற்குரிய நடவடிக்கையை, முயற்சியை காவல் துறை மேற்கொள்வதன்மூலமாகத்தான் இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியும். அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு நல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

குறிப்பாக, இங்கே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டன. இதிலே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இந்த இரண்டாண்டு காலத்திற்குள்ளாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். நான் இப்பொழுது திரும்பவும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, அரசியல் ரீதியாக, மற்ற செய்திகளைப் பார்க்கிறபொழுது, ஒருவிதமான உள்நோக்கத்தோடு பல காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டம்—ஒழுங்கு பிரச்சினையாக்கி, அதனால் இந்த ஆட்சிக்கு ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்குரிய முயற்சி நடைபெறுகிறது என்று நான் சந்தேகப்படுகிறேன். ஏதோ ஆதரவுக் கட்சி, கூட்டணிக் கட்சி என்ற காரணத்தினாலே இதைச் சொல்ல நான் விரும்பவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், தமிழகத்திலே நடக்கின்ற பல்வேறு சம்பவங்களைப் பார்க்கிறபொழுது, உள்நோக்கத்தின் அடிப்படையிலே நடைபெறுகின்றன. சிலைகள் அவமதிக்கப்படுகின்றன. பெயர்ப் பலகைகள் அவமதிக்கப்படுகின்றன. இதையெல்லாம் பார்க்கிறபோது, யார் செய்கிறார்கள், எப்படிச் செய்கிறார்கள், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செய்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிறபொழுது, ஒரு சமூகம் இருக்கிற பகுதியிலே அப்படி நடைபெறுகிறது என்று சொன்னால், அதிலே உள்நோக்கம் இருக்கிறது. அப்படியானால் ஒரு பதட்டத்தை ஏற்படுத்தி, ஒரு சமூக மோதலை ஏற்படுத்தி, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையாக மாற்றி, அதனால் இந்த ஆட்சிக்கு ஒரு நெருக்கடியை உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கம் இருப்பதாக நான் அறிகிறேன். எல்லாவற்றிற்கும் காரணம், நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது, எப்படியாவது மாற்றி, அதில் ஒரு வெற்றியைக் கண்டுவிடலாமா என்ற ஒரு நப்பாசையின் காரணமாக இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து. நம்முடைய தமிழக அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையாக இருந்து, இதன்மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2008 மே 9] [திரு. வை. சிவபுண்ணியம்]

குறிப்பாக, *21-4-2008* சட்டமன்ற நடவடிக்கையின்போது, அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் குறித்து இங்கே பேசினோம். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேட்டார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். அந்தப் பட்டியல் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. நான் அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொல்கிறபோதே சொன்னேன். சதாசிவம் கமிஷன் முன்பாக சாட்சியம் அளிப்பதற்காக, அதேபோல, காவல் துறையின் விசாரணையின்போது சாட்சியம் அளிப்பதற்காக, அச்சத்தின் காரணத்தினாலே பல பேர் வரமுடியவில்லை. அவர்களெல்லாம் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலை நீங்கள் முழுவதுமாக—உங்கள்மூலமாக ஆய்வு செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே—ஆய்வு செய்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. மிகப் பெரிய அளவிலே பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குரிய நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மிகுந்த நம்பிக்கையோடு அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். அதற்காகவே அவர்கள் ஒரு இயக்கத்தை நடத்தினார்கள். அதுகுறித்தும் சட்டசபையிலே பேசப்பட்டது. அந்தப் போராட்டம் வாபஸ் பெறவேண்டும் என்ற அடிப்படையிலே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட, மற்ற கட்சிகளெல்லாம் முயற்சிகள் எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது கருத்தையும், வேண்டுகோளையும் இந்த அவையிலே சொன்ன காரணத்தினாலே, அதை ஏற்றுக்கொண்டு அந்தப் போராட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியலைப் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்பதோடு, பாதிப்பைச் செய்துவிட்டு அதிரடிப்படையிலே இருக்கக்கூடிய தவறுக்குரிய அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோருகிறார்கள். அதற்குரிய முயற்சியும் எடுக்கப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதிலே கர்நாடக மாநிலம் வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லையென்ற கருத்தை, அன்றையதினமே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய முதல்வர் அவர்கள், காலத்தில் அந்த நிதியைக் கொடுத்தார்கள். அதை நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். நிவாரணமாக ஒரு கோடியே *20* இலட்சத்து *50* ஆயிரம் ரூபாயை உடனடியாகக் கொடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை

அளித்தது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியொரு மனிதநேயத்தோடு அந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வீரப்பனைப் பிடிப்பதற்கான முயற்சிகள் எடுத்தபோது, பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற ஆட்சிக் காலத்திலே தடாவிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 90 பேர்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே 15 பேருக்கு மேலே இறந்து போய்விட்டார்கள் என்று செய்தி வருகின்றது. தடா சட்டத்தின்ரீதியாகப் போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டாலும், இதரப் பிரிவுகளிலே உள்ள வழக்குகள் தொடர்கின்றன. அதிலே உள்ளவர்கள் மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற காரணத்தினாலும், பிரச்சினைகளும் முடிந்திருக்கின்ற காரணத்தினாலும், அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஆயுதப் படையிலே பெண் காவலர்களை, கைதிகளை அழைத்து வருவதற்காகப் பயன்படுத்துகிறோம். இதிலே குறிப்பாக திருச்சி மாவட்டத்திலிருந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை. நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. மதியம் 1–30 மணிக்குள் அவையை முடித்தாக வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். 10 நிமிடங்கள்தானே பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கைதிகளை அழைத்து வருகிறபோது, பெண் காவலர்களைப் பயன்படுத்துகிற முறையிருக்கிறது. திருச்சியிலிருந்து மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம் ஆகிய நான்கு





இடங்களுக்கு, நீதிமன்றங்களுக்கு அழைத்துச் சென்றுவிட்டு, அவர்களே வரிசையாக திரும்ப அழைத்துக்கொண்டு, இரவு மூன்று மணிக்குத்தான் திருச்சிக்கு வந்து சேரமுடிகிறது. ஆகவே, இந்தப் பணியிலே பெண் காவலர்கள் ஈடுபடுத்தப்படுவதை நிறுத்த வேண்டும். பெண் கைதிகளை வேண்டுமானால் அவர்கள் அழைத்து வருவதற்குப் பயன்படுத்துவதற்கான முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை. நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது, சார். மற்ற கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டுமல்லவா? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய கோரிக்கைகள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்வதற்கு இப்பொழுது நேரமில்லை. அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பில், மறைந்த 238 காவலர்களுடைய வாரிசுகள் இல்லப் பணியாளர்கள் என்ற பணியிலே இருக்கிறார்கள். அவர்கள் மாதம் ரூ.2,000/–தான் ஊதியமாகப் பெறுகின்றார்கள். இவர்களை அலுவலக உதவியாளர்களாக்க வேண்டுமென்கின்ற கோரிக்கை இருக்கிறது.

பிற்பகல் 12–50

அதேபோல, டாஸ்மாக் பணியாளர்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் பணி நிரந்தரப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றையும் பரிசீலித்து அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தீயணைப்புத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு காவல் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு இணையாகச் சம்பளம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு) எனது தொகுதியில் சில கோரிக்கைகளை வைக்க விரும்புகின்றேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் கூடுதலாக மூன்று நிமிடங்கள் பேசியிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) திரு. வீர. இளவரசன், கொஞ்சம் பொறுங்கள். திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. என்னைப் போல் முன்வரிசைத் தலைவர்களுக்காவது ஐந்து நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்திருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை.

இதில் நான் குறிப்பாக என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், இது காவல் துறை மீதான மானியக் கோரிக்கை என்பதால் சில முக்கியமான பல்வேறு கோரிக்கைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கூத்தாநல்லூர், அதேபோல, திருத்துறைப்பூண்டி தொகுதியிலே இருக்கின்ற கோட்டூர் தியணைப்பு நிலையங்களுக்குரிய கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்கிற கோரிக்கை இருக்கிறது.

அதேபோல, ஸ்ரீவில்லிபுத்தூரிலே டி.எஸ்.பி. அலுவலகம் கட்ட வேண்டுமென்கின்ற கோரிக்கை இருக்கிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து நிறைவேற்ற வேண்டும். ஒன்றை மட்டும் நான் சொல்லி முடிக்கின்றேன். நம்முடைய கலைஞர் அவர்களின் ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு என்பது பிரச்சினையாகவோ அல்லது பாதிப்பிற்குள்ளாகவோ இல்லை. எப்போதும் நடைபெறுவதைப்போல பல காரியங்கள் நடைபெறுகின்றன. அதையே தூபம் போடுவதற்குரிய முயற்சியினை மேற்கொள்பவர்களுக்கு அது பலன் அளிக்காது, அவர்கள் எதிர்பார்க்கிற காரியம் நடக்காது என்பதை மட்டும் சொல்லி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.





**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம்–உசிலம்பட்டி சாலையில் அமைந்திருந்த Town Police Station–ஐ நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் ஒருங்கிணைந்த காவல் நிலையம் கட்ட வேண்டுமென்பதற்காக இடித்தார்கள். ஆனால், இதுவரையிலும் அந்த ஒருங்கிணைந்த காவல் நிலையம் கட்டப்படவில்லை. எனவே, அதைக் கட்டித் தருவதற்கும், அதைப்போல, நகர் காவல் நிலையம், தாலுகா காவல் நிலையக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. நகர் காவல் நிலையத்திற்குச் சொந்தமாக அரசுக் கட்டடம் கட்டுவதற்கும், கூடக்கோவில் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்திலும், திருமங்கலம் மகளிர் காவல் நிலையம், வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. எனவே, அந்தக் காவல் நிலையங்களுக்கும் அரசு சார்பில் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலத்தில் இருக்கின்ற காவலர் குடியிருப்பும், அதேபோல கள்ளிக்குடியில் இருக்கின்ற காவலர் குடியிருப்பும் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. வசதிக் குறைவான அந்தக் குடியிருப்புகளில், அதிகமாக காவலர் குடும்பங்கள் வசிக்க முடியவில்லை. எனவே, புதியதாக அவர்களுக்குக் காவலர் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகக் காவல் துறையைப் பொறுத்தவரையிலும் நீண்டகாலமாக ஷிப்ட் முறை வேண்டுமென்று கேட்டு வருகிறார்கள். 8 மணி நேரப் பணி என்ற கோரிக்கை இருந்துவந்தாலும்கூட, அதில் சிறிது மாற்றம் செய்து, இரவு நேரம் – பகல் நேரம் என்று ஷிப்ட் முறைகளை அமல்படுத்தினால் அவர்களுக்கும் ஓய்வு கிடைக்கும். 24 மணி நேரமும் ஓய்வில்லாமல் காவல் பணியில் ஈடுபடுகின்ற காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு மன உளைச்சலும், உடல் சங்கடமும் அவர்களுக்கு ஏற்படுவதைத் தவிர்த்து, ஓய்வு நேரங்களில் தங்கள் குடும்பங்களில் குழந்தைகளோடு மகிழ்ச்சியாக இருந்துவிட்டு, உற்சாகத்தோடு அவர்கள் பணியில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, அந்த ஷிப்ட் முறை பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, காவலர் முதல் தலைமைக் காவலர் வரை weekly off என்று சொல்லக்கூடிய வார விடுமுறை என்பது இல்லாமல் ஏழு நாட்களும் வேலை பார்க்கின்றபோது, அவர்களுக்கு ETR – Extra Time

Remuneration என்று சொல்லக்கூடிய ஒரு நாள் சம்பளம் 150 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதை ஒரு நாள் ஊதியமாக உயர்த்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை ஆய்வாளர்களுக்கும், சார்பு ஆய்வாளர்களுக்கும் சேர்த்து வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தற்போது வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பயணப்படி Travelling Allowance என்பது ceiling வைத்து வழங்கப்படுகிறது. 30 நாட்கள் வேலை செய்தாலும், அந்த 30 நாட்களுக்கும் Travelling Allowance வழங்கப்படுவதில்லை. எனவே, வேலை நாட்கள் அனைத்திற்கும் Travelling Allowance வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படியெல்லாம் காவல் துறையினுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து அதை நிறைவேற்றிட முன்வந்தால், நீண்டகாலமாக அவர்கள் சங்கம் வைக்க வேண்டுமென்று கேட்கிறார்களே, அதுகூட ஒருவேளை தேவையில்லாமல் போய்விடக்கூடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–55*

1958–ல் 3½ கோடியாக மக்கள்தொகை இருந்தபோது, காவல் துறை என்பது 31,000 பேரை அப்போது கொண்டிருந்தது. மக்கள்தொகை வளர்ந்துள்ள இன்றைய கால கட்டத்தில், இந்தக் காவல் துறையின் எண்ணிக்கையும் 3 மடங்காக இப்போது உயர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், குற்றங்கள் குறைந்திருக்கிறதா என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அமைதி இங்கே நிலை நாட்டப்பட்டிருக்கிறதா என்று உறுதியிட்டு நாம் சொல்ல முடியாது. அதனால் நிலைமைகள் மாறுகின்றபோது, மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்ப, அதிகரிப்பிற்கேற்ப இல்லாமல், கூடுதலான விகிதத்தில் காவல் துறை எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், பல காவல் நிலையங்களில் காவலர்கள் பற்றாக்குறை இருக்கிறது. இருக்கின்ற காவலர்களும் அலுவலகப் பணிகளுக்காக வெவ்வேறு இடங்களுக்குச் சென்று விடுவதால் அங்கே சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்குப் போதிய காவல் துறையினர் இருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேபோல, தீயின் அழிவிலிருந்து மனித உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கின்ற தீயணைப்புத் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்ற ஓர் அவசியம் இருந்து வருகிறது. அந்தத் தீயணைப்புத் துறையினருக்கு காவல் துறையினருக்கு வழங்கப்படுவதைப்போல சம்பளமும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்து, தீயணைப்பு வாகனங்களை நிறுத்துவதற்கு சொந்தக் கட்டடங்கள் எல்லா இடங்களிலும் இல்லை என்றாலும், கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, 92 தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதை நாம் பார்க்கிறோம். எனவே, எல்லா இடங்களிலும் அரசின் சார்பாக சொந்தக் கட்டடம் அமைத்துத் தருவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய திருமங்கலம் தொகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னால், ஒரு சம்பவம் நடந்தது என்று இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட எலியார்பத்தியில் கடந்த 4 தினங்களுக்கு முன்னால், 5–5–2008 ஆம் நாளன்று இரவிலே பெரும்பிடுகு முத்தரையருடைய திருவுருவப் படத்திற்கு அங்கே அவமரியாதை செய்யப்பட்டது. அதையொட்டி மறுநாள் 6 ஆம் தேதி அதிகாலையில் எலியார்பத்தி கிராமத்து மக்களும், பக்கத்திலே இருக்கிற கிராமத்து மக்களும் ஒன்றுகூடி மறியலில் ஈடுபடுகிறார்கள், அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். மதிய வேளையில், பக்கத்திலுள்ள வளையப்பட்டி கிராம மக்கள் வந்து அந்தப் படத்திற்கு முன்னால் பொங்கல் வைத்து வழிபட்டுக் கொண்டிருக்கிறபோது..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You have only one minute more.

**திரு. வீர. இளவரசன்:** என்ன time? 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், 7 நிமிடங்கள்தான்.

**திரு. வீர. இளவரசன்:** 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute, பேசுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** காவல் துறையினருக்கும், பொது மக்களுக்கும் இடையே தகராறு முற்றி அங்கே தாக்குதல் நடத்தப்படுகிறது, தடியடி

[திரு. வீர. இளவரசன்] [2008 மே 9

நடத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல, அங்கே காவல் துறையினரும் பாதிக்கப்படுகிறார்கள், காயப்படுத்தப்படுகிறார்கள், பொது மக்களும் பலத்த காயத்திற்கு ஆளாகிறார்கள். பொது மக்களுடைய இரண்டு சக்கர வாகனங்கள், லாரிகள், டிராக்டர்கள் எல்லாம் சேதப்படுத்தப்படுகின்றன. ஒரு போலீஸ் ஜீப்கூட அங்கே எரிக்கப்படுகிறது. இந்த நிலைக்குப் பிறகுதான் காவல் துறையினர் அங்கே அதிக அளவில் குவிக்கப்படுகிறார்கள். குவிக்கப்பட்டதற்குப் பின்னர் வளையங்குளம், எலியார்பத்தி, பாறைப்பட்டி, நெடுமதுரை, வளையப்பட்டி போன்ற பல்வேறு கிராமங்களுக்கு உள்ளே புகுந்து காவல் துறையினர் அங்குள்ள வீடுகளில் நுழைந்து ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தி, அவர்களை இழுத்துக் கொண்டு வருகிறார்கள். அன்றைக்கு நள்ளிரவு வரையிலும், பெண்கள் விடப்படவில்லை. அதற்குப் பிறகு பெண்களை அனுப்பிவிட்டு, சுமார் 170 பேரை கைது செய்து சிறையிலே அடைக்கிறார்கள். 1300 பேர் வரையிலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஒரு சம்பவம், கொடிய நிகழ்ச்சி 4 நாள்களுக்கு முன்னால் அங்கே நடந்தது என்றாலும், இந்த நேரம் வரையிலும், அன்றைக்கு 6 ஆம் தேதி மதியத்திலிருந்து இந்த நேரம்வரையிலும் ஆண்கள் யாரும் அந்தக் குறிப்பிட்ட கிராமங்களில் நடமாட முடியவில்லை. காடுகளிலும், வயல்களிலும், வரப்புகளிலும் ஒளிந்து வாழ வேண்டிய ஒரு நிலைமை அங்கே இருந்துகொண்டிருக்கிறது. இதற்காகத்தான் நான் கவன ஈர்ப்பு அறிவிப்பினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க வழங்கியிருந்தேன். எனவே, இந்த மக்கள் திரும்பவும், அந்தக் கிராமங்களுக்கு வந்து, அங்கே அமைதி நிலவுவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு வாகனம் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது, காவலர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், அதுமட்டுமல்ல, பொது மக்களும் தாக்கப்பட்டு அங்கே காயமுற்று இருக்கிறார்கள். பொது மக்களுடைய வாகனங்களும், வீடுகளும் பலத்த அளவில் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. உண்மை நிலையைக் கண்டறிந்தால்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கிட முடியும். எனவே, அதற்கான வழிகளில் முயற்சிகளை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், அந்தக் கிராம மக்கள் அமைதியாக மீண்டும் வாழ்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு செய்தி.



2008 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அதேபோல, மற்றொரு சம்பவம் நேற்று முன்தினம் உசிலம்பட்டி வட்டத்தைச் சார்ந்த கோடாங்கிநாயக்கன்பட்டியில் தேவர் சிலை அவமதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஒரு மாதத்திற்குள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 21 ஆம் தேதி மதுரை, கோரிப்பாளையத்தில் தேவர் சிலை அவமதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இப்பொழுது 20 நாட்களுக்குள் மறுபடியும் உசிலம்பட்டி அருகே தேவர் சிலை அவமதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிமிடம் வரையிலும் அந்தப் பகுதியில் பஸ் போக்குவரத்து இல்லை. நேற்றைக்கு எழுமலை, பேரையூர் பேரூராட்சிகளில் முழுமையாகக் கடையடைப்பு நடத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களுடைய காவல் துறை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். சட்டம்–ஒழுங்கு காக்கப்படுவதிலே ஷணநேரமும் கண் துஞ்சாது அரசு பாடுபடுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய முதல்வர் அவர்கள் அற்றெழுத்து மொழியால் அறுவடைத் தமிழில் கடந்த மானியத்திலே பதிலுரை அளித்தார்கள். அந்தப் பதிலுரையிலே போற்றப்படத்தக்க செயல்கள் அனைத்தும் இன்று தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கரிகாலன் ஆண்ட காலம் பொற்காலம் என்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுது கலைஞர் ஆள்கின்ற காலம் பொற்காலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய பெயருக்கு முன்னால் பல தலைவர்கள் புரட்சி என்று சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உண்மையான புரட்சியாளராக நம்முடைய கலைஞர் அவர்கள் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சட்டம், எளியவனைக் கண்டால் எட்டி உதைக்கும், வலியவனைக் கண்டால் வளைந்து கொடுக்கும் என்று நாம்

[திரு. கு. செல்வம்] [2008 மே 9

கேள்விப்பட்டிருக்கின்றோம். உத்தபுரத்திலே வழியும் உண்டு; பாதையும் உண்டு; பாதுகாப்பும் உண்டு என்று புரட்சிகரமான தன்னுடைய செயல் திட்டத்தை அங்கே நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள். உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் இன்று பிரகாசமாக, ஒளியாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றவர் நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள். 10 தினங்களுக்கு முன்பு பத்திரிகையிலே கொடுத்த ஒரு செய்தியைப் பார்த்தோம். அது என்ன செய்தி என்றால், An appeal to the Management of Residential Schools என்று ஓர் அறிவிப்பைச் செய்திருந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் எங்களுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வீர்களா என்று மனு போட்ட காலங்களெல்லாம் ஒரு காலத்தில் இருந்தன. ஆனால், இப்பொழுது நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தாயாக, அந்தக் குழந்தைகளைப் பள்ளிகளிலே சேர்த்துக்கொள்ளுங்கள் என்று பத்திரிகையிலே அறிவித்து, வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.

காவல் துறைக்கு கோபால்சாமி கமிஷன், சபாநாயகம் கமிஷன் மற்றும் பூர்ணலிங்கம் கமிஷன் என்று அமைத்து காவல் துறையை ஏற்றமடையச் செய்யும் முதல்வராக நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். அதிரடிப் படையால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சதாசிவம் கமிஷன் பரிந்துரைத்த தொகையையெல்லாம் நாம் கொடுத்துவிட்டாலும், எஸ்.எம். கிருஷ்ணா அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும் கடந்த காலங்களிலே கர்நாடகக் காவல் துறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்று ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்கள். ஆனால், இதுவரையிலே கர்நாடக அரசு, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணத்தை அளிக்கவில்லை. அதை முதல்வர் அவர்கள் பெற்றுத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன்.

எவ்வளவோ நல்ல திட்டங்கள். அனைத்து துறைகளிலும் புரட்சி நடந்துகொண்டிருக்கின்றது. தமிழகம், இந்தியாவிற்கே தலைநகரமாக மாறக்கூடிய சூழல் இங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும், காவல் துறையிலே சில இடங்களிலே தகாத செயல்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. நான் கடந்த 1998 ஆம் வருடம் நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்தித்து முறையிட்டேன். தாழ்த்தப்பட்ட மக்கள்மீதெல்லாம் உண்மைக்குப் புறம்பான வழக்கு தொடரப்படுகின்றது என்று சொன்னபோது, ஆங்காங்கே சில சம்பவங்கள் நடக்கும். அதையெல்லாம் நாம் சரி செய்துகொள்ளலாம்



2008 மே 9] [திரு. கு. செல்வம்]

என்று சொன்னார்கள். தூய்மையான ஆட்சி நடந்துகொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அப்போது இருந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள்மீது ஒரு வழக்கு பதிவு செய்தார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அவருடைய பெருமை பற்றியெல்லாம் சொன்னார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தவறுகள் நடப்பது வாழ்க்கையில் சகஜம்தான் என்றாலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு வாழ்கின்ற வாழ்க்கையில் அவருடைய நாட்களிலே இப்படிப்பட்ட குறைகள் நடக்காமல் இருக்க காவல் துறை அதிகாரிகள் கற்றுக்கொள்ள வேண்டும். அவரைப் பின்பற்ற வேண்டும். நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிக்கவில்லை. ஆனால் அவர்களுடைய பண்பை காவல் துறை அதிகாரிகள் கூர்ந்து கவனிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களை நாடும்போது, மக்களை அவர்கள் அணுகுகின்றபோது, நம்முடைய முதலமைச்சருடைய முகம் அவர்களுக்குத் தெரிந்தாலே, அணுகுமுறை மாறும் என்ற நிலையில் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 1–05*

கிருஷ்ணகிரி மாவட்டத்திலே அஞ்செட்டி காவல் துறைக்கு உட்பட்ட ஓரிடத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வசந்தி என்ற ஒரு பெண்மணி. அவரை ஐந்து நபர்கள் சேர்ந்து பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கியிருக்கின்றார்கள். ஐந்துபேர் கூடி கொடூரமான முறையிலே வன் புணர்ச்சியிலே அவரை ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த ஆதி திராவிட பெண்மணிக்கு நீதி வழங்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டம், கச்சராபாளையம் காவல் நிலையத்திலே, விடுதலைச் சிறுத்தைகளின் நிதிச் செயலாளர் அவர்களை, அங்கிருக்கின்ற துணை ஆய்வாளர் அவர்களும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் உண்மைக்குப் புறம்பான வழக்கைப் போட்டு கட்சியையும், சமூகத்தையும் தாறுமாறாகப் பேசியதாகவும், நீங்கள் என்ன ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருப்பவர்களா என்று கேட்டதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்கள் இதைக் கவனத்திலே எடுத்து அந்த நிதிச் செயலாளருக்கு நீதி வழங்க வேண்டும்.

அதேபோன்று, காஞ்சிபுரம் மாவட்டத்திலே, சூனாம்பேடு பகுதியிலே, எங்கள் கட்சியைச் சேர்ந்த துணைப் பொதுச் செயலாளர்,

[திரு. கு. செல்வம்] [2008 மே 9

விடுதலைச் செழியனுடைய தம்பி, திரு. நாகலிங்கம் சிறையிலே மர்மமான முறையிலே இறந்தார். நான் நம்முடைய முதல்வர் அவர்களிடம் மனுவை அளித்திருக்கிறேன். இப்படிப்பட்ட செயல்கள் இனிவரும் காலங்களிலே சிறைத் துறையிலே நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இதையெல்லாம் எதற்காக சொல்கிறேன் என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், காவல் துறை அதிகாரிகள் கடந்த காலங்களில் செய்த கொடுமைகள், அவர்கள் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்து, மறு வாழ்வு அளித்திருக்கிறீர்கள். சொல்லப்போனால் உங்களை கைது செய்தவருக்கே, அவருடைய suspension–ஐ நீக்கி இப்போது மறு வாழ்க்கை அளித்திருக்கிறீர்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதி அவர்கள் வீட்டைத் தாண்டி கைது செய்த அதிகாரியும் இன்றைக்கு சென்னை காவல் துறையிலே ஒரு பெரிய பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறார்.

இப்படி பெரிய மனம் படைத்த, மன்னிக்கின்ற குணம் படைத்த, உங்களுடைய ஆட்சியிலே இப்படிப்பட்ட சிலசில காரியங்களை காவல் துறை அதிகாரிகள் செய்யக்கூடாது. உங்களுக்கு முன்னோடியாக நம்முடைய முதல்வர் அவர்களை நீங்கள் நினைத்து பணிபுரிந்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது.

நான் வழக்கறிஞர் என்ற முறையிலே, என்னுடைய சில junior–களை சில காவல் நிலையங்களுக்கு அனுப்பியபோது அங்கே கண்டதைக் கூறினார்கள். ஆண்கள் இருக்கின்ற காவல் நிலையங்களில்தான் வன்கொடுமைகள் நடைபெறுகின்றன என்று சிலர் இங்கே பேசினார்கள். ஆனால், பெண் ஆய்வாளர்களாக இருக்கின்ற நம்முடைய சகோதரிகளும் அங்கே போகின்ற தாய்மார்களை தாறுமாறாகப் பேசுகின்றார்கள், மரியாதை இல்லாமல் நடத்துகிறார்கள். இவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு நியாயமான அதிகாரி தலைமையிலே ஒரு குழுவை அமைக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று, கடந்த ஆட்சியிலே போடப்பட்ட அவதூறு வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன. ஆனால், எங்கள் தலைவர்மீது போடப்பட்ட அவதூறு வழக்கு, கடந்த ஆட்சியிலே போடப்பட்ட வழக்கு இன்று வரை திரும்பப் பெறப்படவில்லை. கடந்த ஆட்சியிலே எவ்வளவு வன்கொடுமைகள் நடந்தன என்று என்னால் பட்டியலிட்டுக் காட்ட முடியும்.



2008 மே 9] [திரு. கு. செல்வம்]

இந்தியாவே எதிர்பார்க்கின்ற, இந்தியாவே மதிக்கக்கூடிய நம்முடைய முதல்வருடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அப்படி ஒவ்வொரு காவல் துறை அதிகாரியும் நம்முடைய தமிழக முதல்வருடைய கரத்தைப் பலப்படுத்த, தமிழின மக்கள் அவர் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த, நீங்கள் நியாயமாகப் பணியாற்ற வேண்டும். நிதானமாகப் பணியாற்ற வேண்டும். மக்களின் நண்பனாக இருக்க வேண்டும். மக்களின் நண்பன் என்றால் மேற்கு வங்கத்திற்கும், பாசுவுக்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே, ஆவினன்குடி காவல் நிலையத்தையும், சிறுபாக்கம் காவல் நிலையத்தையும், கருவேப்பிலங்குறிச்சி காவல் நிலையத்தையும் தரம் உயர்த்தித் தர வேண்டும். அங்கே, தீயணைப்பு நிலையம் ஒன்றுகூட இல்லை. திட்டக்குடியை விட்டால் வேப்பூருக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தொழுதூரிலே 50 கிராமங்கள் சுற்றளவிற்கு இருக்கின்ற அந்தப் பகுதியிலே, தீயணைப்பு நிலையத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி.

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல், தீயணைப்பு, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த, உலகம் முழுவதும், எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்கள் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும், உலகத் தமிழினத்தின் தலைவர், முத்தமிழறிஞர், ஐம்பெருங்காப்பியமாய், ஐந்தாவது முறையாக ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களுக்கும், என்னை தன் தம்பிபோல் பாவித்து எனக்கும், புரட்சி பாரதம் இயக்க தோழர்களுக்கும் என்றென்றும் நல்லாதரவையும், நல் வழிகாட்டுதலையும் வழங்கிக் கொண்டிருக்கின்ற உள்ளாட்சியில் நல்லாட்சி செய்யும் தமிழினத்தின் தன்னிகரில்லாத தளபதி, எங்கள் அண்ணன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார்

அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலக மாமேதை, கல்விப் பெருங்கடல், பேரறிவாளன், பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள், 'கற்பி, ஒன்று சேர், புரட்சி செய்' என்ற மூன்று முழக்கத்தை நமக்குத் தந்தார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற மூன்று தாரக மந்திரங்களைத் தந்தார்கள். அந்தப் பேரறிஞர்கள் வழியில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வழியில் வான்புகழ் கண்ட வள்ளுவர் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். செம்மொழி தந்த தமிழ்ச் சிற்பி முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அவையில் நானும் உறுப்பினராகப் பணியாற்றுவதை நினைத்து மெத்த மகிழ்ச்சியடைகின்றேன். நான் சார்ந்திருக்கும் புரட்சி பாரதம் சார்பில் வணங்கி மகிழ்கின்றேன்.

*பிற்பகல் 1–10*

தமிழகத்தின் வனப் பகுதியில் மாவோயிஸ்ட்டுகளின் தீவிரவாதம் விதைபோடும்போது குறிப்பாக ஒடுக்கப்பட்ட, ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்களின் வாழ்க்கையை சூரையாடியபோது தீவிரவாத கும்பலுக்கு சாவும்மணி அடித்த தமிழக முதல்வருக்கும், காவல் துறைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவோயிஸ்ட் என்ற பெயரில் தீவிரவாதம் தலை தூக்குவதை வேரடி மண்ணோடு பிடுங்கி எறிய வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

தமிழகத்தின் தலை நகரம் சென்னை மாநகரத்திலும் புறநகர்ப் பகுதியிலும் புரையோடிக் கிடந்த ரவுடியிசம், கட்டப் பஞ்சாயத்து, ஆள் கடத்தல், நிலமோசடி, பகல் கொள்ளை, வழிப்பறி போன்ற சம்பவங்கள், முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களது ஆட்சியில்தான் குறைந்துள்ளன.

தென் மாவட்டத்திலுள்ள ரவுடிகள் சென்னை வந்து தன் கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்தபோது, ரவுடிகளின்மீது காவல் துறை நடவடிக்கை எடுத்து வருவதை சென்னை மக்களும், தமிழகமும் பாராட்டுகிறது. ரவுடிகள்மீது பாய்கின்ற encounter மனித உரிமைகள்





மீறாமல் சாதிய போக்கைக் கடைப்பிடிக்காமல் நடவடிக்கை எடுத்து வருகின்ற முதல்வர் அவர்களின் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆனபின்னும் தமிழகத்தில் இரட்டை டம்ளர் முறை இருப்பதை நினைத்து மிகவும் வேதனையடைகின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நினைத்தால் எந்த சாதி வெறித் தடைகளையும் அடித்து, நொறுக்கி சமூக நீதி காப்பார். சாதி நெருப்பின் தாண்டவத்திற்கு சவுக்கடி கொடுப்பார்கள் என்று முழு நம்பிக்கையடைகிறேன்.

தமிழகக் காவல் துறையில் இயங்கி வரும் சமூக நீதிப் பிரிவு மீண்டும் உயிரோட்டத்துடன் இயங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் குறைந்தபட்ச நிவாரணத் தொகை ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் மிகக் குறைந்த அளவே வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இலட்சத்தில் சில நூறு வழக்குகளே பதிவு செய்யப்படுகின்றன. இதில் அரசு அதிக கவனம் செலுத்தினால் தீண்டாமைப் பேயை விரட்ட வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் கவனத்திற்குப் பணிந்து கொண்டு வருகிறேன்.

சாதியின் பெயரால் உருவாக்கப்படும் பள்ளிகளில், கல்லூரிகளில் ஆதி திராவிட மாணவர்களைப் பெயரளவில் சில மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, ஆதி திராவிட மாணவர்களைத் தவிர்க்கும் போக்கு நிலவுகிறது. மாணவர்கள் மத்தியில் தீண்டாமைப் போக்கை கடைப்பிடிப்பதைக் கண்டறிய குழு அமைத்து முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுகின்றேன். மாணவர்கள் மத்தியில் சகோதரத்துவத்தை உருவாக்க வேண்டுமென்று முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

மியான்மரில் நர்கீஸ் புயலுக்கு இலட்சக்கணக்கானோர் பலியாயினர். அந்தத் துயரச் சம்பவத்தை நினைத்து புரட்சி பாரதம் மிகவும் வேதனையடைகிறது.

நெஞ்சுக்கு நீதி 5 ஆம் பாகம் கண்டு கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுடைய 10 ஆம் பாகத்தையும் எழுத வேண்டும். திருக்குறளுக்கு இணையாக உலகப் புகழ் பெற வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது உலகத் தமிழர்களின் பாடப் புத்தகமாய் அமைய வேண்டும் என்று விரும்புகின்றேன்.

[2008 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெகன்மூர்த்தி, உரையை முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்றால், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெகன்மூர்த்தி போதும், உட்காருங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** அதற்கு நமது அரசும், காவல் துறையும்தான் காரணம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இன்றைக்குக் காவல் துறையைப் பொறுத்தமட்டில் தமிழகத்திலே பல பிரச்சினைகள் இருந்தாலும், ரவுடிகளினுடைய அட்டகாசம், தீவிரவாதத்தினுடைய அமைப்பைச் சார்ந்தவர்களுடைய அத்துமீறல்கள், கூலிப்படைகளினுடைய அத்துமீறல்கள் போன்றவை தொடர்ந்து தமிழகத்திலே இருந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கு நமது அரசு சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–15*

ரவுடிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். குண்டர்கள் சட்டம் போன்ற சட்டங்களை அவர்கள்மீது பிரயோகம் பண்ண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ரவுடிகள், சட்டத்திற்கு விரோதமாக சேர்த்திருக்கக்கூடிய சொத்துகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை பறிமுதல் செய்து, அதை நமது அரசினுடைய கணக்கிற்குக் கொண்டு வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூலிப்படைகள் என்ற பெயரில் இப்போது தமிழ்நாட்டிலே பல இடங்களில் கொள்ளை நடக்கிறது. அதேபோல், கொலைகள் நடக்கின்றன. இதற்கெல்லாம் கூலிப் படைகள்தான் காரணமாக அமைந்து இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கும் நமது அரசு முன்வர வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தகுந்த நடவடிக்கையை நமது காவல் துறையினர் எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2008 மே 9] [திரு. கரி. இராமசாமி]

இதேபோல, தீவிரவாத இயக்கங்கள் என்றால், தமிழகத்திலே
புதிதாக நக்சலைட் போன்ற பிரச்சினைகள் ஆங்காங்கே
ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்துவதற்கும்
சரியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். இவர்களை நாம் திருத்துவதற்கும் முயற்சி
செய்யலாம். ஆனால், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க
வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற
தீவிரவாத அமைப்புகள், இன்றைக்குத் தமிழகத்திலே குறைந்து
இருந்தாலும் அவற்றை முழுவதுமாக, தமிழகத்தில் இருந்து அகற்றுவதற்கு
நமது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான்
உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 5–5–2008 அன்று மீன் பிடிக்கச் சென்ற
தொண்டியைச் சேர்ந்த மீனவர் செல்வம் என்பவரும், அதேபோல்,
அவருடன் சென்ற திரு. செல்வராஜ் என்பவரும் அன்று இரவு 7–00
மணியளவிலே, கடலிலே மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது,
இலங்கை இராணுவத்தால் சுடப்பட்டிருக்கிறார்கள்.
சுடப்பட்டவர்களிலே ஒருவர், அந்தப் படகில் இருந்து தப்பித்து கரை
வந்து சேர்ந்திருக்கிறார். அவர் சொல்வதைப் பார்க்கும்போது, ரொம்ப
மோசமான ஒரு நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இப்போது ஒருவரை
அவர்கள் கொண்டு சென்று விட்டார்களா அல்லது கொலை
செய்துவிட்டார்களா என்று தெரியவில்லை. அவருடைய நிலை என்ன
என்பதை நமது அரசு தெரிந்து, அந்தக் குடும்பத்திற்குச் சரியான
தகவல்களை அளிக்க வேண்டும். இது தொடர் கதையாக
நடந்துகொண்டிருக்கிறது. இந்தத் தொடர் கதைக்கு ஒரு முடிவு காலம்
ஏற்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை நமது அரசு எடுக்க
வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல
வழிகளிலே அந்நிய நாட்டவரால், தொடர்ந்து நமது மீனவர்கள்
பாதிக்கப்படுகிறார்கள். மீனவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள்;
இன்றைக்கு அவர்கள் தைரியமாக தொழில் செய்ய முடியாத ஒரு
நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நமது இந்திய நாட்டினுடைய எல்லை
என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாத நிலையிலே நமது மீனவர்கள்
அந்த எல்லையைத் தாண்டும்போது, இந்த நிகழ்வுகள் எல்லாம்
நடக்கின்றன. இந்த எல்லையை நமது மீனவர்களுக்குத் தெரிவிப்பதற்கு
பல வழிகள் இருக்கின்றன. அதை நமது அரசு உடனடியாகச் செய்ய
வேண்டும். இப்போது border–ல் மிதவைகள் வைத்திருந்தால் நமது
எல்லை என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்பு
இருக்கிறது. அதைச் செய்துதர வேண்டுமென்று நான் உங்களை

அன்போடு கேட்டு, இப்போது கடத்திச் சென்றிருக்கக்கூடிய நபர் என்ன ஆனார் என்பதையும் நமது அரசு தெரிந்து சொல்ல வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி, தேவகோட்டையிலே டி.எஸ்.பி. அலுவலகம் ஒன்றை புதிதாகக் கட்டித் தர வேண்டும். அதேபோல், திருவாடனை டி.எஸ்.பி. அலுவலகத்திற்கும் புதிய கட்டடம் கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** அதேபோல, தொண்டி காவல் நிலையக் கட்டடத்தையும் கட்டித் தர வேண்டும். அதேபோல், அரியலூரிலே, புதிதாக ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். இதுபோன்று எந்தெந்த ஊர்களில் கட்டடம் இல்லாமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் கட்டடங்களைக் கட்ட ஏற்பாடு செய்து தர வேண்டும். அடுத்தபடியாக இன்றைக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், பேசுவது அவர். கொஞ்சம் தள்ளி உட்காருங்கள்.

*பிற்பகல் 1–20*

**திரு. கரி. இராமசாமி:** நமது இந்திய நாட்டில் விடுதலைப் புலிகள் இப்போது தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தடைக் காலம் முடிவடையப் போகிறது. அந்தத் தடைக் காலத்தைத் தொடர்ந்து நீட்டிப்பதற்கு மத்திய அரசுக்கு நமது தமிழக அரசு உரிய பரிந்துரையை (மேசையைத் தட்டும் ஒலி) செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** "ஏச்சுக்கள், இழிவுகள் எவையும் என் தொண்டினை இம்மியும் அசைப்பதில்லை. மூச்சுக்கள் ஒவ்வொன்றும் தமிழ் இனம், நாடு எனும் முழக்கத்தில் சோர்வதில்லை. அரசனே எதிர்த்தாலும் அதிகாரம் பணித்தாலும் அச்சம் என் நெஞ்சில் இல்லை. உரசி என் உடலினை பாறையில் தேய்த்தாலும், உறுதியில் குறைவதில்லை. முரசினைப் போலவே கொள்கை முழக்குவேன் என் மூச்சிலும் கெஞ்சல் இல்லை" என்று அரசியல் அரங்கில் இன்றைக்கு பவனி வந்து கொண்டிருக்கிற எங்கள் அம்மா அவர்களை நான் நன்றியோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் *10* நிமிடங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** *18* நிமிடங்கள் என்று சொன்னார்களே. *18* நிமிடங்களை *10* நிமிடங்களாக ஆக்குகிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, *10* நிமிடங்கள்தான்.

**திரு. வி.பி. கலைராஜன்:** இன்றைக்குக் காவல் துறை எப்படி இருக்கிறது என்று சொன்னால், காவல் துறையிடத்திலே இருக்கிற ஆயுதங்களையெல்லாம் அடித்துப் பிடித்து எடுத்துச் செல்லப்பட்டதற்குப் பின்னால், அடுத்தடுத்த சம்பவங்கள் நடப்பதைப் பார்த்து முதலமைச்சர் அன்றாடம் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார். முதலமைச்சருக்கு கீழே இருக்கிற அதிகாரிகள் காவல் துறையினுடைய உயர் அதிகாரி A.D.G.P. அவர்கள் காவல் துறையினருக்கு. தைரியத்தையும், வீரத்தையும் கொடுப்பதற்காக கவிதைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவுக்கு இன்றைக்கு கவிதை எழுதி அறம்பாடி, அநியாயங்களை அழிக்கப் போகிறார்களா என்பதை நான் முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலே, வடக்குக் காவல் துறையிலே பாரிமுனையிலே *59* துப்பாக்கித் தோட்டாக்கள் பெட்டகத்திலே வைத்திருந்தவை, காணாமல் போயிருக்கின்றன. அதைப்போல, விழுப்புரத்திலே ஆயுதப்படைக்குச் சொந்தமான *9* எம்.எம். பிஸ்டல் காணாமல் போயிருக்கிறது. பறி கொடுத்த துப்பாக்கிகள் பல இருந்தாலும், நான் ஒருசிலவற்றை மட்டும் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு காவல் துறை எப்படி ரவுடிகளால் தாக்கப்படுகிறது என்பதற்கு உதாரணத்தைச் சொல்கிறேன். உடுமலைப்பேட்டையிலே அந்த D.S.P. ரவுடிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். காவல் துறை மானியத்தைப் பற்றி இன்றைக்கு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. "Tamil Nadu is a garden of peace and tranquillity proclaims the State Government. However, statistics do not support the State's rose–tinted view. என்று சொல்லி,... Crimes against women have also registered a sharp increase. In 2007, 523 cases of rape were reported as against 457 the previous year." என்று குறிப்பிட்டிருக்கிற அதே நேரத்தில் இந்த ஆண்டு *1,521* கொலைகள் நடந்திருப்பதாகவும், சென்ற ஆண்டு இருந்த *1,273*–லிருந்து *1,521* என்று உயர்ந்து இருப்பதையும் இன்றைக்கு பத்திரிகைகள் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன. அந்த அளவுக்கு இன்றைக்குச் சட்டம்–ஒழுங்கு கெட்டுப் போயிருக்கிறது. அதைப்போல,

[திரு. வி.பி. கலைராஜன்] [2008 மே 9

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரைக்குச் சென்றபோது அவரை யாரோ தாக்குவதற்கு முயற்சித்ததாக செய்தி வந்தது. இன்று வரை அப்படித் தாக்க வந்தவர் யார் என்று கண்டுபிடித்து காவல் துறை கைது செய்ததாக செய்தி இல்லை. ஆக, ஒரு காலத்திலே குடமுருட்டி பாலத்திற்குக் கீழே வெடிகுண்டு வைத்ததாக சொல்லப்பட்ட, அரங்கேற்றப்பட்ட நாடகத்தைப்போல, இதுவும் அரசியலுக்காக அரங்கேற்றப்பட்ட நாடகமா என்பதை நான் இங்கே சந்தேகத்தோடு கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, வீட்டுமனை வழங்குவதிலே ஒரு உயர் அதிகாரிக்கு, விதிமுறைகளை மீறி வழங்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இந்த வீட்டுமனை வழங்குவதிலே சீனியாரிட்டி ஏதும் இருக்கிறதா? ஒருவருக்கு எத்தனை மனைகள் கொடுக்கலாம்? அப்படிக் கொடுப்பதற்கு ஒருவருக்கு ஒரு ஒதுக்கீடுதான் என்றால், இவருக்கு எப்படி இரண்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன என்று அதையும் நான் கேட்க விரும்புகிறேன். அதற்கு நீங்கள் பதில் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் துப்பாக்கி வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். நான் மாநகராட்சி தேர்தல் சமயத்தில் தாக்கப்பட்டாலும், அதற்குப் பின்னாலே நான் மனு கொடுத்துவிட்டு, எனக்கு பாதுகாப்பிற்குத் துப்பாக்கி வேண்டுமென்று கேட்டு, பேரவைத் தலைவரிடம் 2 முறை சொல்லியிருக்கிறேன். அதைப்போல, செயலாளரிடமும் சொல்லியிருக்கின்றேன். ஆனால் 2 ஆண்டுகளாக எனக்குத் துப்பாக்கி மறுக்கப்படுகிறது. ஆக, துப்பாக்கி வைத்துக்கொள்ள நமக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, பிள்ளைகளுக்குத் தந்தைமீது பாசமும், தந்தைக்குப் பிள்ளைகள்மீது பாசமும் இருக்க வேண்டியதுதான். இருக்கும். வீதியோரத்தில் இருக்கிற நாதியற்றவர்களுக்குக்கூட அந்தப் பாசம் உண்டு. அந்த அடிப்படையிலே பார்க்கப்போனால், சொல்லம்புகளால்கூட தன்னுடைய பிள்ளைகள் துளைக்கப்பட்டுவிடக் கூடாது என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், என்னுடைய வீடு தாக்கப்பட்டது. என் வீடு தாக்கப்பட்டதற்கு பிறகு, என்னுடைய தந்தையும் தாக்கப்பட்டார். இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இங்கேகூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், உத்தரவாதம் தந்தார்கள்,



2008 மே 9] [திரு. வி.பி. கலைராஜன்]

நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று. அதைப்போல மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இன்றைக்கு வரை நடவடிக்கை எடுத்து யாரும் அங்கே கைது செய்யப்படவில்லை. குற்றவாளி என்று நான் சொன்னதற்குப் பிறகும், பெயரைக் குறிப்பிட்டதற்குப் பிறகும் இன்றைக்கு வரை கைது செய்யப்படவில்லை என்று சொன்னால், இதற்குப் பெயர் என்ன? பழிவாங்கும் செயலா அல்லது எதிர்க் கட்சியை ஒடுக்குகிற செயலா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

அதைப்போல, தலைவர்களுடைய சிலைகளெல்லாம் இன்றைக்கு அவமதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதற்கும் தகுந்த பாதுகாப்பு வேண்டும்.

அதைப்போல, விழுப்புரத்திற்குப் பக்கத்திலே எறையூர் என்ற கிராமத்திலே ஒரே மதத்தைச் சேர்ந்த இரண்டு குழுவினரை, கையாளத் தெரியாமல் காவல் துறை, அவர்களைத் தவறுதலாகக் கையாண்ட காரணத்தினால் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானது மட்டுமின்றி இன்றைக்கு வரை தினம் தினம் வீடுகள் அங்கே கொளுத்தப்படுகின்றன. அதையும் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு என்னுடைய தொகுதியாக இருக்கட்டும், சென்னையிலேயிருக்கிற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய தொகுதியாக இருக்கட்டும், முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியாக இருக்கட்டும், இரவு 11 மணிக்கு டாஸ்மாக் கடையை மூடியதற்குப் பின்னால், விடிகிறவரை கள்ளச் சாராயமும், கள்ள மதுவும் அங்கே விற்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போல ஒரு நம்பர் லாட்டரி இன்றைக்குச் சென்னையிலே நடமாடிக் கொண்டிருக்கிறது, விற்கப்படுகிறது. அதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, Helmet அணிவது அவசியம் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவசியமில்லை என்று சொன்னதற்குப் பின்னாலும், இன்றைக்கு, இரண்டு சக்கர வாகனங்களிலே செல்கிறவர்களிலே பலர் சோதிக்கப்பட்டு, காவல்

துறையால் மிரட்டப்பட்டு அவர்களுக்கு fine போடப்படுகிறது என்று சொன்னால், Helmet அவசியம் அணிய வேண்டுமா இல்லையா என்பதை முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், மிகப் பெரிய குழப்பம் இருக்கிறது. அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, வழக்கறிஞர்களுக்கும் காவல் துறையினருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு பல நேரங்களில் நீதிமன்ற பணிகளெல்லாம் நிறுத்தி வைக்கப்படுகின்றன. நீதிமன்றங்கள் வழக்கறிஞர்களால் புறக்கணிக்கப்படுகின்றன. அதற்கும் ஒரு குழுவைப் போட்டு, இருக்கிற குழு இருந்தாலும், அதைவிட இன்னும் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, பிரியங்கா—நளினி சந்திப்பு. அந்தச் சந்திப்பிலே யார், யாரைச் சந்தித்தார்கள் என்பதன் உள்ளே நுழைய நான் விரும்பவில்லை. ஆனால், அப்படி நடந்த சந்திப்பு உண்மையில் நடந்ததா இல்லையா என்கிறபோது, வேலூர் சிறையினுடைய Superintendent ஞானசவுந்தரி, அப்படி ஒரு சந்திப்பு நடக்கவே இல்லை என்கிறார். அதற்குப் பிறகு, அவரேதான் நடந்தது என்று சொல்கிறார். சிறையினுடைய ஓர் உயர் அதிகாரி இப்படி மாற்றி மாற்றி கருத்தைச் சொல்கிறார் என்று சொன்னால், அதற்குக் காரணம் ஏதேனும் நிர்ப்பந்தம் இருந்ததா? உண்மையிலே சந்திப்பு நடந்ததா அல்லது வேலூரிலே சிறையிலே அந்தச் சந்திப்பு நடந்ததா அல்லது வேறு எங்கேயாவது வீட்டிலே நடந்ததா என்பதையும் எனக்குத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு காவல் துறையினர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களைத் தவிர்த்து, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்மீது பல பொய் வழக்குகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போடுவதற்குக் காரணமாக யார் இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் காவல் துறையை இன்றைக்கு இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, (குறுக்கீடு) உண்மைக்கு மாறாக.

அதைப்போல, இங்கே எங்கள் அம்மா வந்தபோது, அவருக்குப் பேச வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதனால் சென்று விட்டார்கள்.





எங்களுடைய அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் நடக்கிற சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு அல்லது நம்முடைய உரிமைகள் பறிக்கப்படாமல் இருப்பதற்காக இந்த அவைக்கு பேச வருகிறார்கள். அப்போது அது மறுக்கப்படுகிறது. சில நேரங்களில் பேச அனுமதிக்கிறார்கள். மறுக்கப்படுகிற நேரத்திலே வெளியிலே செல்கிறார்கள். அதைப் பார்த்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எப்போதாவது அவைக்கு வந்து பேசுகிறவர் என்று சொன்னார். எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. கடந்த காலத்திலே எங்கள் அம்மா முதலமைச்சராக இருக்கிற நேரத்தில், 5 ஆண்டு காலமும் இந்த முதலமைச்சர் வரவில்லை என்பதுதான் வேதனைக்குரிய செய்தி. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருக்கிற நேரத்திலே, சொன்னது மட்டுமல்ல, இந்த அவையிலே எங்களுடைய அம்மா எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற நேரத்திலே கடுமையாகத் தாக்கப்பட்டார். அப்படித் தாக்கப்பட்டதற்குப் பின்னாலும், இங்கே பாதுகாப்பு இருக்காது என்று தெரிந்தும், அன்றைக்குத் தாக்கியவர்கள் பலர் இன்றைக்கு அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறபோது, எங்கள் அம்மா அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், யாருக்கோ மனது குத்துகிறது, யாருக்கோ குத்துகிறது. எனவேதான் அவர் எழுந்து நின்று பார்க்கிறார். ஆக இன்றைக்கு நான் சொல்கிறேன். . . (குறுக்கீடு)

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** எங்கள் அம்மா அவர்கள் இங்கே வந்ததைக் குறிப்பிட்டுப் பேசியதை நான் குறையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நீங்கள் ஆளும் கட்சியில் இருக்கிறீர்கள். 'ஆளும் கட்சியினுடைய கோழி முட்டை அம்மிக்கல்லைக்கூட உடைக்கும்' என்று பழமொழி இருக்கிறது. எனவே, நீங்கள் நினைப்பதைச் சாதிக்கப் போகிறீர்கள். அது வேறு விஷயம். ஆனால், நான் கேட்கிறேன், கடந்த காலத்திலே இன்றைய முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் விடுகின்ற நேரத்திலே, இந்த நாட்டிலே நடந்த சாலை விபத்துகளையெல்லாம் குறிப்பிட்டு, சட்டம்-ஒழுங்கிற்கு இவை எல்லாம் உதாரணங்கள் என்று எழுதியிருக்கிறார். இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் பார்த்தேன். கிட்டத்தட்ட, 2007–லே 60,000 சாலை விபத்துகள் நடந்ததாகவும், 12,000–க்கு மேற்பட்டவர்கள் இறந்ததாகவும்

குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியாக இருக்கின்றபோது இப்படி நடந்திருக்கிறதே என்று நாங்களும் சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டிற்கு, இன்றைக்கு நடக்கின்ற சாலை விபத்துகளையெல்லாம் உதாரணமாக சொன்னால் இன்றைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை நான் இங்கே பணிந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time முடிந்துவிட்டது.

**திரு. வி.பி. கலைராஜன்:** பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரு நிமிடம் கொடுங்கள். எனது தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினருக்கான அலுவலகம் இதுவரையிலும் கட்டித் தரப்படவில்லை. நானும் பலமுறை கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். அவை எனக்கு மறுக்கப்படுகின்றன. அதற்கு ஆளும் கட்சியினுடைய தூண்டுதலும் காரணம் என்று சொல்கிறார்கள். அதையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

இறுதியிலே சொல்கிறேன், தாழ்ந்த புருவங்கள் ஓர் நாள் நிமிரும். கவிழ்ந்த இமைகள் ஓர் நாள் உயரும். இருகிய உதடுகள் ஓர் நாள் துடிதுடிக்கும். சோர்ந்திட்ட தோள்கள் ஓர் நாள் விம்மிடும். காலங்கள் மாறிடும். காட்சிகளும் மாறிடும். கழகத்தின் ஆட்சி அம்மா தலைமையில் மீண்டும் விரைவில் தமிழகத்தில் மலரும். அதுநாள் வரை நீங்கள் ஆள்க. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேரவையில் எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் திங்கட்கிழமையும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(12–5–2008)* காலை *9–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1–31* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*61.* முடிவாக்கப்பட்ட பொருட்களின் தயாரிப்பிற்குப் பயன்படுத்துவதற்காக காட்பாடியிலுள்ள திருவாளர்கள் வொர்த் டிரஸ்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட பொருட்களைக் கொள்முதல் செய்யும் வணிகர் இதன்பேரில் செலுத்தத்தக்க





*வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 17–3–2008 ஆம் நாளிட்ட 30 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*62. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*227. மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)*

*228. மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)*

*229. மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)*

*230. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)*

*231. 2007–2008 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)*

*232. எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)*

[2008 மே 9

*233.* சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2008–2009.* (தமிழ்)

*234.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. *(2007–2008)*



2008 மே 9]

## இணைப்பு-I

*(113 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முகவுரை

தமிழ்நாடு காவல் துறையானது ஒரு சிறந்த காவல் துறை என்ற தனிச் சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது. காவல் துறையின் தொடர் நடவடிக்கைகளால் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் மத நல்லிணக்கம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மாநிலத்தில் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் பெரிய அளவிலான சம்பவங்கள் ஏதும் நிகழாமல் திருவிழாக்கள், ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள் போன்ற தருணங்களில், பொது அமைதி பேணுவதில் மிகுந்த கடமையுணர்வுடன் காவல் துறையினர் திறமையாகப் பணியாற்றி வந்துள்ளனர். தொழிலாளர் மற்றும் விவசாயப் பிரச்சினைகள் ஏதுமின்றிப் பொது அமைதி காக்கப்பட்டு வருகிறது.

2. வனப் பகுதிகளில் தீவிரவாதிகள் பயிற்சி முகாம்களை அமைக்க இரு முறை முற்பட்டபோது அவர்களது முயற்சிகளை முறியடித்து மாவோயிசக் குழுவைச் சேர்ந்த இரண்டு பேரைக் கைது செய்து, இதன்மூலம் மாநிலத்தில் தீவிரவாதம் தலைதூக்காமல் காவல் துறையினர் தடுத்துள்ளனர். கடலோர மாவட்டங்களில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்திக் கடத்தல்காரர்கள், இலங்கையிலிருந்து வரும் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்து 48 இலங்கையைச் சேர்ந்த தீவிரவாதிகள் உட்பட 139 பேரைக் காவல் துறையினர் கைது செய்தனர். அவ்வாறு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகக் கடத்தல் நடவடிக்கைகள் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தப்பட்டு தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுக்கப்பட்டுள்ளது.

3. உள்ளூர்க் குற்றவாளிகள் பிற மாநிலக் குற்றவாளிகளுடன் சேர்ந்து கூட்டுக் கொள்ளையில் ஈடுபடுவதைக் கண்காணித்துத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் கொடூரமான கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. சொத்துக் களவு குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் காவல் துறையினர் மேற்கொண்ட தீவிரமான தொடர் புலன் விசாரணையால் கண்டுபிடிப்புச் சதவிகிதம் 85-க்கும் அதிகமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. சொத்துக் களவுகளால் உடைமைகளை இழந்தோரின் இன்னல்களைக் களையும் வகையில் 2007ஆம் ஆண்டில் சொத்து மீட்பு சதவிகிதம் 83ஆக அதிகரித்துள்ளது. கணினிசார் குற்றங்கள், வீடியோ திருட்டு, பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் ஆகியவற்றை தடுப்பதற்கு முன்னுரிமை அளித்து, சிறப்புச் சட்டங்களை நடைமுறைபடுத்தி, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை போன்றவற்றிற்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் அனைத்தும் தொடர்ந்து நல்ல பலனை அளித்து வருகின்றன. 2007-08ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூபாய் 101 கோடியில், சென்னை காவல் பிரிவினருக்கென ரூபாய் 15.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், கட்டடம் கட்டுவதற்காக ரூபாய் 26.15 கோடியும், வீட்டு வசதிக்கென ரூபாய் 30.38 கோடியும், வாகனங்கள் வாங்குவதற்காக ரூபாய் 17.24 கோடியும் ஒதுக்கப்பட்டன.

5. (அ) காவல் துறையில் ஏற்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையானது ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 755 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 5000 இரண்டாம் நிலைக் காவலர்கள் கூடுதலாக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் வாரியம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) காவல் துறையின் வருங்கால பயிற்சித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவில், அதி நவீன வசதிகள் அடங்கிய காவல் உயர் பயிற்சியகம் (போலிஸ் அகாடமி) ஒன்று சென்னைக்கு அருகே 15.03.2008 அன்று திறந்து வைக்கப்பட்டது.



(இ) காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தருவதில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. தற்பொழுது கட்டப்பட்டு வரும் 2,525 குடியிருப்புகள் உட்பட மொத்தம் 46,232 காவல் குடியிருப்புகள் உள்ளன.

(ஈ) காவல் துறை மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கும், மக்களின் தேவைகளையறிந்து செவ்வனே கடமையாற்றுவதற்கும், நிர்வாக ரீதியாகக் கொண்டு வரவேண்டிய மாற்றம் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட மூன்றாவது மாநில காவல் ஆணையம் அளித்துள்ள பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## I. நிருவாக அமைப்பு

6. காவல் துறைத் தலைமை இயக்குநர் காவல் துறைக்கு தலைவராக உள்ளார். கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், காவல் துறை தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு நிலை அதிகாரிகள் காவல் துறைத் தலைமை இயக்குநரின்கீழ், துறை திறமையாகச் செயல்பட துணை புரிகின்றனர்.

7. இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்பு-I-ல் தமிழ்நாடு காவல் துறையின் பல்வேறு நிலைகள் உள்ளிட்ட பணியமைப்பு விவரங்கள் தரப்பட்டுள்ளன.

8. மண்டலக் காவல் துறைத் தலைவர்கள், மதுரை, திருச்சி, கோவை மற்றும் சென்னை ஆகிய இடங்களை முறையே தலைமையிடமாகக் கொண்டு கூடுதல் காவல் துறை இயக்குநரின் (சட்டம் மற்றும் ஒழுங்கு) தலைமையின்கீழ் பணி புரிகின்றனர். சென்னை மாநகர காவல் ஆணையரகம் மண்டலக் காவல் துறை தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதில்லை. காவல் துறைத் தலைமை இயக்குநர் அளவிலான அலுவலரின் தலைமையின்கீழ் இயங்கும் பயிற்சிப் பிரிவு, வீட்டு வசதி கழகம் மற்றும் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தையும் இத்துறை தன்னகத்தே கொண்டுள்ளது. இத்துறையின் சிறப்புப் பிரிவுகள் கூடுதல் தலைமை இயக்குநர்கள் மற்றும் காவல் துறைத் தலைவர்கள் தலைமையின்கீழ் இயங்குகின்றன.

9. 01.01.2008 முதல் இந்திய காவல் பணி அதிகாரிகளின் எண்ணிக்கை 236 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 31.03.2008 அன்றைய நிலவரப்படி இவர்களின் எண்ணிக்கை 189 ஆக உள்ளது. இத்துறையின் ஒப்பளிக்கப்பட்ட செயற்பணியாளர்களின் எண்ணிக்கை 1,02,474 ஆகவும் அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,453 ஆகவும் உள்ளது.

[2008 மே 9

## II. சட்டம் - ஒழுங்கு

10. 2007-08-ல் காவல் துறையினர் பொது அமைதி பராமரிப்புப் பணியைச் சீராகச் செய்ததன் விளைவாக மாநிலத்தில் பெரிய அளவில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் எழவில்லை. மாநிலம் முழுவதும் உள்ள சமூக விரோத மற்றும் அமைதியைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராகப் பன்முக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால், சட்டம் ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு பிரச்சினைகளில், மாவட்டக் காவல் துறையினர் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நுண்ணறிவு தகவல்கள் முன்கூட்டியே அளிக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாட்டில் சாதி, மத மோதல்கள் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது.

11. மத சார்பான விழாக்கள், முக்கிய தலைவர்களின் நினைவு நாட்கள் மற்றும் பிறந்த நாள் விழாக்களின்போது விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால் அந்நிகழ்ச்சிகள் அமைதியாக நடைபெற்று முடிந்தன. அதேபோன்று பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்களின்போது தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட காரணத்தால் பொது அமைதிக்குக் குந்தகம் இல்லாத வகையில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டது. தொழிலாளர் பிரச்சினைகள் திறம்படக் கையாளப்பட்டதால் மாநிலத்தில் தொழிலமைதி நிலவுகிறது. மத சம்மந்தமான பிரச்சினைகள் எழும்போது, தமிழ்நாடு காவல் துறையினர் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு, தக்க நேரத்தில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால், மத நல்லிணக்கம் பேணப்பட்டது. தடை செய்யப்பட்ட மத அடிப்படைவாத குழுக்களின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, குறிப்பிட்ட சம்பவங்களில் ஈடுபட்டவர்களைக் காவல் துறையினர் கைது செய்ததோடு, அவர்களுக்கு எதிராகத் தேசிய பாதுகாப்புச் சட்டமும் பயன்படுத்தப்பட்டது.

12. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தீவிரவாதச் செயல்கள் தலைதூக்கியுள்ள போதிலும், தமிழகத்தில், நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த தகவலின்பேரில், காவல் துறையினர் மேற்கொண்ட தடுப்பு மற்றும் தீவிர நடவடிக்கைகள் காரணமாக, மாநிலத்தில் தீவிரவாத வன்முறைச் செயல்கள் தடுக்கப்பட்டன. வனப் பகுதிகளில் அடிக்கடி தேடுதல் வேட்டை நடத்தியதாலும், மாநில எல்லைப் பகுதிகளில் 24



2008 மே 9]

மணி நேரமும் செயல்படும் சோதனைச் சாவடிகள் அமைத்ததாலும், தீவிரவாதம் சம்பந்தப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் மற்றும் சுவரொட்டிகள் போன்றவற்றை புழக்கத்தில் விட முயன்றபோது, அவற்றைத் தொடர்ந்து கூர்ந்து கண்காணித்து வந்ததாலும், தீவிரவாதச் சவால்களைச் சமாளிப்பதற்கு மாவட்ட காவல் துறையினருக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதாலும், அண்டை மாநிலங்களிலிருந்து தீவிரவாத அமைப்புகள் தமிழகத்தில் காலூன்ற முற்பட்ட சம்பவங்கள் உடனுக்குடன் தடுத்து நிறுத்தப்பட்டன.

13. தடுப்பு மற்றும் தீவிர விழிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட தமிழகக் காவல் துறையினர், 2007ஆம் ஆண்டில் மாவோயிசக் குழுவைச் சேர்ந்த 17 பேரைக் கைது செய்து, அவர்களில் நான்கு பேரைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைத்தனர். தடை செய்யப்பட்ட இயக்கங்களான தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழக விடுதலை இயக்கம், பிற தீவிரவாத அமைப்புகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்து வந்ததால் மாநிலத்தில் பொது அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டன.

14. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக, அகதிகள் போர்வையில் இலங்கைப் போராளிகள் தமிழகத்திற்குள் நுழைவதைத் தடுக்கும்பொருட்டு, கடலோர மாவட்டங்களில் காவல் துறையினர் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்தியிருப்பதோடு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பலப்படுத்தி, தமிழகத்திற்கு வரும் இலங்கை அகதிகள் ஒவ்வொருவரையும் தீவிரமாகச் சோதனை செய்து அதன்பின்னரே அனுமதிக்கின்றனர். வெடிபொருட்கள், இரும்பு உருளைகள், சிறுவடிவ குண்டுகள், மருந்துகள் மற்றும் இதர பொருள்களை இலங்கைக்கு அனுப்ப முற்பட்ட கடத்தல்காரர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, அதன்மூலம் கடத்தல் நடவடிக்கைகள் முழுவதுமாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

15. இலங்கைக் கடற்பகுதிக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்ததாக இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள்மீது அடிக்கடித் தாக்குதல் நடத்தி வருவதையடுத்து, அத்தகைய தாக்குதல்களைத் தடுக்கும்பொருட்டு, இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோர காவல் படையினருடன் இணைந்து இந்தியக் கடல் எல்லையில் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த நடவடிக்கை

எடுக்கப்பட்டது. இந்திய மீனவர்கள் மீதானத் தாக்குதல்களைத் தடுப்பதற்கும், கடத்தல் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், இந்திய கடல் பகுதியில் ரோந்துப் பணியைத் தீவிரப்படுத்த தமிழக அரசு கேட்டுக் கொண்டதன்பேரில், இரண்டு கப்பல்களையும், நவீன கட்டமைப்பு வசதிகள் அடங்கிய படகுகளையும் மத்திய அரசு அனுப்பி வைத்தது. இதனையடுத்து, இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள்மீது நடத்தி வந்த தாக்குதல்கள் மட்டுமின்றி, கடத்தல் நடவடிக்கைகளும் கணிசமாகக் குறைந்துள்ளன. 2007 ஆம் ஆண்டில், இலங்கைக்குப் பொருட்களைக் கடத்திய 97 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில், 15 இலங்கைத் தமிழர்கள் உட்பட 36 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 2008ஆம் ஆண்டில் இதுவரையில் (31.03.2008 முடிய), 14 இலங்கைத் தமிழர்கள் உட்பட 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 9 பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர். அதில் இருவர் இலங்கைத் தமிழர்கள்.

16. 12.01.2006 முதல் தொடங்கிய நான்காம் கட்ட இலங்கை அகதிகள் வருகையில், 31.03.2008 முடிய 6,832 குடும்பங்களைச் சார்ந்த 21,020 பேர் இந்தியா வந்துள்ளனர். 31.03.2008 நிலவரப்படி, 19,360 குடும்பங்களைச் சார்ந்த 73,087 இலங்கைத் தமிழர்கள் 25 மாவட்டங்களில் இரு சிறப்பு முகாம்களை உள்ளடக்கிய, 117 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. அதற்கான ஒட்டுமொத்த செலவினமும் மாநில அரசால் முதலில் மேற்கொள்ளப்படுகின்றது. பின்னர் மாநிலத் தலைமைக் கணக்காயர் வழங்கும் தணிக்கைச் சான்றிதழின் பேரில் செலவு ஈடு செய்ய முன்மொழிவுகள் நடுவண் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

## காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்

17. காவல் துறை பாதுகாவலின்போது மரணம் நிகழ்ந்த சம்பவங்கள் 2007-ல் வெகுவாகக் குறைந்துள்ளன. 2007ஆம் ஆண்டில் 4 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. காவல் துறையினர் விசாரணைக் கைதிகளிடம் அத்துமீறி நடந்துகொள்ளக் கூடாது என்றும், காவலில் உள்ளவரை துன்புறுத்தக் கூடாது என்றும் அனைத்து அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சந்தேகப்படும் நபர்கள் அல்லது எதிரிகளைக் காவல் நிலையப் பாதுகாப்பில் வைத்திருக்கும்போது,



அவர்களைக் கண்காணிக்க வேண்டியது அவசியம் என அவ்வப்போது கள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதன் காரணமாக, பாதுகாவல் மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்துள்ளனர்.

## காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு

18. 2007-ல், காவல் துறையினர் 13 நிகழ்வுகளில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இவற்றில் 5 சம்பவங்கள் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடத்தப்பட்டவையாகும். மீதமுள்ள 8 சம்பவங்கள் கொடுங்குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக நடத்தப்பட்டவையாகும். துப்பாக்கிச் சூடு தவிர்க்கப்பட வேண்டுமென்றும், நுண்ணறிவுத் தகவல்களை முன்கூட்டியே திரட்டுவதன்மூலம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கினை நிலை நாட்டிட வேண்டுமென்றும் அனைத்து காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

19. 2006, 2007 மற்றும் 2008 ஆம் (31.03.2008 முடிய) ஆண்டுகளில் நேர்ந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் குறித்த விவரங்கள் இணைப்பு-2-ல் அளிக்கப்பட்டுள்ளன.

## III. குற்ற நிகழ்வு நிலவரம்

20. 2007 ஆம் ஆண்டில், குற்ற நிகழ்வுகளைக் குறைப்பதற்காக காவல் துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு, துரிதமாகக் குற்ற வழக்குகளைக் கண்டுபிடித்தும், களவுபோன சொத்துகளை மீட்டும் துறையின் நற்பெயரை தக்க வைத்துக் கொண்டுள்ளனர். 2006ஆம் ஆண்டில் நிகழ்ந்த 95 கூட்டுக் கொள்ளைச் சம்பவங்கள், 2007ஆம் ஆண்டில் 88ஆகக் குறைந்துள்ளன. 2006ஆம் ஆண்டில் திருட்டு வழக்குகள் 13,651 ஆகும். 2007ஆம் ஆண்டில் 13,217 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 87 சதவிகித வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 2006ஆம் ஆண்டில், களவு பொருட்கள் மீட்பு 81 சதவிகிதமாக இருந்தது. அது, 2007ஆம் ஆண்டில் 83 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 2006ஆம் ஆண்டில், மீட்கப்பட்ட களவுச் சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 34.81 கோடி. சொத்து தொடர்பான குற்ற நிகழ்வு நிலவரம் மற்றும் 2004-2007ஆம் ஆண்டுகளில் களவுபோன மற்றும் மீட்கப்பட்டச் சொத்துக்களின் விகிதம் முறையே இணைப்பு-3 மற்றும் 4-ல் தரப்பட்டுள்ளன. 2007ஆம் ஆண்டில், ரூ.48.67 கோடி

[2008 மே 9

மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு முதல், 2007 ஆம் ஆண்டு வரையில் சொத்துக்களவுக் குற்ற விவரங்கள், களவுபோன சொத்துக் கண்டுபிடிப்பு மற்றும் மீட்பு குறித்த தகவல்கள் இணைப்பு-5-ல் தரப்பட்டுள்ளன. 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு (31-03-2008 முடிய) குற்ற நிகழ்வு புள்ளிவிவரங்களை ஒப்புநோக்கிட இணைப்பு-6-ல் தரப்பட்டுள்ளன.

**பெண்களுக்கு எதிரான குற்றம்**

21. பெண்களின் சட்டப்பூர்வமான உரிமைகள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆபத்துக் காலத்தில் பெண்களுக்கு உதவிட தொலைபேசி வசதி (இலவச தொலைபேசி எண் 1091) / குழந்தைகளுக்கு உதவிட தொலைபேசி வசதி (இலவச தொலைபேசி எண் 1098) செய்து தரப்பட்டுள்ளது. ஆலோசனை மையங்கள் மூலமாகவும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பெண்கள் தற்போது ஒரு பாதுகாப்பு உணர்வோடு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அணுகி, தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்று வருகின்றனர். அவ்வாறு பெறப்படும் அனைத்து புகார்களின்மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மகளிர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு, 2762 வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையில், பெண்களுக்கெதிரான குற்றங்கள் குறித்த விவரங்கள் இணைப்பு-7-ல் தரப்பட்டுள்ளன.

## IV. போக்குவரத்து விபத்துகள்

22. 2006 ஆம் ஆண்டில், தமிழகத்தில் 55,145 சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் உயிரிழந்தோர் 11,009 பேர். தமிழ்நாட்டில் சாலை விபத்துகளின் எண்ணிக்கையும், விபத்தில் மரணமடைந்தோரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. 2007 ஆம் ஆண்டில், மொத்த சாலை விபத்துகள் 59,140; அவற்றில் உயிரிழந்தோர் 12,036 பேர். நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத் துறை மற்றும் காவல் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விபத்துக்குள்ளானவருக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கவும், இறப்பு எண்ணிக்கையைக் குறைக்கவும்,



2008 மே 9]

தேவையான பகுதிகளில் அவசரகால நிவாரண மையங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் அவசரகால ஊர்தி, நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கான படுக்கைக் கட்டில், முதல் உதவிப் பெட்டி, தகவல் தொடர்பு சாதனங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## V. காவல் ஆணையம் ( போலீஸ் கமிஷன் )

23. காவல் துறையினரின் பணிகள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் காவல் துறை நவீனமயமாக்கல் போன்றவற்றை ஆராய்வதற்கென, நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 3 காவல் ஆணையங்களை அமைத்த ஒரே மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. காவல் துறையினரின் பணித் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்றும், தொழில்சார்ந்த வகையில் செயல்படும் திறமைமிக்க காவல் துறையை உருவாக்க வேண்டுமென்றும் மாநில அரசு காட்டும் அக்கறையை இது வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

24. தமிழ்நாடு அரசு இதுவரை 3 காவல் ஆணையங்களை முறையே 1969, 1989 மற்றும் 2006-ல் அமைத்துள்ளது. முதல் ஆணையம் அளித்த 133 பரிந்துரைகளில் 115 பரிந்துரைகளும், இரண்டாவது ஆணையம் அளித்த 112 பரிந்துரைகளில் 87 பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

25. திரு. ஆர். பூர்ணலிங்கம் இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் துணைத் தலைவராகவும், காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. கே. இராமானுஜம், இ.கா.ப., செயலர் உறுப்பினராகவும், ஓய்வுபெற்ற காவல் துறை இயக்குநர் திரு. பெ. காளிமுத்து, இ.கா.ப., ஓய்வுபெற்ற சிறைத் துறை துணைத் தலைவர் திரு. ஜி. இராமச்சந்திரன், திருமதி ஜோன்ஸ் ரூசோ ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மூன்றாவது காவல் ஆணையம் பின்வரும் ஆய்வு எல்லைகள் குறித்து தமது பரிந்துரைகளை வழங்கிட அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது:-

01 காவல் துறையினரின் பணி, குடியிருப்பு மற்றும் நலன் பற்றிய பொதுவான நிலைமை

02 சட்டம் ஒழுங்கை பராமரித்தல், குற்ற நிகழ்வுகளை கண்டுபிடித்தல் மற்றும் போக்குவரத்தை சீர்செய்தல் ஆகியவற்றில் காவல் துறையினரின் செயல்பாடுகள்

03 அமைப்பு மற்றும் முறைகளை நவீனமயமாக்கல், புலன் விசாரணைக்கான வசதிகள், புள்ளிவிவரங்கள் மற்றும் ஆவணங்கள், ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்

04 காவல் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்த திட்டம், நிருவாக அமைப்பை நெறிமுறைப்படுத்துதல், தெரிவு, பயிற்சி மற்றும் பணி நியமனம்

05 பொதுமக்கள், அரசியல் மற்றும் அரசியல்சாரா அமைப்புகளுடனான காவல் துறையினரின் நல்லுறவு

06 நீதிமன்றங்கள், நீதிமன்ற நடுவர்கள் மற்றும் பிற அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு

26. அண்மையில், இவ்வாணையம் தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்வதற்காக உள் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் துறை கூடுதல் இயக்குநர் (பயிற்சி) ஆகியோரைக் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## VI. காவல் துறை நவீனமயமாக்கல்

27. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்து வரும் விவரம் மற்றும் அதன் பயன்பாடு குறித்த விவரங்கள் இணைப்பு-8 மற்றும் 9-ல் தரப்பட்டுள்ளன.

28. 2002-2003 ஆம் ஆண்டு வரை காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக மத்திய அரசும், மாநில அரசும் சரி நிகர்த் தொகையை நிதி ஒதுக்கீடாக வழங்கி வந்தன. 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் இந்த நிதி ஒதுக்கீடு முறையானது மத்திய அரசின் பங்கு 60 சதவிகிதமாகவும் மாநில அரசின் பங்கு 40 சதவிகிதமாகவும் மாற்றப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு 25 சதவிகித நிதியும், மத்திய அரசு 75 சதவிகித நிதியும் ஒதுக்கீடு செய்கின்றன.

29. 2007-2008ஆம் ஆண்டு காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கென ரூ.101 கோடி (மத்திய அரசின் பங்கு 75.75 கோடி, மாநில அரசின் பங்கு 25.25 கோடி) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





2008-2009 ஆம் ஆண்டு காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கென 68 கோடி ரூபாய் மதிப்பில் (மத்திய அரசின் பங்கு 51 கோடி, மாநில அரசின் பங்கு 17 கோடி) வரைவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசின் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

30. காவல் துறை நவீனமயமாக்குதல் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருதி காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பது குறித்து அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

## VII. நலத் திட்டங்கள்

31. காவல் பணியாளர்கள் தங்கள் பணியில் முழுக் கவனத்தையும் செலுத்துவதற்கு உதவியாக, அவர்களையும் அவர்களின் குடும்பத்தாரையும் பாதுகாப்பதில் அரசு அவர்களுக்கு பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### (i) குறைகளைக் களைதல்

அனைத்து நிலையிலான உயர் அலுவலர்களும் “குறை கேட்பு நாள்” நடத்திடும் பொருட்டு குறிப்பிட்ட அட்டவணை ஒன்று கீழ்க்கண்டவாறு வகுக்கப்பட்டுள்ளது:–

* ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் ஆயுதப் படை அணிவகுப்பில் கலந்து கொண்டு, ஆயுதப்படைப் பிரிவு பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையன்றும் மாவட்டங்களில் பல்வேறு பிரிவுகளில் உள்ள உள்ளூர் காவல் துறை பணியாளர்களுக்கென குறைகேட்பு நாளை அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் நடத்தி, குறைகளைக் களைய வேண்டும்.
* மாதம் ஒரு முறை சரக தலைமையிடங்களில் காவல் துறைத் துணைத் தலைவர் குறை கேட்பு நாளை நடத்தி, காவல் பணியாளர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* இரு மாதத்திற்கு ஒரு முறை கூடுதல் காவல் துறை இயக்குநர்கள்/மண்டல காவல் துறைத் தலைவர்கள்/சிறப்புப் பிரிவு காவல் துறைத் தலைவர்கள் ஆகியோர் குறைகேட்பு நாளை நடத்தி, காவல் பணியாளர்களின் குறைகளைக் களைய வேண்டும்.

[2008 மே 9

* ஒவ்வொரு மண்டலத் தலைமையிடத்திலும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காவல் துறைத் தலைமை இயக்குநர் "குறை கேட்பு நாளை" நடத்தி வருகிறார்.

### (ii) மானிய விலையில் உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டம்

காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள காவல் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானிய விலையில் உணவுப் பொருள்களை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(அ) இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில், ரூபாய் 1.15 கோடி செலவில் 27,966 காவல் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் காரணமாக 50 விழுக்காடு மானியத்தில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

(ஆ) அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் ஆகியவற்றிற்கென அரசு 50 சதவிகித மானியம் வழங்குகிறது. மானியத் தொகை உளுத்தம் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு 3 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், துவரம் பருப்புக்கு 4 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், ரவைக்கு ரூ.1.50 லிருந்து 3 ரூபாயாகவும், மைதாவுக்கு ரூ.1.50 லிருந்து 3 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

(இ) அரசு வழங்கி வந்த அரிசி 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தப்பட்டது.

### (iii) தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம்

இத்திட்டம் 1957-ல் தொடங்கப்பட்டது. இதன்மூலம் அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களும், அவர்தம் குடும்பத்தினரும் நிதியுதவிகள் மற்றும் இதர நிவாரண உதவிகள் பெற்றிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கு உறுப்பினர்கள் சந்தாவும், அற உணர்வு கொண்டோர் நன்கொடையும் அளித்திட, மாநில அரசும் மானியம் வழங்குகிறது.

### (iv) தமிழ்நாடு காவல் பணியாளர் உடல் நலப் பாதுகாப்பு நிதியம்

இந்நிதிமூலம் தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்கள், கொடிய நோய்களுக்குச் சிகிச்சை செய்துகொள்ளவும், தேவையெனில் சிறப்பு அறுவை சிகிச்சை செய்துகொள்ளவும், நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசு மானியம் 1999 ஆம் ஆண்டில், ரூபாய் 50 லட்சம் என்பது ரூபாய் 1 கோடியாக உயர்த்தப்பட்டது. 2002 ஆம்



2008 மே 9]

ஆண்டில் இத்திட்ட நிதியுதவியானது ஒன்றரை லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. சந்தாத் தொகை ரூ.10 லிருந்து ரூ.15 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் 440 பேருக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.2.98 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### (v) தமிழ்நாடு காவல் துறை பணியாளர் காப்பீட்டுத் திட்டம்

இரண்டாம் நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரை காவல் துறையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் பயன்பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின்படி, பணியாளர்கள் கடமையாற்றும்போது, விபத்து உட்பட இதர காரணங்களால் இறக்க நேர்ந்தாலோ, நிரந்தர முடக்கம் அல்லது பகுதி ஊனம் அடைந்தாலோ அவர்களின் சட்டப்படியான வாரிசுகள் அல்லது நியமனதாரர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| பதவி | இறப்பு | நிரந்தர ஊனம் | நிரந்தரப் பகுதி ஊனம் |
|---|---|---|---|
| 1. பொதுக் காவல் பிரிவு | | | சென்னை அரசு பொது மருத்துவமனை தலைவரால் நிர்ணயிக்கப்படும் ஊனத்தின் விகிதாச்– சாரத்தின்படி |
| காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை | ரூ.1,00,000/- | ரூ.1,00,000/- | |
| காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | ரூ.5,00,000/- | ரூ.5,00,000/- | |
| காவல் துறை கூடுதல் இயக்குநர் | ரூ.7,50,000/- | ரூ.7,50,000/- | |
| காவல் துறை இயக்குநர் | ரூ.10,00,000/- | ரூ.10,00,000/- | |
| 2. சிறப்பு இலக்குப்படை, அதிரடிப்படை, அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி, அதி விரைவுப் படை மற்றும் முக்கிய பிரமுகரின் பாதுகாப்புப் படை ஆகியவற்றைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் | ரூ.10.00.000/- | ரூ.10,00,000/- | தொகையில் 50 சதவிகிதம் |

[2008 மே 9

2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், உயிரிழந்த காவல் பணியாளர்களின் பத்துக் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.10 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

**(vi) கருணைத் தொகை**

காவல் பணியாளர்கள் தங்களின் அன்றாடப் பணிக்காலத்தில் குறிப்பாக, சட்டம் ஒழுங்கை பராமரிக்கும்போது, கூட்டத்தினரை சமாளிக்க, பல்வேறு சவால்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், அவர்களுக்குக் கடுமையான காயங்களும் ஏற்படுகின்றன. காவல் பணியாளர்களின் துயர்களையும்/இழப்புகளையும் ஈடு செய்ய அவர்களுக்குப் பின்வரும் விகிதத்தில் கருணைத் தொகை வழங்கப்படுகிறது:-

| | |
|---|---|
| இறப்பு | ரூ.5 லட்சம் |
| நிரந்தர ஊனம் | ரூ.1 லட்சம் |
| கடுங்காயம் | ரூ.20,000 |
| சிறுகாயம் | ரூ.10,000 |

பணிக்காலத்தின்போது உயிர்துறக்கும் காவல் பணியாளரின் சட்டப்படியான வாரிசுக்கு, அவர் கடைசியாகப் பெற்ற முழுச் சம்பளமே அவரது பணிக்காலம் முடியும் வரையில் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டில், கடுங்காயம் அடைந்த இரண்டு காவல் பணியாளர்களுக்குத் தலா ரூ.20,000/- வீதம் ரூ.40,000/- வழங்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயல் இழக்கச் செய்யும் பிரிவு, அதிரடிப்படைப் பிரிவு மற்றும் அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளி பணியாளர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்படும் கருணைத் தொகை விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| (அ) | (i) காவல் துறை கண்காணிப்பாளர் உயிரிழந்தால் - | ரூ.10 லட்சம் |
| | (ii) காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை உயிரிழந்தால் - | ரூ.6 லட்சம் |
| (ஆ) | கை, கால், பார்வை, மனநிலை போன்ற நிரந்தர ஊனம் ஏற்பட்டால் (அனைத்து பதவியினருக்கும்) | ரூ.4 லட்சம் |
| (இ) | உருக்குலைவு ஏற்பட்டால் (அனைத்து பதவியினருக்கும்) | ரூ.2 லட்சம் |



2008 மே 9]

**(vii) பரிசுத் திட்டங்கள்**

காவல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களின் பிள்ளைகள் பள்ளி இறுதித் தேர்வு மற்றும் 12-ம் வகுப்புத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரங்களில் அதிக மதிப்பெண் பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்தால் அவர்களுக்கு 10ஆம் வகுப்பெனில் முறையே ரூபாய் 6,000/-, ரூபாய் 4,000/-, ரூபாய் 2,000/- 12ஆம் வகுப்பெனில் ரூபாய் 7,000/-, ரூபாய் 5,000/-, ரூபாய் 3,000/- என ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி காவல் துறைப் பணியாளர்களின் 211 பிள்ளைகளுக்கு, 2007ஆம் ஆண்டிற்கான பரிசாக ரூ.9,54,000/- வழங்கப்பட்டது.

**(viii) தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம்**

1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம் அரசிதழ் பதிவு பெறாத காவல் துறை பணியாளர்களின் பிள்ளைகளுக்கு உதவித் தொகை வழங்கி, அவர்களை உயர் கல்வி பெற ஊக்குவிக்கிறது. ஆண்டுதோறும் நன்கொடை மற்றும் ஒரே தவணைப் பங்களிப்பு ஆகியவற்றின்மூலம் இத்திட்டத்திற்கு நிதி திரட்டப்படுகிறது. 2007-2008 கல்வியாண்டில் 4,497 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ.2.34 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(ix) தமிழ்நாடு அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதியம்**

இந்நிதி கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவல் துறை பணியாளர்களின் மகன் / மகள்களில் மாநில அளவில் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று முதலிடம் எய்துபவருக்கு ரூ.40,000 அடுத்து, இரண்டாம் இடம் முதல் ஒன்பதாவது இடம் வரை பெறுவோருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது

**(x) கருணை அடிப்படையில் பணி நியமனம் மற்றும் பிற சலுகைகள்**

பணியில் இருக்கும்போது மரணம் அடையும் அரசுப்

பணியாளர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட பணி நியமனங்கள் மற்றும் காலமுறை ஊதிய உயர்வு குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

(1) கருணை அடிப்படை நியமன காத்திருப்போர் பட்டியலில் இருந்து 30 இளநிலை உதவியாளர்களும், 63 தட்டச்சர்களும் பணி நியமனம் பெற்றனர்.

(2) சோதனைச் சாவடியில் பணியில் இருந்தபோது லாரி மோதி இறந்து போன திருநெல்வேலி நகரைச் சேர்ந்த தலைமைக் காவலர் தர்மராஜ் என்பவரின் மனைவி திருமதி செல்லம்மாள் என்பவருக்கு இளநிலை உதவியாளராகக் கருணை அடிப்படையில் சிறப்புப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

(3) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 26-04-2007 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு, இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பணிகளுக்காக கருணை நியமன காத்திருப்போர் பட்டியலில் இருந்து 914 பேருக்குச் சிறப்புப் பணி நியமன அடிப்படையில், இரண்டாம் நிலை காவலர் பணி வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இது வரையில், 358 பேர் நியமனத்திற்காக, தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(4) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 26-04-2007 அன்று, சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, மாதம் ஒன்றுக்கு ரூ.2500/- தொகுப்பு ஊதியம் பெற்று வந்த 650 தரவுப் பதிவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.

### (xi) காவல் மருத்துவமனைகள்

காவல் பணியாளர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், 12 இடங்களில் காவல் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், பரங்கிமலை, வேலூர், கடலூர், விருதுநகர், திருநெல்வேலி (புறநோயாளிப் பிரிவு மட்டும்) ஆகிய இடங்களிலும், ஆவடியில் உள்ள தமிழ்நாடுச் சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி, மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடுச் சிறப்புக் காவல்படை ஒன்பதாம் அணி ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன.



### (xii) தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

2007 ஆம் ஆண்டில், மரணமடைந்த, காவல் பணியாளர்களின் மூன்று குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ஐந்து லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

## (VIII) பெண் காவலர்கள்

32. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் மகளிர் காவலர்கள் பணிபுரிகின்றனர். சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், குற்ற நிகழ்வுகளைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல், பாதுகாப்பு மற்றும் அது சம்பந்தமான கடமைகள் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற முக்கியமான காவல் பிரிவுகளிலும் மகளிர் பங்கு கொண்டு கடமையாற்றி வருகின்றனர்.

33. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கையாளுவதற்கேற்ப, மகளிர் காவலர்களைத் தயார் செய்யும் வகையில், ஆலோசனை வழங்கும் நுணுக்கங்கள் குறித்த சிறப்புப் பயிற்சி பெண் காவலர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் மூலம் திருமணத்திற்குப் பிறகு கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆண்களால் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்கள், பணிபுரியும் இடங்களில் ஏற்படும் இடர்பாடுகள் ஆகியவை திறம்படக் கையாளப்படுகின்றன. மாநிலத்தில், தற்போது 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

34. பெண்களுக்கு அவர்களுடையச் சட்டப்படியான உரிமைகள் குறித்து அறிந்துகொள்ளும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக அனைத்து மாவட்டங்களிலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒலிபெருக்கி வசதிகள், வண்ணத் தொலைக்காட்சி, காணொலி பதிவுக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வாகனங்கள் இம்மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## IX. தமிழ்நாடு காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

### குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை

35. மாநிலக் குற்றப் பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது. குற்றப் புலனாய்வுத் துறையில் 7 தனிப் பிரிவுகளும், 34 உட்பிரிவுகளும் உள்ளன. அனைத்து காவல்

[2008 மே 9

துறை ஆணையரகங்களும் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றங்களை விசாரிப்பதற்கென தனிப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரகத்தில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இதைப் போன்றே மற்றொரு பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைத் தலைமையகத்திலும் செயல்பட்டு வருகிறது. இவை தவிர போலி மற்றும் கள்ளநோட்டுகளைக் கண்டு பிடிக்கவும், போலியானச் சான்றிதழ்கள், முத்திரைத் தாள், கடவுச்சீட்டு, கிரெடிட் கார்டு மோசடி வழக்குகள் போன்ற பல்வேறு குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை ஈடுபட்டுள்ளது. பெண்களையும், குழந்தைகளையும் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதைத் தடுத்திட குற்றப் புலனாய்வுத்துறையில் விபச்சாரத் தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டில் மட்டும் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையால் 190 வழக்குகள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 37 வழக்குகளில் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டு, 19 வழக்குகளில் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மாநில குற்ற ஆவணக் காப்பகம்

36. மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம், குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்துப் பகுப்பாய்வு செய்கிறது. இக்காப்பகம், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், புள்ளிவிவரப் பிரிவு மற்றும் குற்றவாளிகள் குற்றம் செய்யக் கையாளும் முறையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கி காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. மேலும் குற்றம் சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் ஒருங்கிணைக்கும் மையமாகவும் செயல்படுகிறது. 2007 ஆம் ஆண்டில், 87 சதவிகித குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 83 சதவிகித திருட்டுப் போன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

37. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சார்பில் குற்றம் மற்றும் குற்றத் தகவல் முறை (Crime and Criminal Information System) மற்றும் பொது ஒருங்கிணைந்த காவல் அமைப்பின் செயல்பாடு (Common Integrated Police Application) ஆகிய மென்பொருள்களைக் கொண்டு தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நிகழ்வுகளைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.



2008 மே 9]

## குற்றப் பிரிவு

38. **குற்றப் பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் பின்வரும் பிரிவுகளைக் கொண்டு இயங்குகிறது:**

**(i) சிறப்புப் புலனாய்வுப் பிரிவு** — மத அடிப்படைவாதிகள் தொடர்பான வழக்குகளில் தீவிர புலன் விசாரணை செய்வதற்கும், வழக்குகளை நடத்துவதற்கும் எனத் தனியாகச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டு காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது. 2007 ஆம் ஆண்டில், 230 அடிப்படைவாதிகள் தொடர்பான ஐந்து வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. இதுவரையில், இப்பிரிவின்மூலம் 27 வழக்குகளில் 348 அடிப்படைவாதக் குற்ற எதிரிகளுக்குத் தண்டனைகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன. 107 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

**(ii) போதைப்பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு** — தமிழகத்தில் 15 அலகுகள் கொண்டு இயங்கி வரும் இப்பிரிவு காவல் துறைத் துணைத் தலைவர், ஒருவரின்கீழ் செயல்படுகிறது. போதைப் பொருள் கடத்தல் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களை சேகரிக்கும் இப்பிரிவு போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறது. 2007 ஆம் ஆண்டில், 1472 வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டு, 1496 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் போதைப் பொருள் கடத்திய 21 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலடைக்கப்பட்டனர். ரூ. 27.36 கோடி மதிப்புள்ள கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

**(iii) வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு** — காவல் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையில் இயங்கிவரும் இப்பிரிவில் மாநிலம் முழுவதிலும் 12 அலகுகள் உள்ளன. பதிப்பு காப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு காணொளிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பு கட்டுப்பாட்டு சட்டம், 1984 ஆகியவற்றின் விதிகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்து தண்டனைப் பெற்றுத் தரும் பணிகள் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில், 1844 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1866 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். ரூ. 17.39 கோடி மதிப்புள்ள கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

(iv) கூட்டுக்கொள்ளைத் தடுப்புப் பிரிவு — காவல் கண்காணிப்பாளர் அளவிலான அதிகாரியின்கீழ் இயங்கி வரும் இப்பிரிவு மாநிலத்திலும், மாநிலங்களுக்கிடையேயும் செயல்படும் குற்றவாளிகளையும் அவர்களது நடவடிக்கைகளையும் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருகிறது.

**பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு**

39. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக, 1997ஆம் ஆண்டில், பணம் வைப்பீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்க தனிச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டில், பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவும் தொடங்கப்பட்டது. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்கும் இப்பிரிவில் பின்வரும் அலகுகள் உள்ளன.

**(i) பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு-II (நிதி நிறுவனங்கள்)**

40. வங்கிப் பணிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை தகுதி பெறாத நிதி நிறுவனங்களில் பொதுமக்களால் முதலீடு செய்யப்பட்ட வைப்புத்தொகையை அதன் முதிர்ச்சி காலத்திற்கு பின் பட்டுவாடா செய்யத் தவறும் நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில், காவல் துறையில் இப்பிரிவு அமைக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டில், ரூ.118.28 கோடி வைப்புத்தொகை முதலீட்டாளர்களுக்கு பெற்றுத் தரப்பட்டது.

41. இப்பிரிவு புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட முக்கிய வழக்குகள் பற்றி அவ்வப்போதைய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஏப்ரல் 2007-ல், கணினி மூலமான நேர்முகத் தகவல் பெறும் தனித்தளம் உருவாக்கப்பட்டது. மின்னஞ்சல்மூலம் புகார்கள் இதில் பெறப்பட்டு வருகின்றன.

**(ii) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு**

42. 1971 ஆம் ஆண்டில் இப்பிரிவு நிதி மோசடிக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டது. இப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையில் செயல்படுகிறது. மேலும் 7 உட்கோட்டங்களுடன் அனைத்து மாவட்டங்களிலும் இப்பிரிவின் அலகுகள் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களில் நடக்கும் ரூ.1 லட்சத்துக்கும் மேற்பட்ட நிதி கையாடல் வழக்குகளை இப்பிரிவு புலன் விசாரணை செய்கிறது.





43. 2007ஆம் ஆண்டில், வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவால், 91 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இப்பிரிவு துவக்கப்பட்டதிலிருந்து 149 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு 88 வழக்குகளில் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

**(iii) சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு**

44. முக்கியமானச் சிலைத் திருட்டு வழக்குகளில் புலன் விசாரணைப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடுவதுடன், ரூ.5 லட்சத்துக்கு மேல் மதிப்புள்ள தொன்மை வாய்ந்த சிலை திருட்டு வழக்குகளையும், காவல் துறை தலைமை இயக்குநரால் ஒப்படைக்கப்படும் சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்கிறது.

**சிறப்பு செயல்பாடுகள் பிரிவு**

45. சிறப்பு செயல்பாடுகள் பிரிவில், தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி ஆகியவை உள்ளன. சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு என்ற பெயரில் இயங்கி வந்த ஒரு பிரிவு, 1997-ல் தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி என மறு வடிவமைப்புச் செய்யப்பட்டது.

**(i) தமிழ்நாடு அதிரடிப்படை**

46. தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதத் தடைச் சட்டம் (தடா), பயங்கரவாதத் தடைச் சட்டம் (பொடா) மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளை வழிக்காவல் பாதுகாப்பு பணி, மிக முக்கியமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணி, முக்கிய நிகழ்ச்சிகளின்போது இதர பாதுகாப்புப் பணி ஆகியவற்றை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு, மீட்புப் பணி, வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், தேர்தல் பாதுகாப்புப் போன்றப் பல்வேறு பணிகளையும் இப்படையினர் செய்து வருகின்றனர். மேலும் காவல்பணிக்கான அகில இந்திய துப்பாக்கிச் சுடும் சாம்பியன்ஷிப் போட்டிகளிலும், காவல் பணிக்கான அகில இந்திய கைத்துப்பாக்கிச் சுடும் போட்டிகளிலும் கலந்து கொண்டனர். இப்பிரிவின் மகளிர் காவல்பணியாளர்கள் துப்பாக்கிச் சுடும் போட்டியிலும், கைத்துப்பாக்கிச் சுடும் போட்டியிலும் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டம் வென்று சுழற்கோப்பைகளை 2007 ஆம் ஆண்டில் கைப்பற்றியுள்ளனர்.

**(ii) தமிழ்நாடு அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளி**

*47.* நவீன ஆயுதங்களைக் கையாள்வதற்கும், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் நுணுக்கத்திற்கு தேவையான அனைத்து பயிற்சிகளையும் இப்பள்ளி அளிக்கிறது. ஸ்னீபர் வகை துப்பாக்கிச் சுடுதல், வனப் பகுதியில் தங்கியிருத்தல் ஆகியவற்றுக்கும், நவீன ஆயுதங்கள் மற்றும் நாசவேலைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவற்றைத் திறமையாகக் கையாள்வதற்குத் தேவைப்படும் சிறப்புப் பயிற்சிகளை இப்பள்ளி அளித்து, திறமையான அதிரடிப்படை வீரர்களாக உருவாக்கிட உதவுகிறது.

**(iii) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை**

*48.* வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச், செயலிழக்கச் செய்யும் இப்படை திறமை வாய்ந்த நிபுணர்களைக் கொண்டு தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியின் சிறப்புப் பிரிவாகச் செயல்படுகிறது. சாதுரியமான தொழில்நுட்பத்துடன் வெடிகுண்டுகளை விரைந்து கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பணி இப்பிரிவின் சிறப்பம்சமாகும்.

**நுண்ணறிவுப் பிரிவு**

*49.* நுண்ணறிவுப் பிரிவின்கீழ், தனிப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் பிரிவு ஆகியவை உள்ளன. முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களையும், நுண்ணறிவுத் தகவல்களையும் சேகரித்து, ஒப்பாய்வு செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை இப்பிரிவு ஆற்றி வருகிறது. கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின்கீழ், ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும் இரண்டு காவல் துறைத் துணைத் தலைவர்கள் ஆகியோரது மேற்பார்வையில் இப்பிரிவுகள் இயங்கி வருகின்றன. காவல் துறைத் துணைத் தலைவர் *(1)* தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவற்றையும், அண்மையில் உருவாக்கப்பட்ட பதவியான காவல் துறைத் துணைத் தலைவர் *(2)* 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் பிரிவு ஆகியவற்றின் பணிகளையும் மேற்பார்வையிட்டு வருகின்றனர்.





**(i) தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

*50.* ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆணையரகத்திலும், ஆய்வாளர் ஒருவரது தலைமையில், இத்துறையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. மாநில அளவில் தனிப்பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையானது, மாநிலத்தில் மதம் சார்ந்த பிரச்சினைகள், சாதிச் சார்ந்தப் பிரச்சினைகளால் ஏற்படும் பதற்ற நிலை மற்றும் பிற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வுச் செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது.

*51.* தனிப் பிரிவு அளிக்கும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் மாவட்ட காவல் துறையானது, உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, பெரிய அளவில் சாதி மோதல் எதுவும் நிகழவில்லை.

**(ii) 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

*52.* குற்றப் புலனாய்வுத் துறையில் தனி அலகு ஒன்று *1971* ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. *1976* ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இவ்வலகின் பெயர் 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை என மாற்றப்பட்டு, தற்போது நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. தீவிரவாதிகள், போராளிகள் மற்றும் பயங்கரவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை இப்பிரிவு சேகரிக்கிறது. இப்பிரிவின் அலகுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, அவற்றிற்கு தீவிரவாதிகள், போராளிகள் மற்றும் பயங்கரவாதிகள் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**(iii) பாதுகாப்புப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை**

*53.* முக்கியப் பிரமுகர்கள், மிக முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அயல்நாட்டுத் தலைவர்கள் ஆகியோரது பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளைப் பாதுகாப்புப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் வெளிநாட்டவரின் நடவடிக்கைகள், முக்கியக் கேந்திர அமைப்புகள் மற்றும் கடவுச்சீட்டுகள் தொடர்பான நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

[2008 மே 9

54. மிக முக்கிய நபர்கள் பாதுகாப்புப் பிரிவில் மெய்க்காவல் குழு, வெடிகுண்டுகளைக் கண்டு பிடித்து செயலிழக்கச் செய்யும் படை, மோட்டார் வாகனப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, மோப்பநாய்ப்படை மற்றும் பெண்கள் அணி ஆகிய பிரிவுகள் பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் அடங்கியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் மாவட்டச் சுற்றுப் பயணங்கள் ஆகியவற்றின்போது உச்சக்கட்டப் பாதுகாப்பினை இப்பிரிவு வழங்கி வருகிறது.

55. 2007 ஆம் ஆண்டில், அதி முக்கிய நபர்கள், முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோர் வருகையின்போது, 416 நிகழ்வுகளில் பாதுகாப்பு வழங்கப்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாக்கப்பட வேண்டிய நபர்கள் மற்றும் முக்கிய நபர்கள் ஆகியோருக்கு 138 நிகழ்வுகளில் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

### (iv) சிறப்புப் பிரிவு

56. கோவை தொடர்குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து, மத அடிப்படைவாதிகள் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக, 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் இந்தச் சிறப்புப் பிரிவுகள் செயல்படுகின்றன.

### (v) காவல் சுருக்கெழுத்துக்கூடம்

57. காவல் சுருக்கெழுத்துக்கூடத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் அலகுகள் உள்ளன. பொதுக்கூட்டப் பேச்சுக்களை முழுமையாகக் குறிப்பெடுப்பதும், அவதூறானப் பேச்சுகளைக் கண்காணிப்பதும் இப்பிரிவின் பணியாகும். இது தவிர, குற்றப்புலனாய்வுத் துறையின் மாநிலக் குற்றப் பிரிவு, க்யூப் பிரிவு, சிறப்புப் பிரிவு, தமிழ்நாடுச் சட்டமன்றம் மற்றும் பொதுத் (அதிமந்தணம்) துறை தொடர்பான முக்கிய ஆவணங்களை மொழிப்பெயர்ப்பு செய்யும் பணிகளும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.



2008 மே 9]

### தொழில்நுட்பப் பிரிவு

58. காவல் துறையின் தொலைதொடர்பு கட்டமைப்பு வசதிகளைத் தனித் தொழில்நுட்பப் பிரிவு பராமரித்து வருகிறது. இப்பிரிவு, காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறது.

59. அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் காவல் நிலையங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் வகையில் மிக உயர்அலை, உயர்வேக தொலைதொடர்பு சாதன வசதிகள் உள்ளன. தற்போது 88 மறுஅஞ்சல் செய்யும் நிலையங்களிலிருந்து 121 மறுஅஞ்சல் அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இது வரையில், 6160 மிகஉயர்அலை (நிலையானது) மற்றும் நடமாடும் கருவிகள், 11,018 கையில் எடுத்துச் செல்லவல்ல மிக உயர் அலைக் கருவிகள், மறுஅஞ்சல் செய்யும் கருவிகள் 214 மற்றும் உயர்வேக அதிர்வலைக் கருவிகள் 162 ஆகியவை மாநிலத்தில் தொலைத் தொடர்புக்கான பயன்பாட்டில் உள்ளன. மாவட்ட அளவில் நுண்ணலை தொலைபேசி வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

60. காவல் துறையின் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த அரசு இடையறா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு காவல் துறை அலகுகள் மற்றும் காவல்நிலையங்களுக்கிடையே தகவல் பரிமாற்றங்கள் விரிபரப்பு இணைய திட்டம் (WAN) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவல் நிலையங்களிடையே ஒலி மற்றும் தரவுகளை இணைப்பதற்கென "கோர் டெக் வில்" வலைதளம் ஒன்று உருவாக்கப்பட்டு முழுமையாக செயல்பட்டு வருகிறது. ரூ.2.50 கோடி செலவில் 2008-09 நிதியாண்டிற்குள் 100 சதவிகித டிஜிட்டல் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும் ரூ.186.54 லட்சம் செலவில் சென்னைக்கும், கொடைக்கானலுக்குமிடையே, பழமையான 8 எம்.பி. நுண்ணலை வானொலி மாற்றி 34 எம்.பி.-யாக உயர்த்த உத்தரவிடப்பட்டுள்ளது. அனலாக் முறையைக் கைவிட்டு மேம்பட்ட டிஜிடல் நுண்ணலைத் தகவல் முறையைப் புதிதாக அமைக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கவும், தூத்துக்குடி-நாகர்கோவில் இடையே 6 தொடர்புகள் ரூ.329.58 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட உள்ளன.

61. தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த பணியாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும், தகவல் தொடர்பு சாதனங்களைப்

[2008 மே 9

பராமரிப்பதோடு கணினி மற்றும் அதன் உபகரணங்களையும், பாதுகாப்பு பணிக்கான கருவிகளையும், அலுவலகத் தானியங்கிக் கருவிகளையும் பராமரித்து வருகின்றனர். 2007 ஆம் ஆண்டு காவல் தொலைத் தொடர்புப் பிரிவு தலைமையகத்தில் காவல் கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### சிறப்பு இலக்குப் படை

62. காவல் துறைத் தலைவர் அளவிலான அலுவலர் தலைமையின்கீழ் சிறப்பு இலக்குப் படை செயல்பட்டு வருகிறது. இப்படையின் வீரர்கள் ஆட்கடத்தல், ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள், பணத்திற்காக அதி முக்கிய நபர்களைக் கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்கானப் பயிற்சி பெற்றவர்களாவர். மேலும், மாநிலத்தில் பெரிய அளவிலான இயற்கைச் சீற்றங்கள், தொடர்வண்டி விபத்துகள் மற்றும் மீட்பு நடவடிக்கைக்குத் தேவைப்படும் நிகழ்வுகளின்போது உள்ளூர் காவல் துறையினருக்குப் பேருதவியாக செயல்படவும் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது மாநிலம் முழுவதும் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் இவர்களின் பணி பயன்படுத்தப்படுகிறது.

### சமூக நீதிப் பிரிவு

63. 1955 ஆம் வருடத்திய குடிமையியல் 1989 ஆம் வருடத்திய பட்டியலினத்தவர் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட விதிகளையும், பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்ட விதிகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இப்பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மேலும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனரமைப்பு பணிகளையும் செய்து வருகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் பாதிக்கப்படும் வகையிலான சர்ச்சைகளைத் தீர்த்து வைக்கும் பணியினையும் ஆற்றி வருகிறது.

64. 2007ஆம் ஆண்டில் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 10 வழக்குகளும், பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் 1359 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 72 வழக்குகளில் தண்டனை பெற்றுத் தரப்பட்டது. இதில் 6 வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் 656 வழக்குகளில் பாதிக்கப்பட்ட 1160 பேருக்கு மொத்தம் ரூ.1.69 கோடி நிவாரணம் பெற்றுத் தரப்பட்டது. 2007ஆம் ஆண்டில் இப்பிரிவின்மூலம் சமூகநீதி விழிப்புணர்வு முகாம்கள் 476 முறை நடத்தப்பட்டுள்ளன.



2008 மே 9]

### காவல் பயிற்சிப் பிரிவு

65. காவல் துறை அமைப்பில் பயிற்சி என்பது ஒரு முக்கிய அம்சமாகும். எனவே காவல் பயிற்சிப் பிரிவு காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இவருக்கு உதவியாக காவல் துறை கூடுதல் இயக்குநர் இருவரும், காவல் துறை தலைவர் இருவரும், காவல் துறை துணைத் தலைவர் ஒருவரும், காவல் கண்காணிப்பாளர் மூவரும், இதர பயிற்சித் திட்ட அலுவலர்களும் உதவிகரமாகச் செயல்பட்டு, பல்வேறு வகையான பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்தி வருகின்றனர்.

### (i) காவல் பயிற்சிக் கல்லூரி

66.. காவல் பயிற்சிக் கல்லூரி பயிற்சியாளர்களுக்குச் சிறப்புப் பாடத் திட்டங்களுக்கான வகுப்புகளையும், பயிலரங்குகளையும், பயிற்சிகளையும் நடத்துவதோடு, மூத்த காவல் துறை அதிகாரிகளுக்கென பல்வேறு கருத்தரங்குகளையும் நடத்துகிறது. பயிற்சிப் பிரிவில் வேலூர், கோயம்புத்தூர் மற்றும் பேரூரணி ஆகிய இடங்களில் காவல் பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன. காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அப்பதவிக்குக்கீழ் உள்ள அதிகாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. கோயம்புத்தூரிலும், தூத்துக்குடியிலும் தற்காலிக காவல் பயிற்சிப் பள்ளிகளும், சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, காஞ்சிபுரம், வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், விழுப்புரம், ஆகிய இடங்களில் சரக தலைநகரங்களிலும் பணியிடைப் பயிற்சி மையங்களும் உள்ளன.

67. 2007 ஆம் ஆண்டில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கான

அடிப்படைப் பயிற்சிகளுடன் இந்திய காவல் பணி அலுவலர்களுக்கான தகுதிகாண் பருவத்தின்போது புத்தாக்கப் பயிற்சியும், ஆய்வாளர்களுக்கும், உதவி ஆய்வாளர்களுக்கும் ஆயத்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. இது தவிர, போக்குவரத்தைத் திட்டமிட்டு நிர்வகித்தல், நடைமுறைப்படுத்துதல், போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள், கடன் அட்டை மோசடி போன்றவற்றில் நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட 55 பாடங்கள் அடங்கிய குறுகிய கால பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அறிவுசார் சொத்துரிமை, மனிதவள மேம்பாடு, காவல் துறையின் மதிப்பினை உயர்த்துதல் போன்ற சிறப்புப் பாடங்களில் மூத்த காவல் துறை அதிகாரிகளுக்குப் பயிலகங்கள் நடத்தப்பட்டன.

### (ii) தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்

*68.* வண்டலூர் அருகே, ஊனமாஞ்சேரி கிராமத்தில் அனைத்து நவீனக் கட்டமைப்பு வசதிகளோடுகூடிய காவல் உயர் பயிற்சியகம், 129 ஏக்கர் நிலப்பரப்பில் 4.46 லட்சம் சதுர அடியில், ரூ.48.23 கோடி செலவில் கட்டப்பட்டு 15-03-2008 இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதற்குத் தேவையான தளவாடங்கள், பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், வாகனங்கள், மரச்சாமான்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய அரசு 4.48 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

*69.* இப்பயிற்சிக் கழகத்தில், நிர்வாக வளாகம், நூலக வளாகம், கருத்தரங்கு வளாகம், கலை அரங்கம், நீச்சல் குளம், உடற்பயிற்சியகம், விடுதி வளாகம், தொழில்நுட்ப மையம், தடய அறிவியல் வளாகம், தியான மையம் ஆகியவை உள்ளன. வெளிப்புறப் பயிற்சிக்காக, கவாத்து மைதானங்கள் நான்கும், விளையாட்டுத் திடல் ஒன்றும், விளையாட்டுப் போட்டிகளுக்கான வளாகம் ஒன்றும், தடை தாண்டி செல்லும் பயிற்சிப் பெற ஒரு திடலும் கட்டப்பட்டு வருகின்றன.

*70.* தமிழ்நாடு காவல் பயிற்சி வளாகத்தில் உதவி ஆய்வாளர்கள் 400 பேருக்கு மேலாக, அரசிதழ் பதிவு பெற்ற காவல் துறை அதிகாரி 70 பேரும் பயிற்சி பெறும் அளவுக்கு வசதிகள் உள்ளன. இது தவிர, காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு சிறப்பு மற்றும் தொழில்





சார்ந்த அம்சங்களில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

### தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

*71.* தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் ரெஜிமென்டல் மையம் உள்ளிட்ட 16 சிறப்புக் காவல் அணிகள் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. ஆவடி மற்றும் திருச்சியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை கட்டுப்பாட்டின்கீழ் இரண்டு காவல் போக்குவரத்துப் பணிமனைகள் இயங்கி வருகின்றன. எட்டாம் அணி புதுடெல்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் அயற்பணியில் உள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள் பெருமளவிலான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், கோவில்களின் முக்கிய திருவிழாக்கள், அரசியல் கட்சிகளின் பேரணிகள் ஆகியவற்றின்போது மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அதுமட்டுமின்றி, சிறப்பு இலக்குப்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, சிறைச்சாலைப் பணிகள், சிறப்பு அகதிகள் முகாம்கள் மற்றும் காவல் துறை தலைமை அலுவலகப் பாதுகாப்புப் பணி போன்றவற்றிற்கும் அனுப்பப்படுகின்றனர். மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளின்போது அணி வகுப்புகள் நடத்தவும் இப்படையினரின் பணி பயன்படுத்திக்கொள்ளப்பட்டு சிறப்பு சேர்க்கப்படுகிறது.

*72.* 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் மூவாயிரம் காவலர்கள் பணி மாற்றம் செய்யப்பட்டு, மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படைக்கு அனுப்பப்பட்டனர்.

### கடலோரக் காவல் படை

*73.* கடலோர காவல் படையானது முக்கியமாக தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு எரி பொருட்கள், மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் கடல்வழியாகக் கடத்தப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவதைத் தடுக்கவும் உருவாக்கப்பட்டது. இப்படை கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. கடற்கரையோரம் 1076 கிலோ மீட்டர் தூரத்தைப் பாதுகாக்க 60 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 40 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடலோரப் பாதுகாப்ப குறிக்க

நுண்ணறிவுத் தகவல்களைப் பெறும் வகையில் கடலோர கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள 441 கிராமக் கண்காணிப்புக் குழுக்கள், கடற்படை, கடலோர பாதுகாப்புப் படை, உள்ளூர் காவல் துறை, மீன்வளத் துறை, சுங்கத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளோடு கடலோரக் காவல்படையினர் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர். 2007 ஆம் ஆண்டு, கடலோரக் காவல் படை குறிப்பிடத்தக்க வகையில் எரிபொருள், அரிசி, போக்குவரத்து வாகனங்கள் இன்னபிறவற்றைக் கைப்பற்றியுள்ளன.

74. கடலோரக் காவல் படை 12 கடல்சார் காவல் நிலையங்களுடனும் 10 கடல்சார் புறக்காவல் நிலையங்களுடன் 100 சோதனைச் சாவடிகளுடனும் இயங்கிட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடல்சார் காவல் நிலையங்கள் அமைப்பதற்குத் தேவையான நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டுள்ளது.

75. 2007 ஆம் ஆண்டு, சென்னை கடலோரக் காவல் படையின் சார்பில், 100 காவல் பணியாளர்களுக்கு 20 கட்டங்களாக (ஒவ்வொரு க்ட்டத்திலும் ஒரு ஆய்வாளர்/ ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 4 காவல் பணியாளர்கள் வீதம்) கடல்சார் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு கடல்சார் பயிற்சிக்காகக் கடலோரக் காவல் படைக் கப்பலில் அனுப்பப்பட்ட இந்த 20 அலுவலர்கள் மற்றும் 80 காவல் பணியாளர்களுக்குக் கடலில் கயிறு ஏறும் பயிற்சி, கடலில் கப்பலை நிறுத்துதல் மற்றும் விடுவித்தல், கடல் பயணத்தின்போது குறிபார்த்துச் சுடுதல், தீயணைப்புப் பணியை மேற்கொள்ளுதல், மீன்பிடிப் படகுகள் மற்றும் கப்பல்களுக்குள் சென்று சோதனையிடுதல் போன்ற பல்வேறு கடல்சார் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்றுவிக்கப்பட்டது. அடிப்படையான கப்பலோட்டும் வல்லமைக்கான பயிற்சி தவிர, ரோந்துக் கப்பல்கள் மற்றும் விரைவுப் படகுகளில் ரோந்துப் பணிகளை மேற்கொள்வது குறித்தும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

76. 2007 ஆம் ஆண்டு முதல்கட்டமாக, 8 கடல்சார் காவல் நிலையங்களுக்கென ரூபாய் ஐந்து கோடி செலவில் 176 செயல் பணியாளர்களும், 8 அமைச்சுப் பணியாளர்களும், படகுகளை இயக்குவதற்காக 72 தொழில்நுட்ப ஊழியர்களும் நியமனம் செய்யப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.





**மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு**

77. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு 94 அலகுகள் உள்ளன. ஒவ்வொரு அலகும் ஆய்வாளர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் தலைவர் கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள அதிகாரி ஆவார். கள்ளச் சாராயம் காய்ச்சுவது மற்றும் விற்பனை செய்வதை ஒழிக்கும் பணியுடன் கூட குடிப்பதற்காக எரிசாராயத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பணியிலும் இப்பிரிவு கவனம் செலுத்தி வருகிறது. பல்வேறு அரசுசாரா தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உதவியுடன் கள்ளச் சாராயம் / மெத்தனால் ஆகியவற்றின் அபாயத்தை மக்களிடையே உணர்த்துவதற்காக மாநிலம் தழுவிய விழிப்புணர்வு பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகிறது. 2007 ஆம் ஆண்டு, இப்பிரிவு 74.55 லட்சம் லிட்டர் கள்ளச் சாராயத்தைக் கண்டுபிடித்துள்ளது. 1,18,162 மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1,11,137 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**இரயில்வே காவல் படை**

78. 1932ஆம் ஆண்டு, திருச்சியை முதன் முதலாக தலைமையிடமாகக் கொண்டு இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு, ஏற்கெனவே இருந்த இரயில்வே காவல் படையை இரண்டாகப் பிரித்து, சென்னை இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. இப்படை காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது, இப்படையில் 5 உட்கோட்டங்கள், 33 இரயில்வே காவல் நிலையங்கள், 24 புறக் காவல் நிலையங்கள் மற்றும் 3 நடமாடும் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரயில்களிலும், இருப்புப் பாதை நடைமேடைகளிலும் நிகழும் குற்றங்களைத் தடுப்பது, விசாரிப்பது, இரயில்வே சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பணிகளை இரயில்வே காவல் படை கவனித்து வருகிறது. அதற்காக இப்படையானது, இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. சென்னை எழும்பூர், சென்னை சென்ட்ரல், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 5,525 கிலோ மீட்டர் அளவிலான மிகப் பெரிய இரயில்வே காவல் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் இப்படை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

79. 2007ஆம் ஆண்டு, பதிவு செய்யப்பட்ட 156 வழக்குகளில் 136 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்மூலம் கண்டுபிடிப்பு 87.2 சதவிகிதம் எட்டப்பட்டது.

**மோப்ப நாய் படைப் பிரிவு**

80. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்களிலும் மோப்ப நாய் படைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இவைத் தவிர சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை, அதிரடிப் படை போன்ற சில சிறப்புப் பிரிவுகளிலும் மோப்ப நாய் படைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் தற்போது, தடத்தை பின்பற்றிச் செல்லும் 74 மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் 89 மோப்ப நாய்களும், போதைப் பொருள் கண்டறியும் 11 மோப்ப நாய்களும் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், புலனாய்வுச் செய்வதிலும் இப்படைச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

**குதிரைப் படைப் பிரிவு**

81. தமிழக குதிரைப் படைப் பிரிவில் 36 குதிரைகள் உள்ளன. சென்னை மற்றும் மதுரையில் உள்ள குதிரைப் படை பிரிவுகளில் முறையே 32 மற்றும் 4 குதிரைகள் உள்ளன. கோயம்புத்தூர் குதிரைப் படைப் பிரிவுக்கு ரூ. 7.53 இலட்சத்தில் 6 குதிரைகள் வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நெரிசலைக் கட்டுப்படுத்த குதிரைப் படை பயன்படுத்தப்படுவதுடன், குடியரசு தினம், சுதந்திர தினம், பதக்கம் வழங்கும் விழா போன்ற சிறப்புக் கால அணி வகுப்புகளிலும் குதிரைப் படை பங்கேற்கிறது.

**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்**

82. காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைவராக உள்ள சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் சிறைத் துறை காவலர்களைத் தேர்வு செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது. நேர்மையான, ஒளிவுமறைவற்ற முறையில் பணி நியமனங்களை இவ்வாரியம் மேற்கொள்கிறது.



**ஊர்க்காவல் படை**

83. ஊர்க்காவல் படைக்குக் காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைவராக உள்ளார். மாநில அளவில் காவல் துறை இயக்குநர் அவர்கள் பதவி வழியால் இப்படைக்குத் தலைமைத் தளவாயாகவும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் மற்றும் மாநகர அளவில் காவல் ஆணையர்களும் அந்தந்த அலகுகளுக்குத் தளவாய்களாகச் செயல்படுகிறார்கள். சட்டம் ஒழுங்கு, குற்றத் தடுப்பு, போக்குவரத்தை முறைபடுத்துதல், இரவு ரோந்துப் பணி, முக்கிய நபர்களின் பாதுகாப்பு, பெரிய பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களின்போது மாவட்ட / மாநகர காவல் துறை நிர்வாகத்திற்கு உதவுவதில் பெரும் பங்காற்றி வரும் ஊர்க்காவல் படையானது, அடிப்படையில் ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். மேலும் வெள்ளம் ஏற்படும் சமயங்களிலும் இப்படை உதவி புரிந்து வருகிறது.

84. தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை, 2,750 பெண்கள் உட்பட மொத்தம் 11,622 ஆகும். அனைத்து மாவட்டம் மற்றும் ஆணையரகங்களிலும் மகளிர் ஊர்க்காவல் படைப் பிரிவு உட்பட, ஊர்க்காவல் படை அலகுகள் உள்ளன.

**குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு**

85. அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தையும், மத்திய மாநில அரசுகளால் பிறப்பிக்கப்படும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் நிறைவேற்றிடும் பொருட்டு குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவானது கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படுகிறது. தமிழகம் முழுவதும் 16 அலகுகள் இப்பிரிவின்கீழ் உள்ளன. 2007 ஆம் ஆண்டில், குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவினால் 11,959 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ. 13.77 கோடி மதிப்புள்ள பொது விநியோக முறைத் திட்டத்திற்கான அரிசி 92,991.87 குவிண்டால், மண்ணெண்ணெய் 2,11,950 லிட்டர், சமையல் எரிவாயு உருளைகள் 5,830 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், இப்பிரிவினர், ரூ. 37.14 கோடி மதிப்புள்ள வாகனங்களை பறிமுதல் செய்ததுடன், 1,621 எதிரிகளையும் கைது செய்தனர். இவர்களில், 59 பேர் கள்ளச்சந்தை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பராமரிப்புச் சட்டத்தின் (1980)கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

### மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு

86. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்பட்டு வரும் மாநில போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவானது 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சாலை விபத்துகள் குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், ஆய்வு செய்தல் மற்றும் பல்வேறு அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து சாலைப் பாதுகாப்பைத் திட்டமிடல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில், 80 சாலைப் பிரிவுகளில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளும் 160 நெடுஞ்சாலை ரோந்துப் பணி குழுக்களின் செயல்பாடுகளை இப்பிரிவு கண்காணித்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு, விபத்துத் தடுப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துவரும் அரசு, இத்திட்டத்தின் பயன்பாட்டைக் கருத்தில்கொண்டு மேலும் 42 சாலைப் பிரிவுகளில் பணிபுரிய 84 நெடுஞ்சாலை ரோந்துப் பணிக் குழுக்களை நியமிக்க அனுமதி அளித்துள்ளது. பத்து மாவட்டங்களில் 20 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் மற்றும் 10 மாவட்ட தலைமையிடங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

## X. காவல் துறை வாகன வசதி

87. சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை விளைவிக்கக் கூடிய குற்றச் சம்பவங்கள் நிகழும் சமயத்தில், காவல் துறை விரைவாகவும், உறுதியாகவும் மேற்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்தே அதன் திறன் தீர்மானிக்கப்படுகிறது. பிரச்சினைகள் ஏற்படும்போது, காவல் துறையினர் விரைவாகச் செயல்பட்டு நிலைமைகளைச் சமாளிக்கவும், பிரச்சினைகள் பெரிய அளவில் பரவாமல் தடுக்கவும் போதுமான அளவு வாகனங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். காவல் துறை வாகனங்களின் எண்ணிக்கையையும், தரத்தையும் மேம்படுத்த மாநில அரசு போதிய வாகனங்களை வழங்க முன்வந்துள்ளது.

88. 31-03-2008 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு காவல் துறையில் 11,726 வாகனங்கள் உள்ளன. வாகனங்கள் பற்றிய விவரம் இணைப்பு-10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## XI. காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

89. காவல் துறையின் அனைத்து கட்டுமானங்களும், கட்டடங்களைப் பழுதுபார்க்கும் சிறப்பு வேலைகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





### (i) வீட்டு வசதி

90. ஆயுதப் படை மற்றும் உள்ளூர் காவல் பணியாளர்களின் பணியிடத்திற்கு மிக அருகில் அவர்களுக்குக் குடியிருப்புகளை அமைத்துத்தந்து, தேவைப்படும் போதெல்லாம் அவர்களின் பணிகளை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்வது தனிச் சிறப்பாகும்:

91. இந்நோக்கத்தைக் கருத்தில்கொண்டு, 1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்மூலம் ஒவ்வொரு ஆண்டும் 1,000 குடியிருப்புகளைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. இக்கழகத்தால் கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் சீராக உயர்ந்து வந்துள்ளது. 2000 ஆம் ஆண்டில், குடியிருப்புகள் 3,000-ஆக உயர்த்த ஒப்பளிக்கப்பட்டது. 2006-07 ஆம் ஆண்டிலும் 3,000 குடியிருப்புகள் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2007-08 ஆம் ஆண்டிற்கு 2,000 குடியிருப்புகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை மொத்தம் 23,332 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

92. 2006-07 ஆம் ஆண்டில் ரூ. 150.67 கோடி செலவில், 3,000 குடியிருப்புகளும் 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 110.06 கோடி செலவில் மேலும் 2,000 குடியிருப்புகளும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

93. மொத்த காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 1,02,474. தற்போது உள்ள குடியிருப்புகள் 43,707 ஆகும். மேலும் கட்டுமானப் பணியில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,525. இக்குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டவுடன், குடியிருப்புகளின் எண்ணிக்கை 46,232-ஆக உயர்ந்து, குடியிருப்புகள் தேவையின் அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய 10 குடியிருப்புகள் மற்றும் கோயம்புத்தூர் நகரில் உள்ள மேற்கு மண்டலக் காவல் துறைத் தலைவருக்கான குடியிருப்பு கட்டுவதற்கென ரூ. 188.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2008 மே 9

**குடியிருப்புகள் சம்பந்தப்பட்ட நிலவரம்**




**(ii) காவலர் குடியிருப்புகள்**

*94.* குடியிருப்புகளைக் கட்டித் தருவது மட்டுமல்லாமல், இக்கழகம், காவல் நிலையங்கள், மாவட்ட மற்றும் மாநகர காவல் துறை அலுவலகங்கள், ஆயுதப்படை வளாகங்கள் மற்றும் பிற கட்டடங்கள் கட்டும் பணியையும் மேற்கொள்கிறது. இதுவரையில், இக்கழகம் ரூ. 46.96 கோடி செலவில், 109 காவல் நிலையங்கள், 8 மாவட்ட காவல் துறை அலுவலகங்கள், 1 ஆயுதப்படை வளாகம், 4 நவீன கட்டுப்பாட்டு அறைகள், 11 பணியிடைப் பயிற்சி மையங்கள், ஓய்வறைகள், மோப்ப நாய் உறைவிடம் ஆகியவற்றைக் கட்டியுள்ளது. தற்போது, ரூ. 10.53 கோடி செலவில், 50 காவல் நிலையங்கள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் உள்ளன. தெற்கு மண்டலம், வடக்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டலத்திற்கான காவல் துறைத் தலைவர் அலுவலகங்கள் தலா ரூ. 88.98 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



2008 மே 9]

**காவல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை**

**(196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்பட) = 1452**




## XII. அகில இந்திய காவல் வாத்திய இசைக் குழுப் போட்டிகள்

*95.* மரபுகள் தொடர்புடைய விழா நிகழ்ச்சிகளின்போது, காவல் துறையினரிடையே ஓர் உந்துதலை ஏற்படுத்தவும், அவர்களுக்கு ஊக்கமளித்திடவும் நல்ல தரமுள்ள இராணுவ இசையையும், மெட்டுக்களையும் வளர்ப்பதே அகில இந்திய காவல் வாத்திய இசைக் குழுப் போட்டியின் நோக்கமாகும். விழா நிகழ்ச்சிகளில் வாத்திய இசைக் கருவிகளை வாசிக்கவல்ல திறமையான சிறப்பான அணிகளையும், வல்லுநர்களையும் அடையாளம் காண்பதற்காக, அகில இந்திய காவல் வாத்திய இசைக் குழுப் போட்டி பல்வேறு மாநிலங்களுக்கிடையே சுற்று முறையில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் நடத்தப்படுகிறது. இப்போட்டியின் ஒருங்கிணைப்பு மையமாகப் புதுதில்லியிலுள்ள மத்திய நுண்ணறிவுப் பிரிவு செயல்படுகிறது.

[2008 மே 9

96. ஒன்பதாவது அகில இந்திய காவல் வாத்திய இசைக் குழுப் போட்டியை 1-2-2008 முதல் 4-2-2008 வரை நடத்திட தமிழ்நாடு முதன்முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்போட்டி சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. மொத்தம் 1,035 காவல் பணியாளர்களைக் கொண்ட 11 மாநில, 5 துணை இராணுவப் படைகள், 2 மத்திய காவல் அமைப்புகள் உட்பட 18 அணிகள் இப்போட்டியில் பங்கேற்றன.

97. தமிழ்நாடு காவல் வாத்திய இசைக் குழுவின் திறமை, போட்டிகளின்போது வெளிப்படுத்தப்பட்டது. கொம்பூதும் பிரிவில் தமிழ்நாடும், மேள இசைப் பிரிவில் இராஜஸ்தானும், குழலூதும் பிரிவில் மத்திய ஆயுதப்படையும் முதல் பரிசை வென்றன.

## XIII. தடய அறிவியல் துறை

98. 1849 ஆம் ஆண்டில் தடய அறிவியல் துறை உருவாக்கப்பட்டது. வழக்குகளின் புலன் விசாரணையில் அறிவியல் சார்ந்த உத்திகளை வழங்கி இத்துறை இன்றியமையாப் பங்காற்றி வருகிறது. 230 தடய அறிவியல் பணியாளர்கள் மற்றும் 266 பிற பணியாளர்களின் உதவியுடன் இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இச்சிறப்புப் பிரிவு இயங்கி வருகிறது.

99. 15 உட்பிரிவுகளுடன் சென்னையில் இயங்கும் பிரதான ஆய்வகத்தைத் தவிர, 9 வட்டார ஆய்வகங்கள் மாநிலத்தில் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் / ஆணையரகத்திலும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது. தடய அறிவியல் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவுகளில் மரபணுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

100. 2007 ஆம் ஆண்டில், 2,06,115 பொருட்கள் அடங்கிய 60,628 வழக்குகளை இத்துறை ஆய்வு செய்துள்ளது. கணினிசார் மற்றும் இணையதள குற்றங்களைக் கண்டுபிடிக்க 'கணினி தடய அறிவியல்' பிரிவு ஒன்று புதிதாக 01-12-2007 முதல் செயல்பட்டு வருகிறது. துரித இலக்கமுறை தொடர்பை ஏற்படுத்துவதற்காக சென்னையிலுள்ள பிரதான ஆய்வகத்திற்கும், வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கும் அக்லகற்றை இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒலி தொடர்பான தடய அறிவியல் பிரிவிற்கு ரூ. 13 இலட்சம் மதிப்பில் பொருட்கள் வாங்கவும், ரூ. 10 இலட்சம் மதிப்பில் இத்துறையைக் கணினிமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## XIV. புதிய முயற்சிகள்

### (i) தீவிரவாத நடவடிக்கைகளை முன்நிறுத்தி காவல் துணைத் தலைவர், நுண்ணறிவு எனப் புதியதொரு பணியிடம் ஒப்பளிக்கப்பட்டது.

101. மாநிலத்தில் தீவிரவாதிகள் மற்றும் அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாகக் கண்காணித்துக்



2008 மே 9]

கட்டுப்படுத்துவதற்காகக் காவல் துறைத் துணைத் தலைவர், நுண்ணறிவு-2 எனப் புதியதொரு பணியிடத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இதன்மூலம், அடிப்படைவாதிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்து ஒடுக்கும் பணியை இன்னும் சிறப்பாக ஆற்ற இயலும்.

### (ii) கணினிசார் குற்றங்களைப் புலனாய்வு செய்யும் பிரிவுகளைப் பலப்படுத்துதல்.

102. அண்மைக்காலமாகப் பெருநகரங்களில் மட்டுமின்றி சாதாரண நகரங்களிலும் கணினிசார் குற்றங்கள் பெருகி வருவதைக் காண முடிகிறது. ஆதலால், புலனாய்வு செய்யும் அதிகாரிகள் தக்க திறனைப் பெறும் வகையில் அவர்களுக்குப் பயிற்சிகளை அளித்துக், கணினிசார் குற்றப் பிரிவுகளைப் பலப்படுத்த வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்துறையில் காவல் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் தேசிய மென்பொருள் நிறுவனக் கூட்டமைப்பு "நாஸ்காம்" அமைப்புடன் இணைந்து, 2007-08 ஆம் ஆண்டில், சென்னை-28, இராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள காவல் கணினித் தொடர்பு மையத்தில், 134 புலன் விசாரணை அதிகாரிகளுக்கு மூன்று பிரிவுகளாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### (iii) திருச்சியில் போக்குவரத்துக் கட்டுப்பாடு மேலாண்மை அமைப்பு

103. திருச்சி நகரில் முக்கிய சந்திப்புகள்/பேருந்து நிலையத்தில் வாகன இயக்கத்தை காணொளிக் (Video) கருவிகள்மூலம் கண்காணிப்பதற்காக, ரூபாய் 28 இலட்சம் செலவில் நவீன வசதிகளுடன்கூடிய போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மேலாண்மை முறை பரீட்சார்த்த முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்தைச் சமாளித்து, ஒழுங்குபடுத்துவதற்கு இம்முறை பயனுள்ளதாகக் காணப்படுவதுடன், சாலை விதிகளைக் கடைபிடிக்க வேண்டுமென்ற விழிப்புணர்வையும் பொதுமக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

### (iv) இரயில்வே காவல் படை உதவி மையம்

104. மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும், எந்த நேரமும் சென்னையிலுள்ள கட்டுப்பாட்டு அறையுடன் பயணிகள் தொடர்பு கொண்டு உதவி பெறுவதற்கு ஏதுவாக 9962 500 500 என்ற தொலைபேசி எண்ணை இரயில்வே காவல் படை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த எண்ணில் பயணியிடமிருந்து தகவல் பெறப்பட்டதும், புகார் அளித்த பயணிகளை அணுகி, அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு, கட்டுப்பாட்டு அறையிலிருந்து சுற்றுக்காவல் பணியிலுள்ள

[2008 மே 9

இரயில்வே காவலர்களுக்கு, அவர்களுக்கென வழங்கப்பட்டுள்ள கைபேசிமூலம் தொடர்புகொண்டு அறிவுறுத்தப்படுகிறது. தற்போது 68 விரைவு இரயில்களிலும், 10 நகர மின்சார இரயில்களிலும் இந்த ஏற்பாடு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

### (v) பணியாளர் தேர்வு

105. காலியாக உள்ள 755 உதவி ஆய்வாளர், 5,000 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆணை பிறப்பித்து, அப்பணி முடிவடைந்துள்ளது. அத்துடன், 6,272 இரண்டாம் நிலைக் காவலர்களையும், 354 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களையும், 354 தீயணைப்பு வீரர்களையும் தேர்வு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### முடிவுரை

106. காவல் துறையின் ஒட்டுமொத்த செயல்பாடும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இருப்பினும், பாதுகாப்பிற்கும், அமைதியான சூழலுக்கும் அச்சுறுத்தலாக விளங்கக்கூடிய புதிய சவால்களைச் சமாளிப்பதற்காக மிகுந்த விழிப்போடும் எச்சரிக்கை உணர்வோடும் தன்னை மேலும் தயார்ப்படுத்திக்கொள்வது அவசியமாகும். இத்தகைய சவால்களைச் சந்திக்க இத்துறை தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதன் வாயிலாக மாநிலத்தில் அதிவேக தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படத் தேவைப்படும் சூழ்நிலைகளை உருவாக்குவதில் காவல் துறை பெரும் பங்காற்றும்.

107. சமுதாயத்தின் சாதாரண மக்களும், நலிந்த மற்றும் அடித்தட்டு மக்களும் பயனுற வேண்டும் என்ற அரசின் அடிப்படை நோக்கத்தைச் செயல்படுத்துவதில் காவல் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்நோக்கம் வெற்றி பெறுவதற்குக் காவல் துறை அதிவேகமாக நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதுடன், எண்ணங்களில் புதுமையும், பொறுப்புணர்வுமிக்க தன்மையுடன் செயலாற்றும் திறனும் காவல் பணியாளர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. காவல் துறையில் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும், தொடக்கங்களும், அதன் அன்றாடப் பணிகளில் காவல் பணியாளர்கள் மக்களுடன் நட்போடு பழகும் அணுகுமுறையையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. திட்டமிட்ட, முறையான முயற்சிகளுடன் இக்குறிக்கோளைக் காவல் துறை அடையும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் காவல் துறை செயல்பட அரசு உறுதி பூண்டுள்ளது.








| | |
|---|---|
| STC | மாநில போக்குவரத்துக் கழகம் |
| MTC | மாநகர போக்குவரத்துக் கழகம் |
| TNPPL | தமிழ்நாடு செய்திதாள் மற்றும் காகித நிறுவனம் புகளூர் |
| TNEB | தமிழ்நாடு மின்வாரியம் |
| SHRC | மாநில மனித உரிமை ஆணையம் |
| OSD | சிறப்புபணியில் இருக்கும் அதிகாரி |
| STPC | மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு |
| PO, POL, AC | திட்ட அலுவலர் காவல் கழகம் |

## இணைப்பு-2

*(பத்தி 19-ஐப் பார்க்கவும்)*

**2006, 2007 மற்றும் 2008-ல் 31-03-2008 வரை நிகழ்ந்த காவல் துறை துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் விவரம்**

| வ. எண். | விவரம் | 2006 | 2007 | 2008 (31-03-08 முடிய) |
|---|---|---|---|---|
| 1 | துப்பாக்கிச் சூடு நடைபெற்றச் சம்பவங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை | 17 | 13 | 3 |
| | (அ) கலவரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 3 | 5 | 1 |
| | (ஆ) கூட்டுக் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில் | – | – | – |
| | (இ) பிற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் | 13 | 8 | 1 |
| | (ஈ) மற்றவை | 1 | – | 1 |
| 2 | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 7 | 4 | 2 |
| | (அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | – | – | – |
| | (ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 7 | 4 | 2 |
| 3 | காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 32 | 37 | 14 |
| | (அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | 29 | 32 | 9 |
| | (ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 3 | 5 | 5 |

[2008 மே 9

## இணைப்பு-3

( பத்தி 20-ஐப் பார்க்கவும் )

### சொத்து தொடர்பான குற்ற நிகழ்வு நிலவரம்




## இணைப்பு-4

( பத்தி 20-ஐப் பார்க்கவும் )

### 2004-2007 ஆம் ஆண்டுகளில் களவுபோன மற்றும் மீட்கப்பட்ட சொத்துகளின் சதவிகிதம்

| | 2004 | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|---|
| கண்டுபிடிப்பு சதவிகிதம் | 84% | 85% | 88% | 87% |
| களவுபோன சொத்துகள் (ரூபாய் கோடியில்) | 43.94 | 39.56 | 43.07 | 58.57 |
| மீட்கப்பட்ட சொத்துகள் (ரூபாய் கோடியில்) | 34.97 | 30.89 | 34.81 | 48.67 |
| மீட்பு சதவிகிதம் | 80% | 78% | 81% | 83% |



2008 மே 9]

## இணைப்பு-5

( பத்தி 20-ஐப் பார்க்கவும் )

### மீட்கப்பட்ட சொத்துகளின் சதவிகிதத்தைக் காட்டும் வரைபடம்




## இணைப்பு-6

( பத்தி 20-ஐப் பார்க்கவும் )

### குற்ற நிகழ்வுகள் சம்பந்தமான ஒப்பீட்டுப் பட்டியல்

| வ. எண். | குற்றத் தலைப்பு | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | | |
|---|---|---|---|---|
| | | 2006 | 2007 | 2008 (31-03-2008 முடிய) |
| 1 | கொலை | 1274 | 1521 | 392 |
| 2 | ஆதாயக் கொலை | 89 | 102 | 15 |
| 3 | கூட்டுக் கொள்ளை | 95 | 88 | 21 |
| 4 | வழிப்பறி | 450 | 495 | 163 |
| 5 | கன்னக்களவு | 3300 | 3717 | 981 |
| 6 | திருட்டு | 13651 | 13217 | 3536 |
| | மொத்தம் | 18859 | 19140 | 5108 |
| கண்டுபிடிப்பு சதவிகிதம் | | 89 | 87 | 75 |
| களவுபோன சொத்துகள் | | ரூ.43.07 கோடி | ரூ.58.57 கோடி | ரூ.12.91 கோடி |
| மீட்கப்பட்ட சொத்துகள் | | ரூ.34.81 கோடி | ரூ.48.67 கோடி | ரூ.8.78 கோடி |
| மீட்பு சதவிகிதம் | | 81 | 83 | 68 |

## இணைப்பு-7

(பத்தி 21-ஐப் பார்க்கவும்)

### 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை பல குற்ற வகைகளின்கீழ் பெண்களுக்கு எதிராகப் பதிவான குற்றங்கள்

| வ. எண். | தலைப்பு | 2004 | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|---|---|
| 1 | கற்பழிப்பு | 618 | 571 | 457 | 523 |
| 2 | ஆள்கடத்தல் | 692 | 783 | 718 | 1097 |
| 3 | வரதட்சணை மரணங்கள் | 225 | 215 | 187 | 208 |
| 4 | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 1437 | ·1650 | 1248 | 1976 |
| 5 | மானபங்கம் | 1861 | 1764 | 1179 | 1558 |
| | மொத்தம் | 4833 | 4983 | 3789 | 5362 |

## இணைப்பு-8

(பத்தி 27-ஐப் பார்க்கவும்)

### காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி (ரூபாய் கோடியில்)

| காவல் துறை நவீனமயமாக்கல் வருடம் | மத்திய அரசின் ஒதுக்கீடு | மாநில அரசின் மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2001-02 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002-03 | 68.10 | 68.10 | 136.20 |
| 2003-04 | 52.47 | 36.67 | 89.14 |
| 2004-05 | 56.76 | 37.84 | 94.60 |
| 2005-06 | 65.46 | 21.82 | 87.28 |
| 2006-07 | 59.40 | 19.80 | 79.20 |
| 2007-08 | 75.75 | 25.25 | 101.00 |
| மொத்தம் | 446.04 | 277.58 | 723.62 |





## இணைப்பு - 9

(பத்தி 27-ஐப் பார்க்கவும்)

### காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி

| வ. எண் | இனங்கள் | ஒதுக்கப்பட்ட நிதி - ரூபாய் லட்சத்தில் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
| 1 | கட்டடங்கள் | 1720.90 | 1720.90 | 1531.00 | 2624.00 | 1257.44 | 1308.00 | 2615.28 |
| 2 | வீட்டு வசதி | 5976.24 | 5976.24 | 2255.00 | 1953.00 | 3015.75 | 2562.50 | 3038.77 |
| 3 | வாகன வசதி | 2249.50 | 2249.50 | 2218.15 | 1665.65 | 1837.99 | 1830.97 | 1724.43 |
| 4 | ஆயுதங்கள் | 187.50 | 187.50 | 4.95 | 191.39 | 254.66 | 44.80 | 0.00 |
| 5 | தகவல் தொடர்பு | 774.32 | 774.32 | 235.08 | 781.52 | 516.78 | 247.90 | 811.67 |
| 6 | பயிற்சி | 966.22 | 966.22 | 454.05 | 621.00 | 151.00 | 179.00 | 280.22 |
| 7 | த-அது/ கை.வி.ரே.பி | 197.75 | 197.75 | 45.00 | 380.50 | 308.00 | 227.82 | 606.09 |
| 8 | சாதனங்கள் | 1020.38 | 1020.38 | 1443.69 | 700.06 | 705.45 | 943.29 | 292.97 |
| 9 | கணினிகள் | 527.41 | 57.41 | 726.88 | 361.25 | 378.30 | 436.86 | 595.05 |
| 10 | ஊர்காவல் படை | 0.00 | 0.00 | 0.00 | 181.53 | 134.57 | 40.50 | 33.52 |
| 11 | ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 168.09 | 98.70 | 102.00 |
| | மொத்தம் | 13620.22 | 13620.22 | 8913.80 | 9459.90 | 8728.03 | 7920.34 | 10100.00 |

## இணைப்பு-10

( பத்தி 88-ஐப் பார்க்கவும் )

### 31-03-2008-ல் தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்கள் குறித்த விவரம்




| | | |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | : | பேருந்து / லாரி |
| மிகரக வாகனங்கள் | : | சிறிய பேருந்து / வேன் |
| இலகுரக வாகனங்கள் | : | கார்/ஜீப்/ஆம்னி |
| இருசக்கர வாகனங்கள் | : | மொபெட்/மோட்டார் சைக்கிள் |
| இதர வாகனங்கள் | : | வஜ்ரா/க்ரேன்/கைதி பாதுகாப்பு வாகனம்/ தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனம்/ ஆம்புலன்ஸ்/ஆட்டோரிக்சா |



## இணைப்பு-II

*(113 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 22—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முக்கியத்துவம் உயிர்களையும் மற்றும் உடைமைகளையும் மீட்பது என்ற அளவில் மட்டும் நிற்காமல் வளர்ந்துவரும் நகர்ப்புறமயமாக்குதலினாலும், தொழில் வளர்ச்சியினாலும் இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளினாலும் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடி மீட்பு மற்றும் நிவாரணம் அளிப்பதிலும் உள்ளது. மிகவேகமாக நவீனமயமாகிவரும் சமுதாயத்தின் தேவையினை மனதில் கொண்டு, இத்துறை தனது பணித்திறனை மேம்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

### II. குறிக்கோள்கள்

2. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது "காக்கும் பணி எங்கள் பணி" என்ற குறிக்கோளுடன் மக்களுக்காகச் செயலாற்றும் ஒரு சேவைத் துறையாகும். அத்தியாவசிய சேவைப் பணிகளுடன் இத்துறையானது சட்டப்படியான நடவடிக்கை, ஆலோசனை தரும் பணிகள் மற்றும் வரையறைப்படுத்தும் பணிகள் முதலானவைகளையும் ஆற்றி வருகிறது. பொதுமக்களிடையே தீ தடுப்புப் பிரசாரத்தின் மூலமாகவும், விளம்பரம்மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் வாயிலாகவும், பள்ளிகள், கல்லூரிகளில் ஒத்திகைப் பயிற்சி ஆகியவற்றை நடத்துவதன்மூலமாகவும் தீ பாதுகாப்பு நடவடிக்கைகளில் பெரும் பங்காற்றி வருகிறது. தீ பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யும் பொருட்டு, உரிமம் வழங்க உத்தேசிக்கப்பட்ட வளாகங்கள், வர்த்தக மையங்களை ஆய்வு செய்வதற்காகப் பல்வேறு உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதன்மூலமாகவும் தீ தடுப்பு நடவடிக்கையில் இத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இவை தவிர, இத்துறையின் பணிகள்,

தேர்தல், இனக்கலவரம், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்காலங்களில் காவல் துறையினருக்கு உதவும் வகையிலும் விரிவடைகின்றன. இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் உடல் நலம் குன்றியோருக்கும், காயமடைந்தவர்களை உடனடி மருத்துவ சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. முக்கிய பிரமுகர்கள் வருகை, முக்கிய கூட்டங்கள் மற்றும் விழாக்களுக்காகப் பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்படும் இடங்களில் இத்துறை பாதுகாப்புப் பணியினை மேற்கொள்கிறது. தனியாரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும் வரையறுக்கப்பட்ட கட்டண அடிப்படையில் பாதுகாப்புப் பணியினை இத்துறை மேற்கொள்கிறது.

## III. நிருவாக அமைப்பு

*3.* அரசின், உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநராக இந்தியக் காவல் துறைப் பணியினைச் சேர்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையிலுள்ள ஓர் அதிகாரி உள்ளார். இயக்குநருக்கு உதவியாக ஐந்து துணை இயக்குநர்கள் ஒவ்வொரு மண்டலத்திலும் பொறுப்பேற்றுப் பணிபுரிந்து வருகின்றனர். மண்டலங்கள் 30 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தென்சென்னை கோட்டம் மற்றும் வடசென்னை கோட்டம் ஆகியவற்றை மூன்றாகப் பிரித்து "மத்திய சென்னைக் கோட்டம்" என்ற புதிய கோட்டம் ஜூலைத் திங்கள், 2007-ல் ஏற்படுத்தப்பட்டது. கோட்ட அலுவலர்களின்கீழ் இயங்கும் கோட்டங்களில் 4 முதல் 16 வரையிலான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. துணை இயக்குநர் பதவி தரத்தில் நியமிக்கப்பட்டுள்ள இயக்குநர் (பயிற்சி)-ன் கட்டுப்பாட்டின்கீழ் தாம்பரத்தில் மாநிலப் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையமானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன், பிறருக்கும் குறைந்த கட்டணத்தில் பயிற்சிகளை அளித்து வருகிறது. இயக்குநர் (பயிற்சி) அவர்களின் மேற்பார்வையின்கீழ் சென்னையில் மாநிலப் பணிமனை ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்பு குறித்த விளக்கப் படம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.





## IV. ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை ஏற்பாடுகள்

*4.* துறையின் அடிப்படைப் பிரிவு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமாகும். மாநிலத்தில் 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களும், இது தவிர ஒகேனக்கல்லில் ஒரு மீட்புப் பணி நிலையமும் உள்ளன. பின்வரும் முக்கிய அளவுகோல்களின் அடிப்படையில், புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தொடங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:–

(i) 25 கி.மீ. சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமாவது இருக்க வேண்டும்.

(ii) ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 50,000 மக்கள் தொகை உள்ள பகுதிக்குப் பயன்பட வேண்டும் மற்றும்

(iii) ரூ.50,000/-க்குக் குறையாமல் தீ விபத்தினால் ஏற்படும் பொருட்சேதம் உண்டாகும் பகுதிகளில் இவை அமைக்கப்பட வேண்டும்.

## V. மனித ஆற்றல்

*5.* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6,647 ஆகும். கோட்ட அலுவலர்கள், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலைய அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளை வகிப்போர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவிக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 55 பேரும், கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிட தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேரும், ஜூன் திங்கள், 2007 ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி திங்கள் 2008 ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் தீயணைப்போராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## VI. உள் கட்டமைப்பு வசதிகள்

### (அ) ஊர்திகள்

*6.* இத்துறையானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பலவிதமான நவீன ஊர்திகளைக்

கொண்டுள்ளது. இத்துறை, 338 நீர்தாங்கி ஊர்திகளும், 82 நோயாளர் ஊர்திகளும், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகளும், 5 அவசரகால மீட்பு ஊர்திகளும், நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட ஊர்தி ஒன்றும், சுழல் மேஜை ஏணி ஊர்தி ஒன்றும், 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய நீராற்றலால் இயங்கும் மேடை மற்றும் சுழல் மேஜை ஏணி கொண்ட 2 ஊர்திகள், நீர்விடுகுழாய் பதிக்கும் ஊர்தி ஒன்று, 53 தண்ணீர் லாரிகள், மீட்பு ஊர்தி ஒன்று, 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள், 93 மிதவைப் பம்புகள் ஆகியவற்றைக் கொண்டு இயங்கி வருகிறது. இவை தவிர, ஈப்புகள், பேருந்துகள், விசை மிதிவண்டிகள் ஆகிய துணை ஊர்திகளும் துறையின் செயல்பாட்டில் உள்ளன. இந்த அரசு பழைய நீர்தாங்கி வண்டிகளுக்குப் பதிலாக 2 புதிய நீர்தாங்கி வண்டிகள் ரூ.30.00 இலட்சம் செலவில் கட்டுமானம் செய்யவும் மற்றும் எழும்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கென ஒரு சிறிய நுரை தகர்வு ஊர்தி ரூ.16.69 இலட்சம் செலவில் வழங்கிடவும் 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவை கட்டுமானத்தில் உள்ளன. மேலும், பழைய 5 நோயாளர் ஊர்திகளுக்குப் பதிலீடாக ரூ.32.25 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கிடவும் மற்றும் ஒகேனக்கல்லில் உள்ள மீட்புப் பணி நிலையத்திற்கென ஒரு நோயாளர் ஊர்தி ரூ.6.45 இலட்சம் செலவில் வாங்கிடவும் 2007-2008 ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**(ஆ) சாதனங்கள்**

7. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மிகவும் திறமையாகக் கையாளும் பொருட்டு, நவீன உபகரணங்களான, தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், மின் ஆக்கிகள் மற்றும் மீட்புப் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் கொண்ட ஒரு பெட்டி ஆகிய மீட்புக் கருவிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் காலங்களில் உபயோகப்படுத்துவதற்காக இத்துறையில் 8 கண்ணாடி இழை விசைப் படகுகளும், 36 மிதவைப் படகுகளும் உள்ளன. இவை தவிர, அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி பொருத்திய தலைக் கவசம்-1, கையில் எடுத்துச் செல்லக்கூடிய அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவிகள்-2, உயிர் உள்ளவர்கள் சிக்கியுள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்-2, பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்-2, தீ பாதிக்காத உடைகள்-81, இரசாயனப் பாதுகாப்பு உடைகள்-83 மற்றும்



தீ பாதிக்காத 222 இணை கையுறைகள் ஆகியவையும் இத்துறையின் பயன்பாட்டில் உள்ளன. இவை தவிர, பழைய நீர்விடுகுழாய்களுக்கு பதிலாக ரூ.46.60 இலட்சம் செலவில் புதிய நீர்விடுகுழாய்கள் 2007-2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

## VII. தகவல் தொடர்பு வசதிகள்

**(அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள்**

8. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைக் குறித்த நேரத்தில் மேற்கொள்வது இத்துறையின் செயல்பாட்டில் ஒரு முக்கிய அம்சமாகும். ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. '101' என்ற இலவச தொலைபேசி இணைப்புகள் சில மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு சில நகரங்களிலும் உள்ளன. சென்னை மாநகர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அதிவேக உயர் அலைவரிசை கம்பியில்லாத் தொலை தொடர்பு வசதிகளைக் கொண்ட வாக்கி-டாக்கிகள் மற்றும் மறு அஞ்சல் கருவிகள் இயங்கி வருகின்றன. மேலும், மாநில தலைநகரமானது அனைத்து மாவட்டத் தலைநகரங்களுடனும் மற்றும் சில முக்கியப் பகுதிகளுடனும் உயர் அலைவரிசைக் கருவிகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், 42 அதிவேக அலை வரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. சென்னை மாநகர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தகவல் தொடர்பு வசதிகளை நவீனப்படுத்தும் வகையில், உயர் அலைவரிசையில் இயங்கும் நிலையான, நடமாடும் மற்றும் வாக்கி டாக்கிகள் வாங்க அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**(ஆ) பதில் செயல்பாடு நேரம்**

9. விபத்து பற்றிய தகவல் பெறப்பெற்ற கணத்திலிருந்து முதல் தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தைச் சென்று அடைய எடுத்துக்கொள்ளும் நேரமே "பதில் செயல்பாடு" நேரமாகும். தீ விபத்து அல்லது மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகளில் பதில் செயல்பாடு நேரத்தைக் குறைக்க இத் துறை தொடர்ந்து அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. சென்னை மாநகரில் இந்த பதில் செயல்பாடு நேரத்தினை 10 நிமிடங்கள் அல்லது அதற்குக் குறைவாகக் கொண்டு வருவதில் இத்துறை வெற்றி கண்டுள்ளது. இந்த பதில் செயல்பாடு நேரம் கடைபிடிக்கப்படுவதைக் கண்காணிக்கும் வகையில் தகவல்களை விரைந்து அளிப்பதற்கென

[2008 மே 9

தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், "101" மற்றும் "102" எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் வான்தந்தி கருவி இணைப்புகள் பொருத்திய ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் இயங்கி வருகின்றன. பதில் செயல்பாடு நேரத்தை மாவட்டங்களில் மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### (இ) துறை இணையதளம்

*10.* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணைய தளம் ஒன்று தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இணையதளத்தின் முகவரி http://www.tn.nic.in/fireservice என்பதாகும். இது தீத்தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், விதிகள், உரிம நிபந்தனைகள் குறித்தும் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் கொண்டதாகவும், இதனைப் பயன்படுத்திக்கொள்பவர்களுக்கு ஒரு நல்ல நண்பனாகவும் செயல்பட்டு வருகிறது.

## VIII. பயிற்சி வசதிகள்

*11.* பொதுமக்களுக்குச் சேவை புரிந்திடும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் மீட்புப் பணி தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களுக்கு ஏற்ப, இதன் பணியாளர்களுக்குப் பணியில் சேரும்போது அளிக்கப்படும் பயிற்சிகளுடன் வெவ்வேறு கால கட்டங்களில் அளிக்கப்படும் நினைவுகூர் பயிற்சிகளும் அனைத்து பதவி நிலைகளில் உள்ளவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. தாம்பரத்தில் நன்கு பராமரிக்கப்படும் மாநிலப் பயிற்சி மையம் ஒன்றில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது தவிர, தொழிற்சாலைகள், பொதுத் துறை நிறுவனங்கள், ஏனைய அரசு அமைப்புகள், ஏனைய மாநில, மத்திய அரசு அமைப்புகளிலிருந்து அனுப்பப்படும் பணியாளர்களுக்கும் இம்மாநிலப் பயிற்சி மையமானது, குறைவான கட்டணத்தில் பயிற்சிகளை அளித்து வருகிறது. தாம்பரத்தில் அமைந்துள்ள மாநிலப் பயிற்சி மையமானது, பயிற்றுவிப்பதற்குத் தேவையான அவசரகால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லும் வசதி கொண்ட நீட்டிப்பு ஒளி தாங்கி சாதனம், கணினிகள், இரசாயனப் பாதுகாப்பு உடைகள், நீர் மூழ்கு உடைகள், மல்டி மீடியா புரொஜெக்டர்கள், நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள் மற்றும்



2008 மே 9]

உடற்கட்டு பராமரிக்கும் கருவிகள் ஆகிய நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது. வெளிப் பயிற்சிக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற பயிற்சி மைதானம், புகை உருவாக்கும் கூடம் மற்றும் வி-வடிவ நீர்த் தொட்டிகள் ஆகியவற்றுடன், போதுமான இடவசதியுள்ள பயிற்சி வகுப்பறைகள், சிறந்த நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவுக் கூடம் மற்றும் தங்குமிட வசதிகள் ஆகிய அனைத்தும், அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை மேலும் உயர்த்துகின்றன. இந்தப் பயிற்சி மையமானது நாகபுரியில் உள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு இணையாக உள்ளது. இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், புதுதில்லி, நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியினால் வழங்கப்பெறும் பயிற்சியினை வழங்கும் மண்டல பயிற்சி மையங்களில் ஒன்றாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தினை நியமித்துள்ளது. 2007 ஆம் ஆண்டில், பல்வேறு பயிற்சிகள் 411 பேருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

*12.* இது தவிர, அனைத்து கோட்டங்களுக்கும் பயிற்சியினை மேம்படுத்திடவும் நிர்வாகத் திறமையினை மேம்படுத்திடவும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கோட்டத் தலைமையிடங்களில் தனிப்பட்ட நபருக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டில், 365 தனியார்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பேரழிவு மேலாண்மையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறப்புமிக்க தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களுக்கு மாநில அளவில் பயிற்சி அளிக்கும் நிறுவனமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மாநிலப் பயிற்சி மையம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## IX. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களின் கட்டட நிலை

*13.* மாநிலத்தில் தற்பொழுது 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஒரு மீட்புப் பணி நிலையம் ஒகேனக்கல்லில் செயல்பட்டு வருகிறது. இவற்றுள், 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு ரூ.2 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2008 மே 9

## X. ஆற்றிய பணிகள்

### (அ) தீ தடுப்பு

*14.* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முதன்மைப் பணி தீ தடுப்பு ஆகும். பொதுமக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென 12 கோட்டங்களில் தீ தடுப்புக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் தீ தடுப்பு முறைகளை ஊரக மற்றும் நகரப் பகுதி மக்களிடம் எடுத்துரைப்பதால் தீயினால் ஏற்படும் ஆபத்துகள் பெருமளவு குறைக்கப்படுகின்றன. பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்குச் சொற்பொழிவுகளும் மற்றும் செயல்முறை விளக்கங்களும் தீ தடுப்பு பாதுகாப்பு முறைகள் குறித்து இக்குழுக்கள் அறியும் விதத்தில் அளிக்கப்படுகிறது. 12 தீ தடுப்புக் குழுக்களால் ஆழ்ந்து மேற்கொள்ளப்பட்ட தீ தடுப்பு முறைகளின் காரணமாக 2007 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகைக் காலத்தின் போது உயிர் இழப்போ அல்லது உடைமைகளுக்கு அதிக சேதமோ ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 2007 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற 4,530 இடங்களில் தீ தடுப்பு முறைகள் குறித்த கல்வியறிவு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. ஏழு நோயாளர் ஊர்திகள், திரைப்படக் கருவிகள் (புரொஜெக்டர்கள்), குறுந்தட்டு இயக்கி மற்றும் ஒலி பெருக்கிகள், மின்தொடர் பிணைப்புப் பலகை, மின் கம்பிகள் போன்ற பிற சாதனங்கள் பொருத்தப்பட்ட நடமாடும் திரையரங்குகளாக மாற்றியமைக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்குத் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் நுழைவாயில், வெளியேறும் வாயில் மற்றும் அவசரகால வெளியேறும்வாயில் ஆகியவை அமைந்திருப்பதை உறுதி செய்யும் பொருட்டு தீ பாதுகாப்பு ஆய்வினை கட்டாய அடிப்படையில் நிலைய அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். 2007 ஆம் ஆண்டில், நிலைய அலுவலர்களால் 6,201 பள்ளிக்கூடங்கள் தடையின்மைச் சான்று வழங்குவதற்காக ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு தன்னார்வலர்கள் குழுமத்திற்கு இந்த அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தீ தடுப்புப் பணிகளில் பொதுமக்களை அதிக அளவில் பங்கு கொள்ளச் செய்வதற்கு வழிவகுக்கும்.



2008 மே 9]

*15.* பேரழிவுக் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிரடிப்படை வீரர்களுக்கு தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

*16.* ஒவ்வொரு ஆண்டும் தீ தொண்டு நாள் ஏப்ரல் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்கு மாநிலம் முழுவதும் விழா ஏற்பாடு செய்ய இயலுகின்ற அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் தீ தடுப்பு குறித்து பிரசாரங்கள், நாளிதழ்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி வழியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (ஆ) குடிசைப் பகுதிகளில் கோடைக் காலத்தில் சுற்றுக் காவல் பணி புரிதல்

*17.* கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளில் பெரும்பாலானவை கவனமின்மையாலும், அலட்சியத்தினாலும் ஏற்படுபவை ஆகும். இது போன்ற தீ விபத்துகளைச் சமாளிக்கும் நோக்கத்தில், ஆபத்தான பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய தீயணைப்பு ஊர்திகளைச் சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த கோடைக் காலத்தின்போது 10 தீயணைப்பு ஊர்திகள் 24 மணி நேரமும் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு முக்கியமான குடிசைப் பகுதிகள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டன.

### (இ) திரையரங்குகள் / கட்டடங்களில் தீ தடுப்பு

*18.* திரையரங்குகள் அதிக அளவு தீ விபத்துக்கு வாய்ப்புள்ள இடங்களாக உள்ளன. திரையரங்குகளில் தீயிலிருந்து பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளைப் பல்துறைக் குழு ஒன்று ஆண்டு தோறும் ஆய்வு செய்து வருகிறது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து உரிம நிபந்தனை மீறல்கள் எவையேனுமிருப்பின் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. இதன்படி 2007 ஆம் ஆண்டில் 714 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், 2007 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் ஏறத்தாழ 17,695 கட்டடங்கள் தீ தடுப்பு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**(ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்**

19. 2007 ஆம் ஆண்டில், மொத்தத்தில் 21,224 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. அவ்விபத்துகளில் ஆபத்தான நிலையில் இருந்த 160 உயிர்களில் 88 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதுடன், ரூ.192.41 கோடி மதிப்புள்ள உடைமைகளும் மீட்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில், தீ விபத்து நிகழும் இடங்களில் சென்னை மாநகரக் குடிநீர் வடிகால் வாரியத்தின் தண்ணீர் லாரிகள் மூலம் நீர்தாங்கி ஊர்திகளுக்கு மீண்டும் நீர் நிரப்பப்பட்டு தொடர் தீயணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தீயணைப்புப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கும், மிகப் பெரிய அளவில் உயிர்களையும், பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் உதவிகரமாக இருந்து வருகின்றது.

20. 2007 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 21,224 தீ விபத்து அழைப்புகளில், பெருந் தீ விபத்துகள், நடுத்தர தீ விபத்துகள் மற்றும் சிறிய தீ விபத்துகளின் எண்ணிக்கை முறையே 160, 419 மற்றும் 20,645 ஆகும். மேலும், பெருந் தீ விபத்து மற்றும் நடுத்தர தீ விபத்து பற்றிய தகவல்களின் எண்ணிக்கையை மொத்த அழைப்புகளுடன் ஒப்பிடும்போது அவை முறையே 1 விழுக்காடு மற்றும் 2 விழுக்காடு மட்டுமே ஆகும்.

**(உ) மீட்பு அழைப்புகள்**

21. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள் பெரும்பாலும் சாலை விபத்தில் சிக்குண்டவர்கள், இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களைச் சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இன்னல்கள் போன்றவற்றில் சிக்குண்டவர்கள் ஆகியோரைக் காப்பாற்றக்கோரும் அவசர அழைப்புகளாகவே உள்ளன. 2007 ஆம் ஆண்டில் மொத்தம் 9,225 மீட்பு அழைப்புகளில் ஆபத்தான நிலையில் இருந்து 8,575 உயிர்களில் 6,821 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

**(ஊ) நோயாளர் ஊர்தி அழைப்புகள்**

22. 82 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்றும் இதர விபத்துகளின்போது



காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும், நோயாளிகளும், காயமடைந்தோரும் அழைப்பின் பேரில் குறைந்த வாடகையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 2007 ஆம் ஆண்டில், 1,526 அழைப்புகளை ஏற்று, நோயாளர் ஊர்திகள் செயல்பட்டுள்ளன. இவற்றுள் 1,091 வாடகைக் கட்டண அழைப்புகளாகும். நோயாளர் ஊர்திகள்மூலம் அழைப்புகளை மேற்கொண்டவகையில் ரூ.2.44 இலட்சம் வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**(எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைப் பணி**

23. முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்கள்/ விழாக்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படும் தருணங்களில் தீயணைப்பு ஊர்திகள் ஈடுபடுத்தப்படுகின்றன; மற்றும் பாதுகாப்புப் பணி, ஆயத்த நிலை நிறுத்தப் பணிகளுக்காகவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர, தனியார் விழாக்களிலும் கட்டண அடிப்படையில் தீயணைப்பு ஊர்திகள் ஆயத்த நிலைநிறுத்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டில் 2,275 தருணங்களில் ஆயத்த நிலை நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள், கட்டண அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 1,469 ஆகும். 2007 ஆம் ஆண்டில் ஆயத்த நிலை நிறுத்தப் பணி கட்டணமாக ரூ.38.26 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## XI. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்

24. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் விருதுகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த விவரம் பின்வருமாறு:—

**(அ) விருதுகள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் உருவாக்கப்பட்ட பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன:—

**(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2,000/- முதல் ரூ.5,000/- வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். 2007 ஆம் ஆண்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்குப் பாராட்டத்தக்க வகையில் பணிபுரிந்தமைக்காக 10 பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுகிறது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவித் தரத்தில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.40/-ம், முன்னணித் தீயணைப்போர்/ இயந்திரக் கம்மியர், ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்-இயந்திரக் கம்மியர் ஆகிய பதவித் தரத்தில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.50/-ம் ரொக்கப்படியாக வழங்கப்படுகிறது. 2008 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(3) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணி பதக்கம்**

இந்தப் பதக்கமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்கள் தங்கள் கடமையைத் திறமையுடனும், ஊக்கத்துடனும் ஆற்றிட உற்சாகம் அளிக்கும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்பாளர், தீயணைப்பாளர் ஆகியோருக்கு, பதவிக்கு ஒன்று வீதம் ஆண்டுதோறும் மூன்று பதக்கங்கள் தீ தொண்டு நாளான ஏப்ரல், 14 ஆம் நாள் வழங்கப்படுகிறது. 8 கிராம் எடை கொண்ட இப்பதக்கம் 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்டதாகும். மேலும், நிலைய அலுவலருக்கு ரூ. 3,000/-ம், முன்னணி தீயணைப்போருக்கு ரூ.2,500/-ம் மற்றும் தீயணைப்போருக்கு ரூ. 2,000/-ம் ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது. இப்பதக்கம் அவர்களுடைய பணியில், மிகச் சிறப்பான சாதனை படைத்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

**(4) பிற பதக்கங்கள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு, மாநில விருதுகள் தவிர, மத்திய அரசால் பின்வரும் விருதுகளும் வழங்கப்படுகின்றன:—

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;



(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

(இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்.

**(ஆ) நலத் திட்டங்கள்**

**(1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேமநல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த துயருற்ற பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேமநல நிதி ஏற்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. உறுப்பினர்களின் நலனுக்காக பின்வருமாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:—

(அ) தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பின் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக் கொள்ள;

(ஆ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக;

(இ) ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு அடையாளத் தொகை வழங்க;

(ஈ) உறுப்பினர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காக.

ஒவ்வொரு ஆண்டும் இச்சேமநல நிதிக்கு அரசு மானியமாக ரூ.4.00 இலட்சம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 5,640 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.10.32 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ. 9.74 இலட்சம் ஆகும்.

**(2) குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் அரசால் வழங்கப்படுகிறது.

(3) கருணைத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அ | பணியில் ஈடுபட்டிருக்கும் போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ. 5,00,000/- |
| ஆ | பணியாற்றும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டவர்களுக்கு | ரூ. 1,00,000/- |
| இ | பணியாற்றும்போது கடுமையான காயமடைந்தவர்களுக்கு | ரூ. 20,000/- |
| ஈ | பணியாற்றும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ. 10,000/- |

(4) குழுக் காப்பீட்டுத் திட்டம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான பணியாளர்களுக்காக (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக), குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்படி, பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடையும் பணியாளரின் குடும்பத்தினருக்கு ரூபாய் ஒரு இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

(5) உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்

உதவிக் கோட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக அரசு ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.56.00 இலட்சம் செலவிடுகிறது.

(6) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களை அவசரக் காலங்களில் உடனடியாகத் திரட்டவும், செயல்திறனைக் கூட்டவும், அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே குடியமர்த்துவது அவசியமாகும். மேலும், இத்துறையில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் வாடகையில்லா குடியிருப்புக்குத் தகுதியுடையவர்கள். இதற்கு ஏதுவாக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களது குடியிருப்புகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் நோக்கில், பல்லடம், பேட்டை, பெண்ணாகரம், இராஜபாளையம், கள்ளக்குறிச்சி, ஆரணி, பொன்னேரி, பொன்னமராவதி, திருப்பூர், உடுமலைப்பேட்டை, ஈரோடு, மற்றும் சிதம்பரம் ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கு ரூ.988.24 இலட்சம் செலவில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் 200 குடியிருப்புகள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், அது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய பணியாளர்களுக்கானக் குடியிருப்புகளின் எண்ணிக்கையினை உயர்த்துவதாக அமையும் என்பதுடன், நாளடைவில் இவர்களின் செயல்படும் திறமையினையும் மேலும் வலுப்படுத்துவதாகவும் அமையும். எதிர்காலத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கானக் குடியிருப்புகள் கட்டும்பணி விரைவுபடுத்தப்படும்.



(7) இடர்படி

தீயணைப்போர் பதவி முதல் உதவிக் கோட்ட அலுவலர் பதவி வரை உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படி மாதம் ரூ. 40/-லிருந்து ரூ.120/- ஆகவும் மற்றும் கோட்ட அலுவலர் பதவியில் உள்ளவர்களுக்கு மாதம் ரூ. 60/-லிருந்து ரூ. 140/-ஆகவும் செப்டம்பர் திங்கள், 2006 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

## XII. புதிய முயற்சிகள்

25. 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ், மொத்தம் ரூ. 102.07 இலட்சம் செலவில் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:—

(அ) ரூ.29.37 இலட்சம் செலவில் இரண்டு தண்ணீர் லாரிகள் வாங்குதல்;

(ஆ) ரூ.23.50 இலட்சம் செலவில் ஐந்து நோயாளர் ஊர்திகள் வாங்குதல்;

(இ) ரூ.19.60 இலட்சம் செலவில் ஒரு சீருந்து, மூன்று ஈப்புகள் மற்றும் மூன்று விசை மிதி வண்டிகள் வாங்குதல்;

(ஈ) ரூ.18.40 இலட்சம் செலவில் ஒரு சிறிய நுரை தகர்வு ஊர்தி வாங்குதல்;

(உ) ரூ.11.20 இலட்சம் செலவில், மூச்சுக் கருவிகள் நிரப்பம் செய்வதற்காக வாயு நிரப்பும் கருவிகள் இரண்டு வாங்குதல்;

**முடிவுரை**

26. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அடைந்துள்ள அளவிட முடியாத ஆற்றல்கள் மற்றும் சாதனைகளால் நாட்டிலேயே மிகப் பெரிய மற்றும் மிகச் சிறந்த துறைகளில் ஒன்று என்ற நன்மதிப்பினைப் பெற்றுள்ளது. தமிழக மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை, தீ, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து காப்பதற்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற மற்றும் தகுதியான பணியாளர்களைக் கொண்டுள்ளது. இத்துறை ஏற்கெனவே கொண்டுள்ள திறனைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதுடன் மட்டுமல்லாமல், துறையில் உள்ள பணியாளர்களின் அறிவுத் திறன் மற்றும் செயல் திறனையும் மேலும் வலுப்படுத்தி துறையின் செயல்பாட்டினை நவீனப்படுத்த இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.





# இணைப்பு-III

*(113 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் ஓரலகான மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவின்கீழ் பின்வரும் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனம் இயங்கி வருகின்றன:—

(1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(2) காவல் துறையின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(3) போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

(4) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

மேலும், 1982 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் தடுப்புக் காவல் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 14/1982) இத்துறையினால் நிருவகித்து வரப்படுகிறது. இச்சட்ட விதிகளின்கீழ் ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட அறிவுரைக் கழகத்தை அரசு 2006-இல் மாற்றி அமைத்துள்ளது.

### 2. ஆயத்தீர்வை நிருவாகம்

2.1. இம்மாநிலத்தின் ஆயத்தீர்வை நிருவாகத்திற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் பொறுப்பாவார். தலைமையிடத்தில் இத்துறையை நிருவகிக்க இரண்டு இணை ஆணையர்கள், ஒரு நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் நான்கு உதவி ஆணையர்கள், ஆணையருக்கு உதவி புரிந்து வருகின்றனர். திடீர் சோதனைகள் செய்வதற்காக உதவி ஆணையர் தலைமையில் பறக்கும் படை ஒன்று உள்ளது.

2.2. வடிப்பாலைகள் அமைப்பதற்கும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர் மற்றும் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவ அளிக்கப்படும் சிறப்பு உரிமைகள் மற்றும் உரிமங்கள் அரசின் முன் அனுமதியுடன் வழங்குவதற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2.3. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் ஆய நிருவாகத்தினை மேற்பார்வை செய்து வருகின்றனர். அவர்கள் 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதனடிப்படையில் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்டரீதியான பொறுப்பினை நிறைவேற்றுகிறார்கள். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் துணை ஆணையர் (ஆயம்) மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிந்து வருகிறார். மேலும், பிற மாவட்டங்களில் ஒரு உதவி ஆணையாளர் மாவட்ட ஆட்சியருக்கு ஆய நிருவாகத்தில் உதவி புரிந்து வருகிறார். துணை ஆட்சியர் நிலையில் வடிப்பாலை அலுவலர்கள் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்கள் முறையே வடிப்பாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் அலுவலர்களாக நியமிக்கப்படுகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி ஆயத்தீர்வை விதிக்கப்பட வேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல், இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணை முறி கிடங்குகள் ஆகியவற்றில் சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணை முறி தயாரிப்பு அலுவலர்களாகவும் வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

2.4. இம்மாநிலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் 9 ஆய மேற்பார்வை அலுவலர்களும், 14 வடிசாலைகளில் துணை ஆட்சியர் நிலையில் 14 அலுவலர்களும் ஆய நிருவாகத்தினை மேற்பார்வை செய்து





வருகின்றனர். டி.எல்.உரிம பிரிவுகளில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற்சாலைகள்) வட்டாட்சியர் பதவி நிலையில் 4 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், துணை வட்டாட்சியர் பதவி நிலையில் 4 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், பிணை முறி தயாரிப்புக் கிடங்குகளில் வட்டாட்சியர் நிலையில் 2 பிணை முறி தயாரிப்பு அலுவலர்களும் உள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

2.5. சாராவியை வடிப்பதற்கு பொதுவான மூலப்பொருளான கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சர்க்கரை ஆலைகளில் தயாரிக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் உள்ள 40 சர்க்கரை ஆலைகளில், 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 21 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும், 3 சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும் உள்ளன. சர்க்கரை ஆலைகள் பற்றிய விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.6. கருப்பஞ்சாற்றுக் கசண்டின்மீது விலைக்கட்டுப்பாடு ஏதுமில்லை என்றாலும், எந்தவொரு தவறான உபயோகத்திற்கும் அதனைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகக் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்காக 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்கீழ் உரிமம் வழங்கப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.300/- நிர்வாக சேவைக் கட்டணமாக 3-8-2006 முதல் வசூலிக்கப்படுகின்றது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

2.7. 2 கூட்டுறவு வடிப்பாலைகளும், 12 தனியார் வடிப்பாலைகளும், கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியை உற்பத்தி செய்கின்றன. சாராவி தயாரிக்கும் வடிப்பாலைகளின் விவரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், பிற வேதியியல் பொருள்கள் மற்றும் வார்னிஷ் தயாரிப்பதற்குச் சாராவி

மூலப் பொருளாகப் பயன்படுகிறது. கல்விக்கூடங்கள், ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவைகளும் சாராவியைச் சிறிய அளவில் பயன்படுத்துகின்றன. 2007-2008-ல், 8 வடிப்பாலைகளில் நாள் ஒன்றுக்கு 207.80 கிலோ லிட்டர் என்ற அளவில் சாராவியை தற்போதைய உற்பத்தித் திறனிலிருந்து விரிவுபடுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு அரசால் விரிவாக்கத்திற்கு அனுமதி அளிக்கப்பட்ட விவரம் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளும், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளும் பல்வேறு உபயோகங்களுக்காகச் சாராவியை பயன்படுத்தப்படுவதை முறைப்படுத்துகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மேலும் ஒரு வடிப்பாலையை அமைப்பதற்கு அரசு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு முன் அனுமதி வழங்கியுள்ளது.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தித் தொழிற்சாலைகள்.**

2.8. இம்மாநிலத்தில் ஆறு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளும், மூன்று பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளை விநியோகம் செய்து வருகின்றன. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் வகைகள் உற்பத்தி பற்றிய விரிவான விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 2007-2008-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான தயாரிப்புத் தொழிற்சாலைகளை இம்மாநிலத்தில் நிறுவ அரசு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு முன் அனுமதி அளித்துள்ளது.

**ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலை**

2.9. இம்மாநிலத்தில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. எனவே, மற்ற மாநிலங்களில் இருந்து ஒயின் இறக்குமதி செய்யப்படுகிறது. இம்மாநிலத்தில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலைகள்



நிறுவ வாய்ப்பளிக்கும் வண்ணம் அரசு 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒயின் (தயாரிப்பு) விதிகளை உருவாக்கியுள்ளது. தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் தனியார் துறையில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் கடிதம் 2007-2008-ல் அளிக்கப்பட்டது.

**மன்றங்கள் மற்றும் நட்சத்திர உணவகங்களுக்கு அனுமதி**

2.10. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்கீழ் 72 மன்றங்களுக்கு அவற்றின் உறுப்பினர்களுக்கு மட்டும் மதுபானங்கள் வழங்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அயல்நாட்டு சுற்றுலா பயணிகள், இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டினர் முதலானவர்களுக்கும் உணவகங்களில் உள்ள மதுபானக் கூடங்களிலோ, அவர்கள் தங்கும் உணவகங்களின் அறைகளிலோ மது வழங்க 478 நட்சத்திர தகுதி பெற்ற உணவகங்கள் மற்றும் உணவகங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மாநில ஆய வில்லைகள்**

2.11. அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட பாலியஸ்டரைஸ்டு ஹோலோகிராம் ஆயத்தீர்வை வில்லைகளைப் பயன்படுத்துவது நடைமுறையில் உள்ளதால், கள்ளத்தனமாகச் சாராவியினைக் கொண்டு செல்வது / போலி மது விற்பனை செய்வது ஆகியவை தடுக்கப்படுகின்றன. இதனால், மாநில அரசின் ஆயத்தீர்வை வருவாய் பாதுகாக்கப்படுகிறது. இந்த ஆயத்தீர்வை வில்லைகள் இயந்திரத்தின்மூலம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் பாட்டில்களின்மீது ஒட்டப்படுகின்றன.

## 3. மதுவிலக்கு அமலாக்கம்

3.1. இம்மாநிலத்தில் மதுவிலக்கை அமல்படுத்துவதற்குக் கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) முதல்நிலை பொறுப்பாளராவார். தலைமையிடத்தில் ஒரு காவல் துறை துணைத் தலைவரும், சென்னை, சேலம் மற்றும் மதுரை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் மூன்று காவல் கண்காணிப்பாளர்களும் அவருக்கு உதவியாகச் செயல்பட்டு

வருகின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் ஆய்வாளர்களின்கீழ் இயங்கி வருகின்றன. மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் முப்பத்தெட்டு காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் மற்றும் முப்பத்தெட்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் (மதுவிலக்கு அமலாக்கம்) மதுவிலக்கு அமலாக்கத்திற்குப் பொறுப்பாளர்களாக உள்ளனர். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அலுவலர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாநகரக் காவல் ஆணையர்கள் ஆகியோரது மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குச் சட்ட குற்றவாளிகள்மீதும், கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி மற்றும் போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் ஆகியவற்றைக் கடத்துபவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத / போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் கண்காணித்துத் தடுக்கும் வகையில், 21 சோதனைச் சாவடிகளும், 6 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன.

3.2. மதுவிலக்கு தொடர்பான கடும் குற்றவாளிகள் தமிழ்நாடு தடுப்புக் காவல் சட்டம் 14/1982-இன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். கடுமையான அமலாக்க நடவடிக்கையுடன் இணைந்த மறுவாழ்வுப் பணிகள், விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்களின் ஒத்துழைப்பு போன்றவை பெருமளவில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க உதவுகின்றன. ஏழை மற்றும் நலிந்த குடும்பங்களைப் பாதிக்கும் கள்ளச் சாராயத்தை ஒழித்திட அனைத்து வகையிலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### காந்தியடிகள் காவலர் விருது

3.3. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் சிறந்த வகையில் பணியாற்றும் காவல் துறைப் பணியாளர்களுக்கு "காந்தியடிகள் காவலர் விருது" வழங்கப்படுகிறது. இவ்விருதானது பாராட்டுச் சான்றிதழ், வெண்கலப்



பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசாக ரூ. 20,000/- ஐயும் உள்ளடக்கியதாகும். 2007-ஆம் ஆண்டிற்கான இவ்விருது, 2008 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் நடைபெற்ற குடியரசு தின விழாவின் போது நான்கு காவல் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

### மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு

3.4. மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கோடு மறுவாழ்வு நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மறுவாழ்வுக் குழு இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு ஆடு வளர்த்தல், கறவை மாடுகள் வளர்த்தல் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகள் வைத்தல் போன்ற 49 வகையான தொழில்களின்மூலம் நிலையான வருமானம் ஈட்டுவதற்கு ரூ. 10,000 முதல் ரூ. 15,000 வரை கடனுதவி அளிக்கிறது. இத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்காக 2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

4.1. போதை மருந்துகள் - மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைகள்மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்வதின்மூலம் பெறப்பட்ட அல்லது கள்ளத்தனமாகக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் போன்றவற்றைப் பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருள்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதிகளைச் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டமும், இதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 14-11-1985 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஒவ்வொன்றும் பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய மற்றும் ஜாமீனில் வெளிவர இயலாத குற்றமாகும்.

4.2. மத்திய அரசு, 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களின் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) என்ற மற்றொரு சட்டத்தையும் இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதன்படி, போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்பவர்களைத் தடுப்புக் காவலில் வைத்திடும் நாளிலிருந்து குறைந்தது ஓராண்டு காலமும், அதிகபட்சமாக இரண்டாண்டு காலமும் காவலில் வைக்க, மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்ட காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை கலெக்டர், வருவாய் உளவுத் தகவல் இயக்ககம் ஆகியவையும் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

4.3. குற்றப் புலனாய்வுத் துறையின் மாநில போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவிற்கு, காவல் துறை துணைத் தலைவர் ஒருவர் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக, காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், 12 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஏனைய பதவி நிலைகளில் 126 பேர் உள்ளனர். மாநிலம் முழுவதும் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவுகள் குற்றப் புலனாய்வுத் துறையில் செயல்பட்டு வருகின்றன.

## 5. தமிழ் நாடு மாநில வாணிபக் கழகம்

5.1. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 1956 ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ், 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் உள்ளது. இந்நிறுவனம், இம்மாநிலம் முழுவதும், இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மது மற்றும் பீர் வகைகளின் கொள்முதல் மற்றும் விற்பனை முதலியவற்றைக்



கண்காணித்து வருகிறது. இந்நிறுவனத்திற்கு, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)கீழ், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய தனித்த சிறப்புரிமை அளிக்கப்பட்டுள்ளது.

5.2. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் மொத்தம் 33 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 3 அலுவலகங்கள் சென்னையிலும், 2 அலுவலகங்கள் கோயம்புத்தூரிலும், ஏனைய 28 அலுவலகங்கள் பெரம்பலூரார் மற்றும் அரியலூரார் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்திலும் உள்ளன. ஒரு மாவட்ட மேலாளரே இந்த இரண்டு மாவட்டங்களையும் நிர்வகிக்கிறார். மாவட்ட மேலாளர் பதவிகளைத் துணை ஆட்சியர்கள் வகித்து வருகின்றனர்; மாநிலம் முழுவதும் 41 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகள் உள்ளன.

5.3. 13-5-2006 அன்றைய நிலையில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 6,699 சில்லறை மதுபான விற்பனைக் கடைகளை நடத்திக் கொண்டிருந்தது. கடைகள் அமைந்த இடம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளின் அடிப்படையிலும், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தூர வரையறைகளின்படியும் சில கடைகள் மூடப்பட்டுள்ளன; சில கடைகள் தகுந்த இடங்களில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், மூடப்பட்ட மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட கடைகள் முறையே,

(அ) 2006 ஆம் ஆண்டில் 5 மற்றும் 25;

(ஆ) 2007 ஆம் ஆண்டில் 37 மற்றும் 190 மற்றும்

(இ) 2008 ஆம் ஆண்டில் 21-4-2008 முடிய 53 மற்றும் 67 ஆகும்.

[2008 மே 9

## 6. அரசு வருவாய்

*6.1.* *2007-2008* ஆம் ஆண்டில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் விற்பனை மற்றும் அதனால் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்கள் இணைப்புகள் 5 மற்றும் 6-இல் காணலாம்.

*6.2.* கள்ளச் சாராயத்தின்மூலம் உயிர் இழப்பு ஏற்படுவதை தடுப்பது மற்றும் மாநில அரசிற்கு வரவேண்டிய ஆயத்தீர்வை வருவாயைக் காப்பது என்ற இரட்டை நோக்கங்களையும் அடைய போலி/ இரண்டாம் தர மதுவகைகளை விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் மற்றும் சாராவியை தவறான நோக்கங்களுக்கு பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்து வருகிறது.



2008 மே 9]

## இணைப்பு-1

### மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு பற்றிய விவரங்கள்

*(பத்தி 2.5–ஐப் பார்க்கவும்)*

| வ. எண். (1) | சர்க்கரை ஆலையின் பெயர் (2) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு கொள்ளளவு. (மெட்ரிக் டன்) (3) |
|---|---|---|
| | திருவாளர்கள்— | |
| | கூட்டுறவுத் துறை | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 11,000.000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை (இயங்கவில்லை) | 0.000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 14,000.000 |
| 4 | தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 21,400.000 |
| 5 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை | 12,000.000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 17,000.000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 14,500.000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 17,620.000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 21,000.000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 16,000.000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, பிரிவு -1 | 15,000.000 |
| 12 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 12,000.000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, பிரிவு -2 | 12,000.000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 19,000.000 |
| 15 | என்.பி.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 14,000.000 |
| 16 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 12,000.000 |
| | மொத்தம் | 2,28,520.000 |
| | பொதுத் துறை | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000.000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | 16,502.922 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட் | 12,000.000 |
| | மொத்தம் | 34,502.922 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | தனியார் சர்க்கரை ஆலைகள் | |
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ் லிமிடெட் | 29,100.000 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், யூனிட்-1 | 12,000.000 |
| 22 | தரணி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ், யூனிட்-1 | 12,600.000 |
| 23 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், யூனிட்-1 | 19,278.000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | 12,194.750 |
| 25 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், யூனிட்-2 | 16,200.000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் | 20,170.712 |
| 27 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம் | 18,600.000 |
| 28 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், யூனிட்-2 | 13,000.000 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் | 13,756.000 |
| 30 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், பிரிவு-1 | 24,000.000 |
| 31 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், பிரிவு-2 | 17,333.725 |
| 32 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், பேட்டவாய்த்தலை | 7,000.000 |
| 33 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், புகளூர், கரூர் | 16,273.000 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி | 10,459.000 |
| 35 | தரணி சுகர்ஸ் -யூனிட் 2 | 9,599.660 |
| 36 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் | 38,000.000 |
| 37 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், குரும்பூர் | 10,000.000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ் (இயங்கவில்லை) | 0.000 |
| 39 | கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், பெரம்பலூர் | 6,000.000 |
| 40 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், யூனிட்-3, ஈரோடு | 4,000.000 |
| | மொத்தம் | 3,09,563.847 |
| | ஆக மொத்தம் | 5,72,586.769 |





## இணைப்பு-2

### வடிப்பாலைவாரியான சாராவி உற்பத்தி குறித்த விவரம்

(சாராவி ஆண்டு டிசம்பர் 2006 முதல் நவம்பர் 2007 வரை)

*(பத்தி 2.7-ஐப் பார்க்கவும்)*

| வ. எண். | வடிப்பாலையின் பெயர் திருவாளர்கள். | கரும்பஞ் சாற்று கசண்டு கையிருப்பு அளவு (மெட்ரிக் டன்களில்.) | கரும்பஞ் சாற்று கசண்டு சேமிப்பு அளவு (மெட்ரிக் டன்களில்) | சாராவி உற்பத்தி திறன் (லிட்டர் கோடி-களில்.) | சாராவி உற்பத்தி டிசம்பர் 2006 முதல் நவம்பர் 2007 வரை (லிட்டர் கோடிகளில்) |
|---|---|---|---|---|---|
| | கூட்டுறவு வடிப்பாலை நிறுவனங்கள் | | | | |
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் | 55,000 | 13,750 | 1.650 | 1.35 |
| 2 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் | 55,000 | 12,000 | 1.650 | 1.23 |
| | தனியார் வடிப்பாலை நிறுவனங்கள் | | | | |
| 3 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் | 82,500 | 20,625 | 1.980 | 2.26 |
| 4 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | 71,350 | 22,800 | 1.633 | 1.87 |
| 5 | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், அலகு-2 | 1,10,000 | 28,329 | 2.640 | 1.60 |
| 6 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 36,000 | 12,600 | 0.900 | 1.00 |
| 7 | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட் | 60,000 | 14,077 | 1.380 | 1.05 |
| 8 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 60,000 | 10,000 | 1.380 | 1.38 |
| 9 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 40,000 | 12,480 | 1.200 | 1.18 |
| 10 | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட் | 25,000 | 10,217 | 0.600 | 0.44 |
| 11 | சக்தி சுகர்ஸ் லிமிடெட் | 1,19,260 | 18,600 | 2.750 | 3.07 |
| 12 | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 1,06,000 | 26,700 | 1.800 | 1.64 |
| 13 | மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | 45,000 | 11,785 | 1.065 | 0.85 |
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 20,000 | 5,034 | 0.440 | 0.21 |
| | மொத்தம் | 8,85,110 | 2,18,997 | 21.068 | 19.13 |

## இணைப்பு-3

### 2007-2008 ஆம் ஆண்டில் விரிவாக்கத்திற்கு அனுமதியளித்த வடிப்பாலைகளின் விவரம்

(பத்தி 2.7-ஐப் பார்க்கவும்)

| வ. எண். | கூடுதல் உற்பத்தித் திறன் அனுமதியளிக்கப்பட்ட வடிப்பாலைகள். | தற்போதைய உற்பத்தித் திறன். | அரசால் விரிவாக்கம் செய்ய அனுமதியளிக்கப்பட்டது. | விரிவாக்கத்திற்குப் பின் உள்ள மொத்தத் திறன். |
|---|---|---|---|---|
| | திருவாளர்கள்— | (ஒரு நாளைய கிலோ லிட்டர்) | | |
| 1 | தரணி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் | 30.00 | 30.00 | 60.00 |
| 2 | சக்தி சுகர்ஸ் லிமிடெட் | 90.00 | 30.00 | 120.00 |
| 3 | சதர்ன் அக்ரிபுரேன் இன்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட் | 20.00 | 30.00 | 50.00 |
| 4 | பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | 54.70 | 12.80 | 67.50 |
| 5 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 45.00 | 15.00 | 60.00 |
| 6 | மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | 32.00 | 30.00 | 62.00 |
| 7 | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட் | 45.00 | 30.00 | 75.00 |
| 8 | பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 14.67 | 30.00 | 44.67 |
| | மொத்தம் | 331.37 | 207.80 | 539.17 |



## இணைப்பு-4

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

(பத்தி 2.8-ஐப் பார்க்கவும்)

#### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்

| ஆண்டு | உற்பத்தி அளவு (கோடி பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| 1996-1997 | 12.78 |
| 1997-1998 | 10.90 |
| 1998-1999 | 9.81 |
| 1999-2000 | 11.74 |
| 2000-2001 | 12.43 |
| 2001-2002 | 13.32 |
| 2002-2003 | 11.62 |
| 2003-2004 | 14.04 |
| 2004-2005 | 16.82 |
| 2005-2006 | 19.86 |
| 2006-2007 | 23.87 |
| 2007-2008 | 27.02 |
| பீர் | |
| 1996-1997 | 5.33 |
| 1997-1998 | 5.25 |
| 1998-1999 | 5.29 |
| 1999-2000 | 4.23 |
| 2000-2001 | 5.76 |
| 2001-2002 | 5.06 |
| 2002-2003 | 4.32 |
| 2003-2004 | 5.95 |
| 2004-2005 | 7.78 |
| 2005-2006 | 10.62 |
| 2006-2007 | 13.68 |
| 2007-2008 | 15.80 |









சென்னை-600 008
228390

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.